Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU


Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E-Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
TP - 0212225969
Hotline: 0212229497
(C/2278)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 மாசி 27 திங்கட்கிழமை (11.03.2013) பக்கங்கள் 20 ஓசை – 162
















# ஜெனிவாத் தீர்மான வரைபு அமெரிக்காவுடன் பேச்சு இல்லை

## அரசாங்கம் அறிவிப்பு



(ஜெனிவா).

ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள 19:2 தீர்மான வரைபு தொடர்பாக அமெரிக்காவுடன் பேச்சு நடத்தப்படமாட்டாது என அரசாங்கம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. இலங்கைக்கு எதிரான தீர்மானம் தொடர்பாக விவாதிக்கும் வகையில் ஐ.நா.விற்கான அமெரிக்கத் தூதுவர் எலீன் டோனஷே தலைமையில் கடந்த வெள்ளியன்று ஜெனிவாவில் நடைபெற்ற கூட்டத்தில் வைத்து ஐ.நா.விற்கான இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க, அரசின் மேற்கண்ட முடிவைத் தெரிவித்தார்.

இதில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் மற்றும், அவதானிப்பாளர் நாடுகளின் பிரதிநிதிகளும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

அமெரிக்கா முன்வைத்துள்ள தீர்மானத்தை அரசு முற்றாகவே நிராகரிப்பதாகவும், இது குறித்து அமெரிக்காவுடன் பேச்சு நடத்தும் எண்ணம் கிடையாது என்றும், அமெரிக்கப் பிரதிநிதி எலீன் டோனஹேயிடம் தெரிவித்து விட்டதாக ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும், நீதியற்ற, பக்கசார்புடைய, அநியாயமான, ஒத்துழைப்பு கொள்கைக்கு முரணான,

19 ஆம் பக்கம் பார்க்க

# அமெரிக்கப் பிரேரணையால் இந்தியாவிற்கும் அழுத்தம்

## என்கிறது மனித உரிமை ஆணைக்குழு

(கொழும்பு)

ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக, அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ள பிரேரணையால் இந்தியாவிற்கும் அழுத்தம் ஏற்படக்கூடியவாய்ப்புக்கள் உள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இராஜதந்திர மட்டத்தில் ற்போது விநியோகிக்கப்பட்டுள்ள உத்தியோகப்பற்றற்ற வரைபின் 11 - 4 சரத்து தொடர்பில் இந்தியா கவனம் செலுத்தியுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் பிரதீபா மஹானாம தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரேரணை ஏதேனும் ஓர் வகையில் நிறைவேற்றப்படும் பட்சத்தில் காஷ்மீர் பிரச்சினை குறித்தும் இந்த சரத்தை தொடர்புபடுத்திக்

19 ஆம் பக்கம் பார்க்க

# உரும்பிராயில் கோரவிபத்து; இளம்குடும்பஸ்தர் ஸ்தலத்தில் பலி

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

நேற்று இரவு 9.00 மணியளவில் உரும்பிராய் மருதனார் மடம் வீதியில் சந்திரோதயா பாடசாலைக்கு அருகில் உள்ள பெயர்ப்பலகை மீது வேகக் கட்டுப்பாட்டை இழந்த பல்சர் ரக மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் மோதி விபத்துக்குள்ளாகி

19 ஆம் பக்கம் பார்க்க

# அமெரிக்க தீர்மானம் குறித்து ஆராய விசேட குழு நியமனம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பிக்க உள்ள தீர்மானம் தொடர்பாக ஆராய்வதற்கு விசேட குழுவொன்றை அரசாங்கம் நியமித்துள்ளது. அமெரிக்காவின் உத்தேச தீர்மானம் குறித்து ஆராயப்படவுள்ளதுடன். நகல் தீர்மானம் ஆராயப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்தார். நியமிக்கப்பட்ட

19 ஆம் பக்கம் பார்க்க

# காணிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வடக்கில் விசேட அலுவலகங்கள்

வடமாகாண மக்களின் காணிப் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் விசேட அலுவலகங்களை காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு திறக்கவுள்ளது.

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் யாழ். மாவட்ட அலுவலகம், யாழ். மாவட்ட செயலகத்திலும், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான இணைந்த அலுவலகம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலும் திறக்கப்படவிருப்பதாக அமைச்சின் செயலாளர் அசோக பீரிஸ்

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை மீது நெருக்கடி இல்லையென்ற

# இந்திய மத்திய அரசுக்கு கருணாநிதி கண்டனம்



இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக அந்தநாட்டு அரசுக்கு நெருக்கடி கொடுக்கவியலாது என இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்சித் மற்றும் காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் அபிஷேக்சிங்வி கூறியிருப்பது தமிழ் மக்களிடையே மிகப் பெரிய வருத்தத்தையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது என தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார். நேற்று வெளியிட்ட அறிக்கையொன்றில் அவர் மற்ற நாடுகளின

19 ஆம் பக்கம் பார்க்க

# உயிரிழந்த ஆசிரியரின் பெயரும் இடமாற்றப் பட்டியலில் இணைப்பு

## இலங்கை தமிழர் ஆசிரியர்சங்கம் விசனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் அண்மையில் வழங்கப்பட்ட ஆசிரியர் இடமாற்றப் பட்டியலில், சில மாதங்களுக்கு முன்னர் மரணமடைந்த பெண் ஆசிரியர். ஒருவரின் பெயரையும் பதிலீட்டாசிரியர் இணைத்து வெளியிட்டிருப்பதானது மிகவும் வேதனையுடன், கண்டிக்கத்தக்க விடய்மென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது விசனத்தை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஆசிரியர் சங்கம் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இடமாற்றப்பட்டியலில் ஒரு ஆசிரியரின் பெயரை இரண்டு, மூன்று இடங்களில்

19 ஆம் பக்கம் பார்க்க

# இயல்பான சூழலில் கல்வி கற்க மாணவர்களை வளப்படுத்த வேண்டும்




மாணவர்களின் இயல்பான கல்வி வளர்ச்சிக்கு வளமான சூழலை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு பங்கம் விளைவிக்காத வகையில் வளங்களை ஏற்படுத்திக் கொடுப்பதோடு, மாணவர்களின் வளமான கல்விக்கு தேவையான அனைத்து வசதிகளும் நிறைவேற்றப்படும், பாடசாலை மாணவர்களிற்கு தேவையான வகுப்பறைத்தொகுதிகள் மேலும் அவர்களின் கல்வி வளர்ச்சியை ஊக்குவிப்பதற்குரிய பாடவிதான செயற்பாடுகள், போக்குவரத்திற்கு சிரமமாகக் காணப்படும் வீதிகள் போன்ற அனைத்து வசதிகளையும் படிப்படியாக நிறைவேற்றுவோம் என ஈ.பி.டி.பி யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார். யா-வட.இந்து ஆரம்பப் பாடசாலை வருடாந்த மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், எமது பிரதேச மக்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்த நிலையில் தற்போது தமது இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். இந் நிலையில் வரும்கால சந்ததியினருக்கு தற்போது மிகவும் அத்தியாவசியமாக உள்ளது மாணவர் பராய கல்விச்செயற்பாடே. எனவே எமது குடும்பங்களில் உள்ள இன்னல்களினை பிள்ளைகளின் மனதில் விதைத்து அவர்களின் கல்விச்செயற்பாட்டிற்கு பங்கம் விளைவிக்காது அவர்கள் இயல்பான ஓர் சூழலில் கல்விகற்க இடமளிக்க வேண்டும். அத்துடன் பாடசாலையின் அதிபரால் வைக்கப்பட்ட கோரிக்கைகளான போட்டோகொப்பி இயந்திரம், பான்ட் வாத்தியம் என்பனவற்றை வழங்கி வைக்க தயாராகவுள்ளேன் எனவும் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் எஸ்.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயகல்விப் பணிப்பாளரும், கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி ஈ.பி.டி.பி அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித்தலைவருமான ஐ.ரங்கேஸ்வரன், கோட்டக்கல்விப்பணிப்பாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# முதலாம் தவணைப் பரீட்சை துரிதகதியில் ஏற்பாடுகள்

(தெல்லிப்பழை)

வலிகாமம் வலய பாடசாலைகள் முதலாம் தவணைப் பரீட்சை நடத்துவதற்கான ஏற்பாடுகளை துரிதமாக முன்னெடுத்து வருகின்றன.

முதலாம் தவணைப் பரீட்சை வழமையாக பாடசாலைகளில் வினாத்தாள்களை தயாரித்து அவ்வினாத்தாள்கள் மூலமாக நடாத்தப்படுவது வழக்கமாகும்.

இந்த நடவடிக்கை இந்த முறையும் தொடர்கின்றது. அதற்காக பாடசாலைகள் வினாத்தாள்களை அச்சடித்தல் முதலான பணிகளை துரிதப்படுத்தியுள்ளன. எதிர்வரும் 22ஆம் திகதி முதலாம் தவணைப் பரீட்சை ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (17)

# குடும்பஸ்தர் மரணம்

(மந்திகை)

குடும்பஸ்தர் ஒருவர் மதுபோதையில் நஞ்சுக்கிழங்கு உட்கொண்டதில் மரணமானார். குடத்தனை வடக்கு குடத்தனையைச்சேர்ந்த கணபதிப்பிள்ளை பாலசுந்தரம் (வயது-60) என்ற கடற்றொழிலாளி ஒருவரே இவ்வாறு மரணமாகியுள்ளார்.

நேற்று முன்தினம் நஞ்சுக் கிழங்கை உட்கொண்டதனால் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் மரணமானார் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் நேற்று மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ,61)

# புலவர் பார்வதிநாதசிவம் மறைவு; கலைஞர் கருணாநிதி இரங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் பெரும் புலவர் மறைந்த பார்வதிநாதசிவத்திற்கு இரங்கல் தெரிவித்து கலைஞர் கருணாநிதி செய்திக் குறிப்பொன்றை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் தமிழ்ப்புலவர் வாரிசுகளில் ஒருவரான புலவர் பார்வதிநாதசிவம் தனது எழுபத்தியேழாவது வயதில் மறைந்த செய்தியை யாழ்ப்பாணம் மறவன்புலோ சச்சிதானந்தம் தொலை பேசியில் தெரிவித்த போது அந்தச் செய்தி கேட்டு தாம் மிகவும் அதிர்ச்சி அடைந்ததாக கலைஞர் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்தார்.

பார்வதிநாதசிவம் பெரும் புலவர் ம.க.வேற்பிள்ளையின் பேரன் எனத் தெரிவித்த கலைஞர், தனது தமிழ் ஆசானாகிய திருவாரூர் வித்துவான் பெரும்புலவர் தண்டபாணி தேசிகர், பெரும்புலவர் ம.க.வேற்பிள்ளையிடம் தான் தமிழ் பயின்றார் எனத் தெரிவித்தார்.

புலவர் பார்வதிநாதசிவம் மறைவு குறித்து தனது இரங்கலை அவரது குடும்பத்தாருக்கும் தனது இனிய நண்பர் சச்சிதானந்தம் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்வதாக கலைஞர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். (17)

# செய்தியாளர் மீது தாக்குதல் பத்திரிகையாளர் சங்கம் கண்டனம்

'வலம்புரி' செய்தியாளர் தாக்கப்பட்டமை தொடர்பில் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் கண்டனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

எமது நாட்டில் ஜனநாயகம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றை குழிதோண்டிப் புதைக்கவும் ஊடகங்களைப் பயமுறுத்தி காடைத்தனம் மூலம் ஊடகவியலாளர்களை நீதி வழியே செயல்படவிடாமல் தடுப்பதற்கு மேற்கொண்ட தாக்குதலே 'வலம்புரி' அலுவலக செய்தியாளருக்கு விழுந்த அடிகளாகும். இதை எமது சங்கம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இக் கோழைத்தாக்குதல்களைப் புரிந்தவர்களை உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தும்படியும் ஊடகவியலாளர்களின் மனப்பீதியை அகற்றுமாறும் எமது சங்கம் பொலிஸாரையும் அரசாங்கத்தையும் வேண்டுகிறது. என அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மாதகல் நுணசை வித்தியாலயம் மீண்டும் பழைய நிலையில் இயங்கும்

(மாதகல்)

மாதகல்நுணசை வித்தியாலயத்தை மீண்டும் பழைய நிலைமையில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இவ்விடயம் தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை விசேட கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் வலிகாமம் கல்வி வலய அதிகாரிகள் மற்றும் ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் அமைப்பாளரும் வலி. மேற்கு பிரதேசசபையின் எதிர்க்கட்சித்தலைவருமான சி.பாலகிருஸ்ணன் (ஜீவன்) வலி.தென்மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவரான ஜீவா, பாடசாலை அபிவிருத்திச் சபையினர். பழைய மாணவர்கள், மற்றும் நலன் விரும்பிகள் என பலரும் சமுகம் தந்திருந்தனர்.


இக்கூட்டத்தில் இப் பாடசாலையின் எதிர்காலம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. மீண்டும் பழைய நிலைமையில் அதாவது க.பொ.த. சாதாரணதரம் வரை வகுப்புக்கள் நடாத்தப்படும் என்று உறுதியான தீர்மானம் எடுக்கப்பட்டது.


இதற்காக இப்பாட சாலைக்கு தேவையான பௌதீக வளங்களை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா ஏற்பாடுகளைச் செய்வதற்கும் முன்வந்துள்ளார்.

# அன்ன சொர்ணதானம் விண்ணப்பம் கோரல்

அமரர் க. சின்னப்பு தம்பதிகளின் பெயரால் சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு வழங்கப்படும் அன்ன சொர்ண தானங்கள் பெற விரும்புவோருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ்விண்ணப்பதாரிகள் அளவெட்டியை தமது சொந்த ஊராகவும் இப்போது மீளக்குடியேறி இங்கு வசிப்பவராகவும், இருக்கலாம். கண்பார்வை இழந்தோர், கால், கை ஊனமுற்றோர், மனநிலை பாதிக்கப்பட்டோர், ஆண்பிள்ளைகள் இல்லாத கணவன் அல்லது மனைவியை இழந்த 60 வயதிற்கு மேற்பட்டோர், 15 வயதுக்குட்பட்ட தாய், தகப்பன், இருவரையும் இழந்து வேறு ஒருவரின் பராமரிப்பில் உள்ள சிறுவர்கள், நடந்து உலவமுடியாமல் படுக்கையில் கிடந்து உழலும் பராமரிப்பற்ற வயோதிபர்கள், விவாகம் செய்யாது தனித்து வாழும் 40 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் என்போர் தகுதியானவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்களை தத்துவக்காரருக்காக செயற்படும் திருமதி விக்னேஸ்வரி கந்தையா, ஓய்வுபெற்ற உப அதிபர்களான எம்.பத்மநாதன், க.அருளம்பலம் ஆகியோரிடம் ஏப்ரல் 2 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறு கோரப்பட்டுள்ளதோடு ஏப்ரல் 12ஆம் திகதி காலை 9 மணிக்கு அளவெட்டி கேணிக்கரை வைரவர் ஆலயத்தில் தெரிவு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.





திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் 9ஆம் திருவிழாவான இரதோற்சவம் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதன்போது விநாயகர் எழுந்தருளி அருள்பாலிப்பதையும் இரதபவனியையும் காணலாம். (137)

# சமூகம் சார் அறப்பணிகளையும் ஆலயங்கள் ஆற்றவேண்டும்

## சங்கானைப் பிரதேச செயலர் அ.சோதிநாதன்

(யாழ்.நிருபர்)

ஆலயங்கள் அறப்பணி நிலையங்களாக விளங்கவேண்டும். காரைநகரில் உள்ள ஆலயங்களில் மிகப்பழமை வாய்ந்த ஆலயமான வியாவில் ஐயனார் தேவஸ்தானம் கடந்த பல வருடங்களாக பல்வேறு சமூகப் பணிகளையும் மேற்கொண்டு வருவது பாராட்டுக்குரியது.

இவ்வாலயத்தின் அறப்பணிகள் ஏனைய ஆலயங்களுக்கு எடுத்துக்காட்டாகவும், முன் மாதிரியாகவும் அமைந்துள்ளன. என சங்கானை பிரதேச செயலர் அ.சோதிநாதன் தெரிவித்தார்.

வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தில் நடைபெற்ற விழிப்புலனற்றோருக்கு வாழ்வாதார உதவிப்பொருட்கள் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதம விருந்தினர் தொடாந்து பேசுகையில்,

இன்று பெரும்பாலான ஆலயங்கள் உரிமை, நிர்வாகம் போன்ற பிணக்குகள் தொடர்பாக நீதிமன்றத்தை நாடும் நிலை காணப்படுகிறது. இந்நிலையில் வியாவில் ஐயனார் தேவஸ்தானம் ஆலய திருப்பணிகளுடன், அறப்பணிகளையும் பெருமளவில் செய்து வருகிறது. பாலர் வகுப்பு முதல் பல் கலைக்கழகம் வரை ஏழை மாணவர் கல்வி கற்பதற்கு கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கி வருகிறது. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் ஆதரவற்றோருக்கு பல்வேறு வாழ் வாதார உதவிகளையும் வழங்கி வருகிறது. புற்று நோயாளர்களுக்கும் போஸாக்கு உணவுப்பொதிகளை வழங்கி வருகிறது.

இன்று விழிப்புலனற்றோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அவர்களது சுயதொழிலை ஊக்குவிக்கு முகமாக கதிரை பின்னுவதற்குத் தேவையான பிரம்பு மற்றும் பிளாஸ்டிக் வயர்களை அன்பளிப்பாக வழங்கியமை பாராட்டத்தக்க விடயம் எனக்குறிப்பிட்டார். (10)

# காரைநகர் ஈழத்து சிவன் ஆலய பங்குனி மாத மகோற்சவம்

(காரைநகர்)

காரைநகர் ஈழத்துச்சிதம்பரம் தின்னபுரம் சிவன் ஆலய பங்குனி மகோற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இவ்வுற்சவத்தில் 20 ஆம் திகதி புதன்கிழமை மாலை 8 மணிக்கு கைலாச வாகனத்திருவிழாவும், 23 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 8 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் இடம் பெறவுள்ளன.

24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 8 மணிக்கு பெரிய சப்பரத் திருவிழாவும், 25 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழா காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி 10 மணிக்கு சோமாஸ்கந்தர் பரிவார மூர்த்திகளுடன் தேருக்கு எழுந்தருளி பஞ்சரத பவனி இடம்பெறும்.

26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு நடேசர் உற்வமும், காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும், மாலை 7 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும்.

27 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு திருக்கல்யாண உற்வசம் நடைபெற்று சௌநதராம்பிகை சமேத சுந்தரரேஸ்வரப் பெருமான் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் திருவீதியுலா வருவதுடன் உற்சவ விழா முடிவுபெறும்.

உற்சவ காலங்களில் மாணிகக வாசகர் மடாலயத்தில் மகேஸ்வர பூஜையும் நடைபெறும் அத்துடன் ஆலயத்துக்குச் சென்றுவர பேருந்து சேவைகள் இடம்பெறும். (50)

# சுயதொழிலை ஊக்குவிக்க மகளிருக்கு கடனுதவி

(கோப்பாய்)

யாழ்ப்பாணம் பிரதேச அபிவிருத்தி வங்கி, சுயதொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு மகளிர்களுக்கு சுயதொழில் கடன்களை வழங்கி வருகின்றது.

இக்கடன்கள் சனசமூக நிலையங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் ஊடாக வழங்கப்பட்டு வருவதாக பிரதேச அபிவிருத்தி வங்கியின் முகாமையாளர், எஸ்.சிவலோகன் தெரிவித்துள்ளார்.

நாயன்மார்கட்டு பாரதிமன்ற சனசமூக நிலையம் சார்ந்த 46 மகளிர்களும், நல்லூர் சங்கிலியன் மன்றத்தைச் சேர்ந்த ஐம்பது மகளிர்களும், அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த 40 மகளிர்களும், சுயதொழில் முயற்சிக்காக கடன்பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு மகளிர்களுக்கும் ஐம்பதாயிரம் ரூபா வீதம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இவ் கடன்கள் வழங்கும் வைபவம் வைபவ ரீதயக அந்தந்த சனசமூக நிலையங்களில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (08)



கோப்பாய் பிரதேச செம்மண் தோட்டம் பிரதேசங்களில் பாதீனியச் செடிகள் வேகமாகப் பரவி வளர்ந்து வருகின்றன. நிர்வேலி , ஊரெழு கரந்தன் வீதியில் விவசாய நிலப்பரப்பில் பாதீனியச் செடிகள் வளர்ந்து வருவதைக் காணலாம். (08)

# தண்டப் பணம் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்து சபையில் (வடக்கு) 2004, 2005, 2006, 2007 ஆம் ஆண்டுகளில் இளைப்பாறிய ஊழியர்களது பணிக்கொடை தண்டப்பணக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. பணிக்கொடை தண்டப்பணக் கொடுப்பனவு தொடர்பாக நீதவான் நீதிமன்றத்தில் வழக்குப்பதிவு செய்தவர்கள் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சபை தலைமைக் காரியாலயத்திற்கு உரியவர்களுடைய அடையாள அட்டை மற்றும் வங்கிப் புத்த கத்துடன் தண்டப்பணக் கொடுப்பனவு பெறுவதற்கு தவறாது சமூகம் அளிக்குமாறு சபை பிராந்திய முகாமை யாளர் அறிவித்துள்ளார்.

# அறநெறிப் பாடசாலை புதிய கட்டடத்தில்

(கொடிகாமம்)

வரணி - சிட்டிபுரம் அம்பாள் ஆலய அறநெறிப்பாடசாலையானது இதுவரை காலமும் ஆலய வளவினுள்ளேயே நடைபெற்றுவந்தது.

இந்நிலையில் அறநெறி வகுப்புகள் தற்போது அறநெறி வகுப்புக்கு என ஆலயத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்ட கட்டடத்தில் 2013 ஜனவரி மாதம் தொடக்கம் இயங்கிவருகின்றது.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் மாலை 3 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பமாகி 5 மணி வரை நடைபெறுகின்றன. இதில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் பங்கு பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது. (130)

# தவணைப் பரீட்சை

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாண வலய மட்டப் பாடசாலைகளுக்கான முதலாம் தவணைப்பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதற்கான நேர அட்டவணை யாழ். வலயத்திற்குட்பட்ட தரம் 11 வகுப்புக்கள் உள்ள பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பிரதிக் கல்விப்பணிப்பாளர் பி.அருணகிரிநாதன் தெரிவித்துள்ளார். (10)

# அரச சேவை ஓய்வூதியர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம்

(மானிப்பாய்)

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவின் அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 12 ஆம் ஆண்டு பொதுக்கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு தெல்லிப்பளை பிரதேச செயலக மண்டபத்தில நடைபெறவுள்ளது.

வீ.வரதராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வலி.வடக்கு பிரதேச செயலர் கனகராஜா சிறிமோகனன் பிரதம விருந்தினராகவும், யாழ். மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய தலைவர் வீ.ஸ்ரீசக்திவேல் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இப்பிரதேச ஓய்வூதியர்கள் அனைவரையும் மேற்படி கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு சங்க செயலாளர் ஐ.நற்குணநாதன் கேட்டுக் கொண்டுள்ளார். (54,104)

# சீட்டிழுப்பில் வெற்றி

(குருநகர்)

தேசிய லொத்தர் சபையின் ஜயோதா கடந்த வியாழக்கிழமை (07.03.2013) குலுக்கப்பட்ட சீட்டிழுப்பில் யாழ் முகவர் திலகவதியூடாக விற்பனை செய்யப்பட்ட சீட்டுக்கு 50 ஆயிரம் ரூபா பரிசு கிடைத்துள்ளது.

பரிசுக்குரிய இலக்கங்களுக்குக் கீழே தரப்பட்டிருக்கும் கணனி இலக்கங்களான 703764885-8-08 என்னும் இலக்கத்தை ஒப்பிட்டுப் பார்த்து பரிசு தொகையைப் பெற்றுக் கொள்ளுமாறு முகவர் அறிவித்துள்ளார். (68)



சீமா நிறுவனத்தின் அனுசரணையுடன் வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பொருளியல் பாட பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு வவுனியா இறம்பைக்குளம் மகளீர் மகாவித்தியாலய அக்குவைனஸ் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோது கொழும்பு பல்கலைக்கழக பொருளியல்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் ஒருவர் கருத்துரை வழங்குவதையும் கலந்து கொண்ட மாணவர்கள், ஆசிரியர்களையும் காணலாம். (160)

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினமுரசு THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## கூட்டமைப்பினரின் சோகநிலைமை!

ஜெனிவாவை வைத்துக் கூத்துக்கட்டிய கடந்த நாலு மாதத் திருவிழா ஏறக்குறைய முடிவடையும் கட்டம் நெருங்கிவிட்டது. என்னவாவது நடக்கும் என்று இதுவரை கொடுத்த ஏமாற்றுகளை உணர்ந்து மக்கள் கேள்வி கேட்கும் முன் அடுத்த திருவிழாக் கூத்துக்களைக் கண்டுபிடித்து அறிவிக்க வேண்டிய அவசரத் தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உண்டு.

இன்னும் எத்தனையாவது வருஷத்தில் நம் பிரச்சினை தீரும்... மக்கள் பழையபடி அன்னவாரமில்லாத ஒரு வாழ்க்கைக்குச் செல்வதற்கு வேண்டிய அந்தத் தீர்வுத் திட்டத்தை இனி எந்த மகாநாட்டில் வைத்துச் சர்வதேசம் அறிவிப்பதாக முடிவெடுத்துக் கலைந்திருக்கிறது என்பதையெல்லாம் ஜெனிவாவிலிருந்து திரும்பும் கூட்டமைப்புத் தலைவர்கள் சொல்வார்கள் என்று மக்கள் எதிர்பார்ப்பார்கள் அல்லவா?

சோகம் என்னவென்றால், அடுத்த செப்ரெம்பருக்குள் வடக்கு மாகாசபைத் தேர்தல் அறிவிக்கப்படுமாக இருந்தால், அடுத்த வருட மார்ச் மாத ஜெனிவாத் திருவிழாவைச் சொல்லி வாக்குக் கேட்க முடியாது. குறைந்தபட்சம் தேர்தல் முடிவடைந்த உடன் ஒக்டோபரிலோ நவம்பரிலோ சர்வதேசம் இன்னுந் திறமான ஒரு பொறியைச் செய்யப்போகிறது என்று சொல்லியே மக்களை உணர்ச்சிகரமாகத் திரட்ட முடியும்.

ஆனால், இந்த ஜெனிவாவில் சர்வதேச நாடுகள் ஏமாற்றிவிட்டது மட்டுமல்லாமல், அடுத்த நாலைந்து மாதங்களுக்குள் கூட்டமைப்பை அமெரிக்காவுக்கோ லண்டனுக்கோ டெல்லிக்கோ சும்மா கூப்பிட்டுக் கதைத்து அனுப்பினாலே இங்கு அதை வைத்து ஏதாவது நம்பிக்கைகளைப் பரவவிட்டு வெல்லப் பார்க்கலாம். அதையும் வெளிநாடுகள் செய்வார்களா என்ற எந்த உத்தரவாதமுமின்றி இருப்பது எவ்வளவு அவஸ்தை என்பதை கூட்டமைப்பினரின் நிலையிலிருந்து "உணர்ந்து" பார்த்தால் தான் விளங்கிக்கொள்ள முடியும்.

வரப்போகும் தேர்தலில் தமிழ் மக்கள் அவர்களை ஏகப் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்து ஏன் அனுப்பவேண்டும் என்று சொல்வதற்கு, தமிழ் மக்கள் நம்பக்கூடிய விதமாக ஒரு ஏமாற்றைக் கண்டுபிடிப்பதென்பது சாதாரணமல்ல. பிசுபிசுத்துப் போன இந்த ஜெனிவாத் திருவிழாவைத் திட்டவும் முடியாது. திட்டினால் சர்வதேசம் குறித்த அடுத்த நம்பிக்கையை எதிலிருந்து உருவாக்குவது? ஜெனிவாவிலிருந்து திரும்பும் கூட்டமைப்பினரின் இந்த "சோகநிலைமை" புரிந்துகொள்ளக் கூடியதே.

தமிழ்மக்களின் பிரதானமான அரசியலுரிமைக் கோரிக்கைகள் பற்றி தெளிவான, திட்டவட்டமான எதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பேசுவதில்லை. பொத்தாம் பொதுவாக அரசின் மீதான பகையுணர்ச்சியைத் தூண்டிவிடும் விதமாக குடியேற்றம், நில ஆக்கிரமிப்பு, இராணுவ விரிவாக்கம், உயர்பாதுகாப்பு வலய விஸ்தரிப்பு, அரசு தீர்வுக்குத் தயாரில்லை போன்ற முழக்கங்களை வீசிக்கொண்டிருந்தால் போதும் என்பது அவர்கள் நிலை.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்வதற்கு, இலங்கையின் சகல தரப்பிலுமுள்ள முற்போக்கு ஜனநாயக சக்திகளும், ஏனைய சிறுபான்மை சமூகத் தலைமைகளும் வெளிநாடுகளும் நியாயமானதெனக் கருதக் கூடிய ஓர் அரசியற் கோரிக்கைத் திட்டத்தை வெளியிட அவர்களால் முடியாமலிருப்பதை மறைக்கவே இத்தகைய உணர்ச்சி ஆவேச அரசியலுக்குள் மக்களை மூழ்கடித்திருக்கிறார்கள்.

காரணம், தமிழ்மக்களின் அரசியலுரிமைகளை வழங்கக் கூடிய தீர்வும் திட்டமும் இதுதான் என்று ஒன்றைச் சொல்லக் கூடிய ஒத்த கருத்தோ ஒற்றுமையோ அவர்களிடம் இல்லை என்பதே உண்மை. தங்களுக்குள்ளே ஒற்றுமையாக ஒரு முடிவெடுத்துச் செயற்படும் திராணியின்மையை மறைக்கவே தீர்வுப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பிவிடக் கூடிய, அதன் பக்கப் பிரச்சினைகளை வெறும் கோஷங்களாக முன்வைத்து வருகிறார்கள், அவ்வளவுதான். - ஆசிரியர்

# அமெரிக்க நகல் பிரேரணை குறித்து கூட்டமைப்பு மௌனம் சாதிப்பது ஏன்?

## பொய்த்துப்போன எதிர்பார்ப்புக்கள்

(கொழும்பு)

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில், இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்படும் இறுதி வரைவு வலுவானதாக அமையுமென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்ப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 22 ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் இடம்பெற்று வருகின்றது. இந்தக் கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்கு எதிரான பிரேரணையின் நகல் அமெரிக்காவால் கடந்த வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளுக்கு கையளிக்கப் பட்டுள்ள பிரேரணையின் நகலில், இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்த வேண்டும் என்று நேரடியாக எதுவும் தெரிவிக்கப்படாததுடன், பிரேரணையை நடைமுறைப்படுத்த நீண்டகால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் கேட்டபோது, அமெரிக்காவால் தற்போது பிரேரணையின் நகலே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாகத் தெரிவிக்க விரும்பவில்லை.

ஏனெனில் இது நகல்தான். இது உறுப்பு நாடுகளுக்கு வழங்கப்பட்டு அவர்களால் மாற்றியமைக்கப்படலாம். அதன் பின்னரே இறுதிப் பிரேரணை சமர்ப்பிக்கப்படும். அந்த இறுதி பிரேரணை இலங்கைக்கு எதிரான, வலுவுள்ளதொன்றாக அமையும் என்றே நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இறுதிப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் எங்களின் கருத்துகளை பகிரங்கமாகத் தெரிவிப்போம் என்றார்.

# இன்னும் தணியாத சர்ச்சை; சூடு கிளப்புகிறது ஹலால் விவகாரம்

(கொழும்பு)

ஹலால் சான்றிதழை தற்காலிகமாக இரத்துச் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளதாக ஜம்மியத்துல் உலமா சபை தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் ஜம்மியத்துல் உலமா இன்று விசேட பத்திரிகையாளர் மாநாட்டை நடத்தவுள்ளது. ஹலால் சான்றிதழ் தொடர்பில் தற்போது சர்ச்சை எழுப்பப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் ஹலால் சான்றிதழை இரத்துச் செய்ய அல்லது தற்காலிகமாக இரத்துச் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளதாக ஜம்மியத்துல் உலமா தரப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

பாதுகாப்பு அமைச்சுடன் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கூட்டத்தின்போது இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ள பொதுபலசேனா அமைப்பு, கடந்த வெள்ளிக்கிழமை பாதுகாப்பு அமைச்சுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது ஹலால் சான்றிதழை விலக்கிக் கொள்ளுமாறு ஜம்மியத்துல் உலமாவிடம் பாதுகாப்பு அமைச்சு கேட்டுக்கொண்டது.

எனினும் அதனை ஜம்மியத்துல் உலமா ஏற்றுக்கொண்டதா? என்பது குறித்து தெரிய வரவில்லை என்று குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஜம்மியத்துல் உலமாவின் இணைப்பாளர் அஸ்லாம் சுபைர், ஹலால் சான்றிதழை விலக்கிக் கொள்ளும் முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களுடன் பேச்சு நடத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# அதிவேக தபால் பொதிகள் முடங்கிக் கிடப்பது ஏன்?

## போர்க்கொடி தூக்குகிறது தொழிற்சங்கம்

(கொழும்பு)

தபால் திணைக்களத்திற்குள் மீண்டும் பிரச்சினை ஏற்பட்டுள்ளதென தபால் தொழிற்சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அதிவேக பொருள் மற்றும் கடித விநியோகத்தில் தற்போது பிரச்சினை ஏற்பட்டுள்ளதென இலங்கை தபால் சேவை சங்கத்தின் தலைவர் ஜயந்த விஜேசிங்க தெரிவித்தார்.

விமான தபால் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு ஒப்படைக்கப் பட்டமை இதற்குக் காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் பொருட்கள் மற்றும் தபால்கள் உரிய நேரத்துக்கு விநியோகிக்கப்படாது குவிந்து காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார். இது குறித்து தபால் மா அதிபர் ரோஹண அபேரத்னவிடம் வினவியபோது.

எதிர்வரும் இரண்டு தினங்களில் இப்பிரச்சினைக்கு குறித்த நிறுவனம் தீர்வு காணாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பதிலளித்தார்.

# தங்காலைப் படுகொலை; அரசுக்கு தீராத சங்கடம்

(கொழும்பு)

தங்காலையில் பிரிட்டிஷ் பிரஜை கொல்லப்பட்ட சம்பவம் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

கொழும்பில் இடம்பெறவிருக்கும் பொதுநலவாய மாநாட்டின் போதும் இந்த விவகாரம் மேற்கிளம்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் அமர்வை பகிஷ்கரிக்குமாறு விடுக்கப்பட்டு வரும் கோரிக்கைக்கு பிரித்தானிய வெளியுறவுத்துறை தெரிவுக்குழு ஆதரவு வெளியிட்டுள்ளது.

பிரித்தானிய எதிர்க்கட்சியான தொழில்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிமொன் டன்ஸ்ஷேக் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவின் வெளியுறவுத்துறை தெரிவுக்குழு, அந்த நாட்டின் மூன்று பிரதான கட்சிகளின் 11 நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருக்கின்றது.

இந்தக்குழு பிரித்தானியாவின் வெளியுறவு செயற்பாடுகள், நிதிகள் போன்ற விடயங்களை கண்காணிக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயத்தில் பிரித்தானிய அரசாங்கம் இன்னும் உரிய கவனத்தைச் செலுத்தவில்லை என்று சிமொன் டன்ஸ்ஷேக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், பிரித்தானிய அரசாங்கம் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை பகிஷ்கரிக்க வேண்டும் என்று வெளியுறவுக்குழு கோரியுள்ளதாக டன்ஸ்ஷேக் குறிப்பிட்டுள்ளார்.

2011 ஆம் ஆண்டு இலங்கையின் தங்காலையில் பிரித்தானிய பிரஜை கொல்லப்பட்டதன் விசாரணை முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்காக கடந்த வாரம் இலங்கை சென்றிருந்த கொல்லப்பட்டவரின் சகோதரருடன் டன்ஸ்ஷேக்கும் இலங்கைக்கு சென்றிருந்தார்.



# இலங்கை அரசு இந்தியாவின் உதவியைப் பெற விரைவில் தீர்வை வைக்கச் சம்மதிக்க வேண்டும்

கலாநிதி தயான் ஜயதிலக

இந்த மாதம் ஜெனிவாவில் இலங்கை எதிர்கொள்ளவிருக்கும் பிரதான சவால்கள் மூன்று வகையாக உள்ளன. வாக்கெடுப்பு நடத்தும் சாத்தியம் இடம்பெற்று, அந்த வாக்கெடுப்பில் தோல்வி காண்பது, சிறிதளவு வாக்குகளைப் பெறும் சாத்தியம் உள்ளது, அல்லது ஒரு வருடத்துக்கு முன்பு 2012 மார்ச்சில் பெற்ற வாக்குகளைக் காட்டிலும் அதிகளவு பெரும்பான்மையால் வாக்களிப்பில் தோல்வி காண்பது, உண்மையில் ஒரு நிபந்தனையற்ற சரணடைதலைப் போன்ற நியாயமற்ற அல்லது சமநிலையற்ற ஒரு வகுப்பாளர்களால் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் தப்புக்கணக்குகளால், அந்தப் பிரதிநிதிகளால் சரியாகச் செயற்பட முடிவதில்லை.

கடந்த ஏப்ரலில் பொதுப்பதிவுகளைப் பற்றி நான் வாதிட்டதின்படி, மிகவும் மோசமான ஒரு சூழ்நிலையிலிருந்து, தாராளமயமாக்கல் மற்றும் ஜனநாயகத்துக்கான பாதைகளை அதிகம் திறந்து விட்டதன் மூலம் மியன்மார் எப்படி நழுவியது, என்பதை பார்த்து அரசாங்கம் பாடம் கற்க வேண்டும். மாறாக குற்றப் பிரேரணை மூலமாக இலங்கை அரசாங்கம் எதிர்த் திசையில் சென்றது.

உலகத்தின் பொது அபிப்பிராயத்தை ஏமாற்றலாம் அல்லது உலக சமூகத்தில் உள்ள ஒவ்வொரு நிருவாகமும் தங்களைப் போன்றது என்றும் அவை பதிலளிப்பதும் அதே வகையான ஊக்குவிப்பு அல்லது எதிர்ப்பு மூலமாகத்தான் என்றும் அரசாங்கம் கருதக்கூடாது.

அரசாங்கம் தங்களுக்கு சௌகரியமான கலாசார வலயத்துக்கு வெளியில் வெற்றிகரமாக தொடர்பு கொள்வதற்கு கற்றுக்கொள்ள வேண்டும், ஏனெனில் சர்வதேச முறைகள், உலகளாவிய பிரபஞ்ச நெறிகள் மற்றும் மதிப்புகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன, மற்றும் இவை ஜக்கிய நாடுகள் சபையின் அங்கமான மனித உரிமைகள் சபை என்பனவற்றில் சற்று கூடுதலாகவே உள்ளன.

தங்களது முரட்டுத்தனமான பிரசாரங்கள் மற்றும் மறுப்புரைகள் என்பனவற்றுக்கு தங்கள் எல்லைகளுக்கு வெளியில் மற்றும் அநேகமாக அவர்களது வாக்கு வங்கிக்கு வெளியில் எந்தவித பெறுமதியும் கிடையாது என்று அர்த்தமாகும், மற்றும் எந்தக் கருத்திலும் அதை ஒரு தார்மீக வெற்றியாக விளங்கிக் கொள்ள முடியாது.

அரசாங்கம் அதன் நண்பர்களின் கருத்தையும் மற்றும் அறிவுரைகளையும் தேடுவதற்கு அறிந்திருக்க வேண்டும், அதைக்கொண்டு பொறுமையாக சர்வதேசத்தின் ஆதரவை கட்டியெழுப்ப அல்லது திரும்பக் கட்டியெழுப்ப வேண்டும். அரசாங்கம் , தனது வெறித்தனமான ஒருதலைப்பட்ச உள்நாட்டு செயற்பாடுகள் காரணமாக, பல வெளிப் பிரச்சினைகள் கிளைவிடும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் ஆசியாவின் ஆதரவையோ அல்லது கூட்டுச்சேரா இயக்க நாடுகளின் ஆதரவையோ அல்லது பெரும்பான்மையான மூன்றாம் உலகத்தின் ஆதரவையோ இந்தியாவின் உதவியின்றி பெறமுடியாது என்பதை அரசாங்கம் உணர வேண்டும்.

மற்றும் இந்தியாவில் தமிழ் நாடு தீவிர விரோதப் போக்கை நமக்கு எதிராக கையாண்டு வருகிறது. இந்தியாவின் ஆதரவை நாங்கள் வெற்றி கொள்வதற்கான ஒரே வழி டில்லியின் கரங்களைப்பலப்படுத்துவதேயாகும்.எனவே அதனால் தமிழ்நாட்டை சமப்படுத்த முடியும். அதனை, தமிழர் பிரச்சினைக்கான விரைவான ஒரு அரசியல் தீர்வினை, தமிழர்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளான, பிரதானமாக ரி.என்.ஏ உடன் எங்கள் அரசியலமைப்பில் ஏற்கனவே உட்பட்டுள்ளதன்படி அதிகாரப் பகிர்வினை நடைமுறைப்படுத்துவதன் அடிப்படையில் வெற்றிகரமான பேச்சுவார்த்தை ஒன்றை நடத்துவதன் மூலமே செய்ய முடியும்.

இந்தியா இல்லாத ஒரு அணி சேராத ஒரு தெரிவு இலங்கைக்கு கிடையாது, தமிழர்களுடன் இணைந்த ஒரு தீர்வு இல்லாமல் இந்தியாவுக்கு வேறு தெரிவு எதுவுமில்லை.

இந்த மார்ச்சில் நடக்கும் வாக்கெடுப்பில், கடந்தமுறை 2012இல் கிடைத்ததை விட மிகப் பெரும்பான்மையுடன் நாம் தோல்வியுற்றால், அது வளர்ந்துவரும் எமது பலவீனத்தையும் மற்றும் தனிமைப்பட்டிருப்பதையுமே காட்டும்.

மோசமரன விடயமாக நடக்கக் கூடியது ஒரு சர்வதேச விசாரணை அமைக்கப் படுவதேயாகும், ஆனால் இலங்கைக்காக ஐ.நா. விசேட பிரதிநிதி ஒருவரை நியமிப்பதும்கூட குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கு அமைய ஒரு புதிய பந்து விளையாட்டை ஆரம்பிப்பதுபோல ஆகிவிடும். எப்படியாயினும் திரும்பதிரும்ப கொண்டுவரப்படும் இப்படியான பிரேரணைகள் மற்றும் தோல்விகள், என்பன வாக்களிக்கும் தருணத்தில் இலங்கையை பாதிக்கும், படிப்படியாக ஒரு சுற்றிவளைப்பை உருவாக்கி, அரசை மூச்சுத்திணற வைத்துவிடும். இன்னமும் அது ஒரு முடிவான விளையாட்டாக இல்லாவிட்டாலும்கூட, இவைகள்தான் அப்படியான விளையாட்டின் முடிவுக்கு இட்டுச் செல்லும் படிக்கட்டுகள்.

இலங்கைக்கு எதிரான நகர்வுகள் பல வழிகளில் உள்ளன : ஐ.நா.வின் செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவின் அறிக்கை (தருஸ்மன் அறிக்கை), மற்றும் நியுயோர்க்கை சேர்ந்த சாள்ஸ் பெற்றியின் அறிக்கை, மற்றும் அவைகளின் தொடர்ச்சிகள், ஜெனிவாவில் உள்ள அநேகமான வாக்குகள், பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு பற்றிய பிரசாரங்கள், மற்றும் இவை அனைத்தையும் விட தீவிரமானதாக தமிழ் நாட்டின் செயற்பாடுகள், அதன் ஊடாக இலங்கையை பற்றி உருவாகப் போகும் இந்திய அரசியல் நிற மாலை, என்பன 2014ஆம் ஆண்டு நடக்கவிருக்கும் இந்திய பொதுத் தேர்தலின் போதும், மற்றும் அதன் பின்னும், பல வித்தியாசமான சூழ் நிலைகளை தோற்றுவிக்கப் போவதை காணக்கூடியதாக இருக்கும். பல தட மூலோபாயத்தை கொண்ட இந்த தடங்கள் யாவும் ஒருங்கிணையும்போது, என்றாவது ஒருநாள், ஒருவேளை வெகு விரைவிலேயே, நாங்கள் ஒரு இராஜதந்திர வகையான ஆனையிறவிலோ அல்லது அதைவிட மோசமான இராஜதந்திர வகையான நந்திக்கடலிலோ சிக்கியிருப்பதைக் காணப் போகிறோம்.

2000ஆம் ஆண்டில் புலிகள் ஆனையிறவை விட்டு எங்களை கட்டாயமாக வெளியேற்றியபோது, பிரபாகரனும் மற்றும் எல்.ரி.ரி.ஈ யும், ஒரு தசாப்தம் கடந்து செல்வதற்கு முன்பே தாங்கள் நந்திக்கடலில் சுற்றி வளைக்கப் படுவோம் என்று நினைத்தார்களா?

விட்டுக்கொடுப்புக்கான சாத்தியம் தென்படுகிறது, அது தேசிய இறையாண்மையைப் போன்ற நமது முக்கிய நலன்களைப் பாதிப்படையச் செய்யும்.

இலங்கைக்கு இத்தகைய ஆபத்துக்களை ஏற்கவேண்டிய சாத்தியம் ஏற்படாது, என நான் நம்புகிறேன். ஆனால் அதற்கு மாறாக 2012 மார்ச்சில் நடந்த வாக்கெடுப்பின் போது நான் மற்றவர்களை திடீரென சந்தித்து, ஆதரவு திரட்டியதில் ஈடுபட்டிருந்ததால், நான் நம்பிக்கையற்ற ஒரு நிலையில் இருப்பதையும் ஒப்புக்கொள்கிறேன். கடந்த வருடம் பெற்றதைவிட குறைவான வாக்குகளை நாம் பெறமாட்டோம் என நான் நினைக்கிறேன், 2012 மார்ச்சில் இதே ராஜதந்திர அரங்கான ஐநா மனித உரிமைகள் அரங்கில் 2009 மே மாதக் கடைசியில் நாம் பெற்ற நாடகீயமான இராஜதந்திர வெற்றிக்கு நேர்மாறான ஒரு நிகழ்வு



இடம்பெற்றதைக் கண்டோம். இந்த வாக்குகள் எங்களது எதிரிகளான, புலம்பெயர் சமூகத்திலுள்ள மற்றும் தமிழ்நாட்டிலுள்ள தமிழ் ஈழ பிரிவினைவாதிகள் வலையமைப்பு, என்பனவற்றால் வழங்கப்பட்டவை அல்ல என்று நான் நம்புகிறேன், எங்களது சர்வதேச நிலைப்பாட்டின் வளர்ச்சி தேய்வடைந்து வருவதே அதற்கான சான்று.

இதற்கான பழியை எங்கள் நிரந்தரப் பிரதிநிதிகள், அல்லது ஜெனிவாவுக்கான இலங்கைத்தூதுக் குழுவினர்மீது போடுவது நியாயமானது என்று நான் கருதவில்லை, ஏனெனில் அவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது, கொழும்பினால் வழங்கப்படும் பெரும்பகுதி தெரிவுகளிலேயே தங்கியுள்ளது. அது அரசியல்வாதிகளோ அல்லது அதிகாரிகளோ யாராக இருந்தாலும், அதில் முக்கியமானது என்னவென்றால் சபையின் அங்கத்தவர்களை இணங்க வைப்பதற்கு ஏற்றபடி நம்பகத்தன்மையுடன் பேச வேண்டும். எனினும் எங்கள் கொள்கை என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும். எப்படியாயினும் ஒரு பொய்யை அல்லது மறுப்பை திரும்பத்திரும்ப பலமுறை உரத்துக் கூறினாலும் நம்பிக்கை ஏற்படாது, மற்றும் சர்வதேச சமூகத்தின் ஆதரவை வெல்வதற்கு நம்பகத்தன்மை மிகவும் முக்கியம் என்பதை அரசாங்கம் அறிய வேண்டும்.

அரசாங்கம் முன் எச்சரிக்கையாக விடுக்கப்படும் சமிக்ஞைகளை கவனிப்பதற்கு அறிந்திருக்க வேண்டுமே தவிர அதை அறிவிப்பவர்கள் மீது பழி சொல்லக்கூடாது. 2009இல் எங்களுக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள், ஏன் எங்களுக்கு எதிராக வாக்களித்தார்கள் அல்லது நடுநிலை வகித்தார்கள் என்கிற கேள்வியை அரசாங்கம் தன்னைத்தானே கேட்டுக் கொள்ள வேண்டும். 2009இல் அல்லது 2012இல் எங்களுக்கு எதிராக வாக்களித்தவர்கள் நடுநிலை வகிப்பார்களானால் அது எங்களுக்கு ஒரு தார்மீக வெற்றி. ஆனால் 2009இல் எங்களுக்கு சாதகமாக வாக்களித்தவர்கள், 2012 அல்லது2013இல் நடுநிலை வகித்தால் அது எங்களைவிட்டு விலகிச் செல்கிறது

**அரசாங்கம் அதன் நண்பர்களின் கருத்தையும் மற்றும் அறிவுரைகளையும் தேடுவதற்கு அறிந்திருக்க வேண்டும். அதைக்கொண்டு பொறுமையாக சர்வதேசத்தின் ஆதரவை கட்டியெழுப்ப அல்லது திரும்பக் கட்டியெழுப்ப வேண்டும். இந்தியா இல்லாத ஒரு அணி சேராத ஒரு தெரிவு இலங்கைக்கு கிடையாது. தமிழர்களுடன் இணைந்த ஒரு தீர்வு இல்லாமல் இந்தியாவுக்கு வேறு தெரிவு எதுவுமில்லை.**

## தரமற்ற குடிநீர் விநியோகம் மூன்று நிறுவனங்களுக்கு வழக்கு



(கொழும்பு)

உரியதரமின்றி குடிநீர்ப் போத்தல்களை விநியோகித்த மூன்று நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

உரிய தரமற்ற சுமார். ஐயாயிரம் குடிநீர்ப் போத்தல்கள் சந்தையிலிருந்து தமது பொறுப்பிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக, பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் செயலாளர் செனரத் பண்டார தெரிவித்துள்ளார்.

குடிநீர்ப் போத்தல்களை விற்பனை செய்வதற்காக சுகாதார அமைச்சிடமிருந்து தர குறிப்பீட்டை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன் அது ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.



## வரையறைகளை மீறுகிறது கூட்டமைப்பு சட்ட நடவடிக்கைக்கு தயாராகிறது அரசு

(கொழும்பு)

அரசுக்கு எதிரான பரப்புரைகளை நாட்டுக்கு வெளியில் மேற்கொள்ளும் கூட்டமைப்பு எம்.பி.க்களின் நடவடிக்கைகள் மிக உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் வரையறைகளை மீறினால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயாராகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை கைது செய்ய முயற்சிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. தேசத் துரோக செயற்பாடுகளில் ஈடுபடுவோரை கைது செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள தீர்மானத்திற்கு ஆதரவளிக்கும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் ஜெனிவா சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த தரப்பினர் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு பங்கம் நேரும் வகையில் பகிரங்கமாக கருத்துக்களை வெளியிட்டிருந்தால் அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்படுகிறது.

அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக இரகசியத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நாட்டுக்கு எதிராக செயற்பட்டு நாடு திரும்புவோரை விமான நிலையத்திலேயே வைத்து கைது செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்பின் ஆறாம் சரத்தின் அடிப்படையில் நாட்டுக்கு எதிராக செயற்படுவோரை கைது செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கைக்குள் வேறும் ஓர் இராச்சியத்தை உருவாக்குதல் தொடர்பில் கருத்து வெளியிடல், அதற்கான பணம் செலுத்துதல், ஒத்துழைப்பு வழங்குதல் போன்ற அனைத்து விடயங்களுமே சட்டத்திற்கு விரோதமானவை.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் அவர் நாடாளுமன்ற உறுப்பினராயின், நாடாளுமன்ற உறுப்புரிமை ஏழு ஆண்டுகளுக்கு இடைநிறுத்த முடியும். இதேவேளை, வேறு நாடொன்றிற்கு சென்று தங்களுக்கு விரும்பியதை தெரிவிக்கும் உரிமை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், தனிப்பட்ட நபர்களுக்கும் காணப்படுவதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும், நாட்டின் பௌதிக ஒருமைப்பாட்டுக்கு பங்கம் ஏற்படும் கருத்துக்களை வெளியிட உரிமை கிடையாது. ஜெனிவாவில் ஆற்றப்படும் உரைகள் மற்றும் வெளியிடப்பட்டு வரும் கருத்துக்கள் தொடர்பில் அரச புலனாய்வுப் பிரிவினர் கண்காணித்து வருவதாக தெரிவித்துள்ளார்.



## ஜெனிவாவில் இலங்கை அரசு தோல்வி காண்பது நிச்சயம்

(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமைப் பேரவையில், மாநாட்டில் அமெரிக்காவினால் கொண்டுவரப்படும் பிரேரணை தொடர்பாக வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அதில் இலங்கை தோல்வியைத் தழுவும் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தீர்மானம் நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளன. அமெரிக்காவுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண அரசாங்கம் முயற்சிக்கின்றது. இந்த அரசாங்கம் பழங்குடி அரசாங்கங்களைப் போனறு செயற்படுகின்றது.

இராஜதந்திர ரீதியில் நடவடிக்கை எடுக்கவில்லை அத்துடன் நவநீதம்பிள்ளை பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமென கோரிய போது அதனை உதாசீனம் செய்து அமைச்சர் சமரசிங்க நாடு திரும்பினார். அவ்வாறே எமது அமைச்சர்களின் இராஜதந்திர அணுகுமுறைகளாகும்.

மனித உரிமைப் பேரவை தீர்மானம் தொடர்பில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கில் பிரதிநிதிகளை அமெரிக்காவிற்கு அனுப்பி வைதுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

அமெரிக்காவுடன் டீல் பேசிக் கொண்டே, சோசலிச தலைவர் சாவேஸின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்வதற்காக அமைச்சர்களை பல கோடி ரூபா செலவழித்து அனுப்பி வைக்கின்றது. இதன் மூலம் நாட்டு மக்களின் பணமே விரயம் செய்யப்படுகின்றது என அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## மனித உரிமைகள் விவகாரம் இனி வெளிவிவகார அமைச்சின் கீழ்?

மனித உரிமைகள் விவகாரத்தை வெளிவிவகார அமைசசின் கீழ் கொண்டுவருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

மனித உரிமைகளுக்கென தனியான அமைச்சு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் அந்த விடயதானங்கள் ஒரு அமைச்சின் கீழ் கொண்டுவரப்படாத நிலையில் அந்த விடயதானங்களுக்கு பொறுப்பாக அமைச்சர் மகிந்த சமரசிங்க செயற்பட்டார்.

இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் சர்வதேச ரீதியில் முகம் கொடுத்துக் கொண்டிருகின்ற சவால்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு உடனுக்கு உடன் உத்தியோகபூர்வமாக பதிலளிக்கும் வகையிலே மனித உரிமை விவகாரம், வெளி விவகார அமைச்சின் கீழ் கொண்டு வருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## மனித உரிமைகளை மிதிக்கிறது அமெரிக்கா சர்வதேசம் கண்டுகொள்ளாதது ஏன்?

(கொழும்பு)



அமெரிக்காவின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது. இலங்கையின் அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படையினரால் பொதுமக்கள் கொல்லப்பட்டமையை அவர் இந்தக் குற்றச்சாட்டுக்காக சுட்டிக் காட்டியுள்ளார். எனினும் பெரும்பாலான நாடுகள் அமெரிக்காவின் செயற்பாடுகளை கண்டுகொள்ளாமல், இலங்கை போன்ற நாடுகள் மீதே குற்றச்சாட்டுக்களை சுமத்துவதாக யாப்பா குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிராக ஜெனிவா மாநாட்டில் அமரிக்க இரண்டாவது நகல் அறிக்கையை கடந்த வெள்ளிக்கிழமை முன்வைத்தமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

## உலகுக்கு உண்மையை உணர்த்த அரசு பகிரதப் பிரயத்தனம்



(கொழும்பு)

இலங்கை பற்றிய சரியான தகவல்களை சர்வதேசத்துக்கு வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் ஒரு கட்டமாகவே ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் கடந்த வெள்ளியன்று சந்தித்து உரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் சபாநாயகர் சாமல் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, நாடாளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக்க திஸநாயக்க உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளனர்.

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வில் இலங்கை மீது அமெரிக்கா பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்கவிருந்த நிலையில், இலங்கையின் ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவரும் திடீரென சந்தித்துக் கலந்துரையாடியமை எதிர்க்கட்சிகளின் அரசியல்வாதிகளிடையே பெரும் சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சந்திப்பு தொடர்பில் இலங்கை ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில், "இலங்கையின் அனைத்து அரச தலைவர்கள் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளும் மத்திய நிலையமாக, ஜே.ஆர்.ஜயவர்தன கேந்திர நிலையத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் அரசியல் தொடர்பிலும், அது தொடர்பாக அக்கறை செலுத்தும் தரப்பினர் தொடர்பிலும் தகவல்களை அறிந்து கொள்வதற்கான கேநதிர நிலையமாக ஜே.ஆர். ஜயவர்தன கேந்திர நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு அனைவரும் அவதானம் செலுத்தியுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## திடீர் இடமாற்றம்

மட்டக்களப்பு மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்றிய ரவி வைத்தியலங்கார இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மார்ச் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பொலிஸ் திணைக்கள தலைமையகத்திற்கு இவர் இடமாற்றப்பட்டுள்ளார்.

இதனால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு தமிழ்பேசும் வி.இந்திரன், மட்டக்கப்பு மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மாரச் கடந்த 3 ஆம் திகதி முதல பிரதி பொலிஸ் மா அதிபராக கடமைகளை பொறுப்பேற்றுள்ளார். பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி வைத்தியலங்காரவின் மகன் அசேல கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் மகன் உள்ளிட்ட குழுவினரால் பாசிக்குடா கடற்கரையில் வைத்து தாக்கப்பட்டமை குறிப்பிடத் தகககது. இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக அஜந்த சமரக்கோனும் பொலிஸ் அத்தியட்சகராக மேமன் சில்வாவும் கடமையாற்றுகின்றனர்.

## தவறு செய்கிறதா பொதுபலசேனா? முறையிட்டால் சட்ட நடவடிக்கை

பொதுபலசேனாவுக்கு எதிராக முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுமானால், அந்த அமைப்புக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கண்டி அஸ்கிரிய மகாநாயக்கர் எச்சரித்துள்ளார்.

பொதுபலசேனாவின் சில நடவடிக்கைகளை அஸ்கிரிய பீடத்தினால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் வணக்கத்துக்குரிய ஆனமடுவ தர்மதாஸ தெரிவித்துள்ளார்.

பொதுபலசேனா அமைப்பினர் சில இடங்களில் சட்டத்தை கையில் எடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இதனை தவிர்த்து அவர்கள் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று பதிவாளர் கோரியுள்ளார்.

# வடக்கில் சட்டவிரோத இழுவைப்படகு கட்டுப்படுத்த அதிகாரிகள்குழு வருகை

(வடமராட்சி)

சட்டவிரோதமாக இழுவைப் படகுளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவோரை கடற்பரப்பில் வைத்து, கையும்மெய்யுமாக கைதுசெய்து சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவதற்கென இலங்கை கடற்தொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரிகள் கொண்ட விசேட குழு ஒன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளதாக தகவல்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையில் தடை செய்யப்பட்ட உள்ளூர் இழுவைப் படகுகளில் சில மீனவர்கள் யாழ்ப்பாணம், பாசையூர், வடமராட்சி - கிழக்கு, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை போன்ற இடங்களில் இருந்து படையெடுத்து ஏனைய இடங்களின் கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதனால் அருகிச்செல்லும் மீன் இனம் முற்றாக அழிந்துவருவதுடன், சிறுதொழில் மீனவர்களின் வலைகள் மற்றும் கடற்கலன்களும் நாசமாகி வருகிறது.

இந்நிலையில் இதனை தடுக்கும் வகையிலேயே கொழும்பிலிருந்து வரும் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் கொண்ட விசேட குழு மேற்படி கடற்பரப்பில் இலங்கை கடற்படையினரின் உதவியுடன் நேரில்சென்று குறித்த நபர்களை கைதுசெய்து, அந்தந்த பொலிஸ் நிலையங்களின் ஊடாக நீதிமன்றங்களில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்திய இழுவைப்படகுகள் தொடர்ச்சியாக இலங்கை கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபடுவதால் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள கடற்தொழிலாளர்கள் அன்றாட ஜீவனோபாயத்துக்காக கடனடிப்படையில் தொழிலில் ஈடுபட்டுவரும் உள்ளூர் மீனவர்கள் தம் முயற்சியின் பயனாக மீண்டெழுந்து வரும் இந்நிலையிலே இவ்வாறான உள்ளூர் இழுவைப்படகுகள், தான்தோன்றித்தனமாக செயற்படுவதால் மேலும் கஷ்டங்களை இவர்கள் எதிர்நோக்கி வந்தனர்.

இதேவேளை பலகாலமாக நீதிமன்றம், பொலிஸ்நிலையங்கள், கடற்படைமுகாம்களுக்கு சென்று பல தடவைகள் கடற்தொழில் சங்கங்கள் முறைப்பாடு செய்தும், மகஜர்களும் கையளிக்கப்பட்டது. இதன்பயனாக இழுவைப்படகு மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் சட்ட நடவடிக்கைக்குள்ளாக்கப்படவிருப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (116)

## பட்டிமன்றப் போட்டி

(யாழ்.நிருபர்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு உயர்தரத்தில் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களிடையே மாவட்ட மட்டத்தில் பட்டிமன்றப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதனை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலக மட்டத்தில் உள்ள உயர்தர வகுப்புகளில் கல்வி பயிலும் பாடசாலை மாணவர்களிடையே நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. (10)

# இலத்திரனியல் தராசு இல்லை; நஷ்டமடையும் நுகர்வோர்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட திருநெல்வேலிச் சந்தையில் வாழைக்குலை விநியோகிக்கும் பகுதியில் இன்னமும் பழைய மேடைத்தராசு பாவணையே இருந்து வருகின்றது.

இதனைப் பயன்படுத்தி வாழைக்குலை வியாபாரிகள் மோசடி வியாபாரத்தில் ஈடுபட்டு, கொள்ளை இலாபம் ஈட்டி வருவதாக விவசாயிகளாலும், சில்லறை வியாபாரிகளாலும், பொதுமக்களாலும் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

வாழைக்குலை சந்தையில் தராசினை வைத்திருக்கும் குத்தகைக் காரரிடம் வாழைக்குலை வியாபாரிகள் வாழைக்குலைகளினை நிறுக்கும் பொழுது, இது வாங்குவதற்காக, இது விற்பதற்காக எனக்கூறி அதற்கேற்ப குறைத்தும், கூட்டியும் நிறையினைக் கூறி கொள்ளை இலாபம் ஈட்டி வருகின்றனர்.

இதனால் விவசாயிகளும், நுகர்வோரும் சில்லறை வியாபாரிகளும் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாவதுடன், நஷ்டமடையவும் நேரிடுகின்றது.

இவ் மோசடியினை தவிர்க்க, உடனடியாக இலத்திரனியல் தராசினை பயன்படுத்துவதினை உறுதி செய்யுமாறு நல்லூர் பிரதேச சபையினை மக்கள் கோரியுள்ளனர். (42)


## மாவிட்டபுரம் மக்களுக்கு இந்திய வீட்டுத்திட்டம்

(தெல்லிப்பளை)

மாவிட்டபுரம் - தெற்கு ஜே/232 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் வீடுகள் அமைக்கும் பணிகள் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் பத்துப் பேருக்கான கொடுப்பனவுகள் உரியவர்களது பெயரில் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுவருகின்றது. அப்பணத்தின் உதவியோடு பயனாளிகள் தமது வீட்டுக்கான அத்திவாரம் அமைக்கும் பணிகளை முன்னெடுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (17)

# "ஜெய்க்கா" நிறுவன பிரதிநிதிகள் வடமாகாண ஆளுநருடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான ஜெய்க்கா நிறுவன பிரதிநிதி ஹமி ஒயோ உட்பட ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியினை கொழும்பு பத்திரமுல்லவிலுள்ள ஆளுநர் உப அலுவலகத்தில் சந்தித்து வட மாகாண கிராமப்புற உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடினார்கள். ஜப்பான் நாட்டினால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளை அமுல்படுத்தி நடாத்தும் ஒரே ஒரு நிறுவனம் ஜெய்க்கா ஆகும். இந்நிறுவனம் இலங்கை அரசுடன் இணைந்து புதியதொரு செயற்றிட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட கிராமப்புற சமூகங்களின் உற்பத்தி நிலையங்கள், சந்தை, குடிநீர் மற்றும் விவசாய நீர் ஆதாரங்கள் போன்றவற்றை மீளமைக்கவுள்ளது. இத்திட்டம் வட மாகாணத்திலும் முன்னெடுக்கப்படவுள்ளது.

வட மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டார்.

# சரஸ்வதி மண்டபம் திறப்பு

(யாழ்.நிருபர்)

இந்துவித்தியாவிருத்திச் சங்கத்தின் நிர்வாகத்தில் இயங்கிவரும் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம் நீண்டகாலத்தின் பின்னர் நவீன முறையில், வசதிகளுடன் கூடியதாகப் புனரமைக்கப்பட்டு கடந்தவாரம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து விருந்தினர்கள் மண்டபம் வரை ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

மண்டபத்தின் முகப்பில் அமைக்கப்பட்டுள்ள சரஸ்வதி சிலையை வணக்கத்துக்குரிய ரிஷி தொண்டுநாதசுவாமிகள் திறந்து வைத்தார். தொடர்ந்து அவர் மண்டபவாயிலை சம்பிரதாய பூர்வமாக நாடா வெட்டித்திறந்து வைத்தார். இந்நிகழ்வில் இந்துவித்தியாவிருத்திச் சங்கத்தலைவர் இராமச்சந்திரன், செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், சி.தனபாலா உட்பட மற்றும் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (10)

# "காவலூர் தரிசனம்" வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் காலாண்டுக்கொரு முறை வெளியிடப்படும் பிரதேச சபையின் செய்திகள், தகவல்கள், தரவுகள் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் 'காவலூர் தரிசனம்' செய்தி மடலின் மூன்றாவது மலர் வெளிவந்துள்ளது.

குறித்த வெளியீடானது பொன்.பாலசுந்தரம் பிள்ளையால் எழுதப்பட்ட "ஊர்காவற்றுறை அன்றும் இன்றும்" மற்றும் "ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் வரலாறு" என்ற கட்டுரைகளையும் "நிகழ்வுகளின் நிழல்" என்ற பகுதியில் பிரதேசத்தின் நிகழ்வுகளின் புகைப்படங்களையும் சமூக கணக்காய்வு முக்கியத்துவம் பற்றிய விளக்கத்தையும், டெங்கு நோய் சம்பந்தமான விழிப்புணர்வையும், பொது அறிவை வளர்க்கும் வகையிலான வினாவிடைப்போட்டியையும் தாங்கி வெளிவந்துள்ளது.

# முரசின் இன்றைய பலன்

(11.03.2013 - திங்கட்கிழமை)

நந்தன வருஷம் மாசி 27 ஆம் திகதி. நட்சத்திரம் சதயம் சித்தம். பிற்பகல் 12.51 வரை. திதி அமாவாசை. பின்னிரவு 02.10 வரை. இராகுகாலம் 07.52 - 09.22 வரை. சுபநேரம் 12.22 - 01.52 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | உலகநடப்பை அறிவதில் ஆர்வம். உங்கள் நலன் சிறக்க நல்லோர் உதவுவர். தொழில், பலம்பெறும். தாராள பணவரவில் சேமிப்பீர்கள். விருந்து. பொறுமை வெல்லும். |
| ரிஷபம் | நற்செயல்கள் புரிவீர்கள். உற்சாகம், நம்பிக்கை வளரும். உழைப்பினால் உயர்ச்சி. லாபம். தேடிய பொருள் கை சேரும். குடும்ப மகிழ்வு. நண்பரின் வாழ்வுக்கு உதவுவீர்கள். |
| மிதுனம் | சிக்கலான சூழ்நிலையை திறம்பட எதிர்கொள்வீர்கள். நண்பர், உறவினர் பாராட்டுவர். தொழில், செழிப்படையும். தாராள பணவரவு. குடும்பத்தேவை பூர்த்தி. சுபசெய்தி வரும். |
| கடகம் | கலை உணர்வு. செயலில் சுறுசுறுப்பு. தொழில் வளர்ச்சி. பணவரவும் நன்மையும். வீட்டுபயோகப் பொருள் வாங்குதல். நண்பருடன் விருந்து விசேஷங்கள். இன்பமான நாள். |
| சிம்மம் | செயல்களில் கருணை. அவமதித்தவர்களும் அன்பு பாராட்டுவர். தொழில், வியத்தகு முன்னேற்றம். ஆதாய பணவரவு. புத்திரர் விரும்பியது தருவீர்கள். பக்தி நாட்டம். |
| கன்னி | சோம்பல் குணம். செயல் தாமதத்தால் மனதில் சஞ்சலம். தொழிலில், ஆலோசனை உதவும். அளவான பணவரவு. சிறு அளவிலான சிகிச்சை. சலுகை கிடைப்பதில் தாமதம். |
| துலாம் | எதிர்காலத்துக்கு முன்னேற்பாடுகள். தொழில் போட்டி. அளவான பணவரவு. சாதிக்கும் எண்ணம். உறவினர், நண்பர்கள் ஆதரவு. வீடு, வாகன திருத்தம். திறமை வெளிப்பட வாய்ப்பு. |
| விருச்சிகம் | புத்துணர்வும், செயல்களில் நேர்த்தியும். குடும்பத்தினர் ஆதரவு. தொழில் வளர்ச்சி. தாராள பணவரவு. தேடியபொருள் கைவந்து சேரும். சுயதேவை பூர்த்தி. நண்பருக்கு உதவி. |
| தனுசு | செயல்களில் நேர்த்தியும், திறமையும். தாமதமான பணி நிறைவேறும். தொழில் சிறந்து உற்சாகம். சராசரி பணவரவு. சுபமங்கல நிகழ்ச்சி. தொல்லைகள் விலகும். மகிழ்ச்சி. |
| மகரம் | எந்தசெயலும் வெற்றிபெறும். சமூக நடப்பில் புதிய அனுபவம். தொழில், முக்கியஸ்தர் உதவி. பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் மங்கலநிகழ்வு. புத்திரர் விரும்பியது செய்வீர்கள். |
| கும்பம் | சிறிய செயலும் கடினமாகும், உறவினர்களிடம் விமர்சனம் வேண்டாம். தொழில், நிதான நடைமுறை. அளவான பணவரவு. எதிர்காலம் குறித்து பயவுணர்வு. தாயின் அன்பு ஆறுதல். |
| மீனம் | சொந்த நலனில் அக்கறை. சிலரது அதிருப்தியும் எதிர்ப்பும். பேச்சில் கவனம். அதிக உழைப்பு. வரவு குறைவு. ஏமாற்றம் இருக்கும். உடல்நலத்திற்கு உணவு கவனம். அரசு உதவி. |

## சேவாக் நீக்கம் டோனியே காரணம்



(கொல்கத்தா)

சேவாக் நீக்கப்பட்டதற்கு கப்டன் டோனியே காரணம் என இந்திய அணியின் முன்னாள் கப்டன் கங்குலி குற்றம்சாட்டியுள்ளார்.

சேவாக் நீக்கம் எனக்கு மிகுந்த அதிர்ச்சியை கொடுத்தது. ஏனென்றால் டெண்டுல்கரும், டோனியும் துடுப்பாட்டத்தில் மோசமான நிலையில் இருந்த வர்கள்தான். அப்படி இருக்கும் போது சேவாக்குக்கு மட்டும் ஏன் இந்த பாகுபாடு. இந்திய டெஸ்ட் வரலாற்றில் சிறந்த வீரர் சேவாக். இந்திய அணி தற்போது அவரை இழந்துவிட்டது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக அவர் தனது அதிரடியான ஆட்டம் மூலம் டெஸ்ட் போட்டியின் முடிவை மாற்றக்கூடியவர்.

டெண்டுல்கர், ராவிட், கவாஸ்கர் ஆகியோருடன் மட்டும் அவர் ஒப்பிடக்கூடியவர். அந்த அளவுக்கு அவர் தனது ஆட்டம் மூலம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார். கப்டனிடம் ஒரு குறிப்பிட்ட வீரரை குறித்து கேட்டால் தேர்வாளர்கள் முடியாது என்று சொல்வது கடினம். இதனால் சேவாக்கின் ஆட்டம் குறித்து கப்டன் டோனி தேர்வு குழுக் கூட்டத்தில் கவலைப்பட்டிருப்பார். இதன் காரணமாகவே அவர் நீக்கப்பட்டு இருக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான முதல் 2 டெஸ்டில் இந்தியாவின் வெற்றியை சிலர் பாராட்டுவது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. கடைசியாக நாம் விளையாடிய 13 டெஸ்டில் 10 டெஸ்டில் தோற்றதை அவர்கள் மறந்துவிட்டார்கள். இரசிகர்கள் சில விடயங்களை மறந்துவிடுகிறார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சிரமமின்றி சமநிலை செய்தது இங்கிலாந்து



(டுனிடின்)

இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்துள்ளது.

நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி நியூசிலாந்தின் டுனிடினில் நேற்று நிறைவடைந்தது.

இதில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஒரு விக்கெட்டை இழந்து 235 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இங்கிலாந்து அணி நேற்றைய இறுதி நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தது. இதில் நைட் வோஜ்மனாக (இரவுக் காவலன்) வந்த ஸ்ரீபன் பின்னின் விக்கெட் விரைவாக வீழ்த்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டபோதும் கன்னிச் சதம் பெற்ற கம்ப்டன் வந்த வேகத்தில் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் வேகம் கொண்டு நியூசிலாந்து அணிப் பந்து வீச்சாளர்கள் செயற்பட்டனர். ஆனால், பின்னுடன் இணைந்த ட்ரொட் மிகவும் நிதானமாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தார். இந்த ஜோடியைப் பிரிக்க கப்டன் மக்கலம் பல வழிகளிலும் முயற்சி செய்தார்.90 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இந்த ஜோடி பிரிக்கப்பட்டது. தொடர்ந்து வந்தவர்களும் களத்தில் நிலைத்து நின்று ஆடி நியூசிலாந்து அணிக்கு மேலும் நெருக்கடி கொடுத்தனர். இறுதியில் போட்டி நிறைவுக்கு வந்தவேளை, இங்கிலாந்து அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 421 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ஸ்ரீபன் 203 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 56 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் ட்ரொட் 52, கம்ப்டன் 117, குக் 116 ஓட்டங்களைப் பெற்றனர். ஆட்டமிழக்காது இயன் பெல் 26, மட் ப்ரியர் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நில் வக்னர் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதன் மூலம் முதல் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக முதல் டெஸ்டில் சதமடித்து அசத்திய நியூசிலாந்து வீரர் ருதர்போர்ட் தெரிவானார். இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 167. நியூசிலாந்து முதல் இனிங்ஸ் 460/9.

இதேவேளை, இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 14ஆம் திகதி வெலிங்டனில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரையிறுதியில் மன்செஸ்டர் சிட்டி



(மன்செஸ்டர்)

எப்.ஏ. கோப்பை கால்பந்து தொடரின் அரையிறுதிக்கு, மன்செஸ்டர் சிட்டி அணி முன்னேறியது. இங்கிலாந்தில் உள்ளூர் கால்பந்து கிளப் அணிகள் பங்கேற்கும், எப்.ஏ., கோப்பை கால்பந்துத் தொடர் நடைபெற்று வருகின்றது. மன்செஸ்டர் நகரில் நேற்று முன்தினம் நடந்த காலிறுதிப் போட்டியில் மன்செஸ்டர் சிட்டி, பார்ன்ஸ்லே அணிகள் மோதின. இதில் அபாரமாக ஆட்டத்தை வெளிப்படுத்தி கோல் மழை பொழிந்த மன்செஸ்டர் சிட்டி அணி 5-0 என்ற கணக்கில் வெற்றி பெற்று, அரையிறுதிக்கு முன்னேறியது. மன்செஸ்டர் சிட்டி அணி சார்பில் கார்லஸ் டிவேஸ் 3 (10, 30, 49ஆவது நிமிடம்), கோலரோவ் (26ஆவது நிமிடம்), சில்வா (64ஆவது நிமிடம்) கோல் அடித்து கைகொடுத்தனர்.

மற்றொரு காலிறுதியில் விகான் அத்லெட்டிக், எவர்டன் அணிகள் மோதின. இதில் விகான் அத்லெட்டிக் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. விகான் அணி சார்பில் பிகரோ (29ஆவது நிமிடம்), மேக்மனாமன் (30ஆவது நிமிடம்), கோமஸ் (32ஆவது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்தனர்.



ஆக்ரா நகரில் உள்ள தாஜ்மகால் முன்பு நடைபெற்ற படப்பிடிப்பில் கலந்து கொண்ட முன்னாள் அவுஸ்ரேலிய கிரிக்கெட் வீரர் பிரெட் லீ மற்றும் அவுஸ்ரேலிய மொடல் அழகி ஜெஸ்சிந்தா கேம்பெல்லை காணலாம்.

## வென்றது பார்சிலோனா

டெபோர்டிவோ அணிக்கு எதிரான லா லிகா கால்பந்து லீக் போட்டியில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது. ஸ்பெயினில், உள்ளூர் கால்பந்து கிளப் அணிகள் பங்கேற்கும் லா லிகா கால்பந்து தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் லீக் போட்டியில் பார்சிலோனா, டெபோர்டிவோ லா காருனா அணிகள் மோதின. ஆட்டத்தின் 38ஆவது நிமிடத்தில் பார்சிலோனா வீரர் அலெக்சிஸ் சான்செஸ் முதல் கோல் அடித்தார். இதற்கு டெபோர்டிவோ அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முதல் பாதி முடிவில் பார்சிலோனா அணி 1-0 என முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியிலும் ஆதிக்கத்தை தொடர்ந்த பார்சிலோனா அணிக்கு, நட்சத்திர வீரர் மெஸ்சி 88ஆவது நிமிடத்தில் கோல் அடித்து கைகொடுத்தார். கடைசி வரை போராடிய டெபோர்டிவோ அணியினரால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில் பார்சிலோனா அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதுவரை விளையாடிய 27 லீக் போட்டியில் 23 வெற்றி, 2 சமநிலை, 2 தோல்வி உட்பட 71 புள்ளிகள் பெற்ற பார்சிலோனா அணி முதலிடத்தில் நீடிக்கிறது.

## கால்பந்து கலவரம் தூக்கு உறுதி



(கெய்ரோ)

கால்பந்துப்போட்டியின் போது கலவரத்தில் ஈடுபட்ட 21 பேருக்கு விதிக்கப்பட்ட தூக்குத்தண்டனையை எகிப்து நீதிமன்றம் உறுதி செய்தது.

எகிப்தின் போர்ட் செட் என்ற இடத்தில், கடந்த 2012 பெப்ரவரி மாதம் நடந்த உள்ளூர் கால்பந்துப் போட்டியில் அல்-மஸ்ரி-அல்-அஹ்லி அணிகள் மோதின. போட்டியின் முடிவில், மைதானத்தில் இருந்த 13 ஆயிரம் அல்-மஸ்ரி ரசிகர்கள், குறைந்த அளவில் (1,200 பேர்) திரண்டிருந்த அல்-அஹ்லி அணியின் வீரர்கள், ரசிகர்கள் மீது, கற்கள், ஆயுதங்களால் தாக்குதல் நடத்தினர்.

இதில் 74 பேர் பலியாகினர். 1000இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். தொடர்ந்து கெய்ரோவில் நடந்த கலவரத்தில் 16 பேர் கொல்லப்பட்டனர்.

இது குறித்த விசாரணையில் 21 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து மீண்டும் கலவரம் ஏற்பட்டதில் 40 பேர் பலியாகினர். இதனிடையே, குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை, நேற்று முன்தினம் எகிப்து நீதிமன்றம் உறுதி செய்தது.


நகரின் முன்னாள் பாதுகாப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் ஈசாம் சமக்கிற்கு ஆயுள் தண்டனை (15 ஆண்டு) வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அஷ்ரபுல், ரஹீம் சிறப்பாட்டம் இலங்கை பந்து வீச்சாளர்கள் திண்டாட்டம்

(காலி)

கப்டன் எம். ரஹீம், மொகமட் அஷ்ரபுல் ஆகியோரின் பொறுப்பான இணைப்பாட்டத்தின் மூலம் இலங்கை அணிப் பந்து வீச்சாளர்கள் காலியில் திண்டாடி வருகின்றனர். இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் காலியில் நடைபெற்று வருகின்றது. இதில் முதல் இனிங்ஸிற்காக இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை பங்களாதேஷ் அணி தொடர்ந்தது. இலங்கை அணியின் கோட்டை என வர்ணிக்கப்படுகின்ற காலி மைதானத்தில் பங்களாதேஷ் அணியின் விக்கெட்டுக்கள் விரைவாகச் சாய்க்கப்பட்டு வெற்றிக்கான களம் அமைக்கப்படும் என பொதுவில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இதற்கு மாறாக, அஷ்ரபுல், முகமதுல்லா ஜோடி ஆட்டம் அமைந்திருந்தது. மிகவும் நிதானமாக இலங்கைப் பந்துவீச்சாளர்களை எதிர்கொண்டு இந்த ஜோடி ஓட்டங்களைக் குவித்தவண்ணமிருந்தது. இந்நிலையில் 105 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது இந்த ஜோடி பிரிக்கப்பட்டது. தொடர்ந்து அஷ்ரபுல்லுடன் இணைந்த கப்டன் எம். ரஹீம் தனது பொறுப்பை உணர்ந்து ஆடினார். இந்த ஜோடியைப் பிரிக்க இலங்கை அணிக் கப்டன் மத்தியூஸ் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டார். அவரின் திட்டங்கள் எல்லாம் தவிடுபொடியானது. பலவீனம் எங்கள் பந்து வீச்சில் இல்லை. ஆடுகளம் துடுப்பாட்டத்திற்கு சாதகமானது என்பதை வெளிப்படுத்தும் வகையில் இந்த ஜோடியின் ஆட்டம் அமைந்திருந்தது. இறுதியில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை, பங்களாதேஷ் அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 438 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் அஷ்ரபுல் 398 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், 20 பவுண்டரிகள் அடங்கலாக 189 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். டெஸ்ட் அரங்கில் அஷ்ரபுல் பெற்ற ஆறாவது சதமாகவும், ஒரு இனிங்ஸில் பெற்ற அதிக ஓட்டமாகவும் இது அமைந்தது. கப்டன் எம். ரஹீம் 236 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிஸ்கர், 18 பவுண்டரிகள் அடங்கலாக 152 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுள்ளார். டெஸ்ட் அரங்கில் ரஹீம் பெற்ற இரண்டாவது சதமாகவும், ஒரு இனிங்ஸில் பெற்ற அதிக ஓட்டமாகவும் இது அமைந்தது. அத்துடன் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 261 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. மற்றும் முகமதுல்லா 83 பந்துகளை எதிர்கொண்டு ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 55 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் குலசேகர, ரங்கன ஹேரத், அஜந்த மெண்டிஸ், மத்தியூஸ் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர். ஆறு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் பங்களாதேஷ் அணி 132 ஓட்டங்களால் பின்னிலையில் உள்ளது. இன்று போட்டியின் நான்காம் நாளாகும். இலங்கை முதல் இனிங்ஸ் 570/4





# பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டிப் பதிவுகள்...


கிளி. முட்கொம்பன் அ.த.க.பாடசாலை


கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயம் (இ)


உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம் (10)


கிளிநொச்சி பாரதிபுரம் வித்தியாலயம்


அரியாலை பூம்புகார் அ.த.க.பாடசாலை


புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயம்


(54)


பொலிகண்டி இ.த.க. பாடசாலை (116)


ஆனைக்கோட்டை உயரப்புலம் றோ. க. தமிழ்க் கலவன் பாடசாலை


(10) கோண்டாவில் இந்து ம.வி., கோண்டாவில் சி.சி.த.க.


தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி (93)

# தனக்குத் தனக்கு என்றால் படக்குப் படக்கு என்னுமோ!

- வரதர் கட்டுரையிலிருந்து.

"அபிவிருத்தித் திட்டக் கூட்டங்களுக்கு எங்களைக் கூப்பிடவில்லை", "எமது மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி அரசாங்கம் எங்களுடன் ஆலோசனை நடத்துவதில்லை"

என்று த.தே.கூ நாடாளுமன்றப் பிரதிநிதிகள் அடிக்கடி தமிழ்ப்பத்திரிகைகளில் அழுது குழறுவது தமிழர் அனைவருக்கும் தெரியும்.

இவ்விடயம் தொடர்பாக த.தே.கூ நாடாளுமன்ற உறுப்பினர்களை நோக்கி எழுப்பக்கூடிய சில

**கேள்விகள்:-**

நாடாளுமன்றக் கூட்டங்களிற் பங்கு பற்றும் உங்கள் தனிப்பட்ட உரிமைகளைத் தடுத்தால் விட்டுவிடுவீர்களா? அதை எப்படியும் சட்டங்களுக்குள் புகுந்து ஆராய்ந்து நிலை நாட்டுகிறீர்கள்தானே!

◗ உங்கள் சம்பளத்துக்கும் அப்பால் நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு கூட்டத்திலும் நீங்கள் பங்கு பற்றுவற்காக உங்களுக்கு வழங்கப்படும் பணக் கொடுப்பனவுகளை அரசாங்கம் தராது விட்டால் விட்டுவிடுவீர்களா?

அவற்றை எப்படியும் போராடி அங்கு உங்களது உரிமைகளை நிலைநாட்டி விடுவீர்கள்தானே?

◗ நாடாளுமன்ற உறுப்பினர் என்னும் உங்கள் கடமையை நீங்கள் முறையாகவும் முழுமையாகவும் நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக இலவசப் போக்குவரத்து, இலவச போன்வசதிகள், உங்களுக்கென தனி எழுத்தாளர் எனப்பல இத்தியாதிகளை அரசு உங்களுக்கு பணமாகவும் சலுகைகளாகவும் வழங்குகிறது. இவற்றில் எந்த ஒன்றையாயினும் அரசாங்கம் தர மறுத்தால் நீங்கள் இலகுவில் விட்டுவிடுவீர்களா? அவை ஒவ்வொன்றும் உங்களுக்குக் கிடைக்க வேண்டிய சிறப்பான தனி உரிமைகள் என்ற பெயரில் அவற்றையெல்லாம் ஒன்று விடாமல் வாங்கி கமுக்கமாக உங்கள் பாக் கெட்டுகளுக்குள் தவறாமல் போட்டுக் கொள்கிறீர்களே?


◗ நாடாளுமன்ற உறுப்பினர் என்பதற்காக உங்களுக்கு வழங்கப்படும் நாடாளுமன்ற விடுதிகளை உங்கள் குடும்பத்துக்கான வீடாகப் பாவித்து சொந்தம்கொண்டாடிக் கொள்கிறீர்கள்தானே?

◗ நீங்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுகிற ஒவ்வொரு தடவையும் பல கோடி ரூபாக்கள் பெறுமதியான கார்களை வேறு யாருக்குமே கிடைக்க முடியாத விலைச்சலுகைகள் மற்றும் வரிச்சலுகைகள் வழியாக சில இலட்சம் ரூபாக்களுக்கு அரசாங்கம் உங்களுக்குத் தருகிறபோது அவை தொடர்பாக ஒரு மூச்சுச் சத்தமும் வெளியே கேட்டுவிடாதபடி அமுக்கிக் கொள்கிறீகள்தானே? அதைத் தருவதற்கு சற்றுக் கால தாமதம் ஏற்பட்டாலும் எத்தனை தடைவயாயினும் உரிய அமைச்சுப்படியேறி எவருக்கும் அந்தத் தகவல் தெரிய வருவதற்கு முதல் அவற்றை வாங்கிவிட்டுத்தானே மற்ற வேலை பார்க்கிறீர்கள்?

இப்படியான உரிமைகள் மற்றும் சலுகைகளில் எந்த ஒன்றையாயினும் எப்போதாயினும் அரசாங்கம் உங்களைக் கூப்பிட்டுத் தரவில்லை என்று கூறியிருப்பீர்களா? அல்லது நீங்களாகத்தான் கேட்டுப் பெற வேண்டி ஏற்பட்டது என்பதற்காகக் குறைபட்டிருப்பீர்களா?

அப்படியிருக்க உங்கள் பகுதி மக்களுக்கான - உங்களைத் தேர்ந்தெடுத்த பிரதேசத்துக்கான அபிவிருத்தி விடயங்களில் நீங்கள் அக்கறை காட்டுவதற்கு மட்டும் ஏன் நீங்கள் உங்களின் உரிமைகளை நீங்களே நிலைநாட்டி மக்களுக்கான கடமைகளை நிறைவேற்றத் தவறுகிறீர்கள்? அதற்காக மொட்டைக் காரணங்களை கண்டுபிடித்து அதையும் தமிழ்மக்களிடமே அப்பாவிகள் போல முறையிடுகிறீர்கள்?

த.தே.கூ தலைவர்கள் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் மற்றும் பிரதேசங்கள் தொடர்பான அபிவிருத்தித் திட்ட விடயங்கள் பற்றிய தமது அறியாமைக்கும் தமது அக்கறையின்மைக்கும் அரசாங்கத்தைச் சுட்டி சப்பைக் காரணங்களைக் காட்டிவிட்டு தமது வேலை முடிந்து விட்டதென பொறுப்பைத் தட்டிக்கழிக்கிறார்கள் என்றே கொள்ள வேண்டியுள்ளது.



# ஜப்பானில் சனத்தொகைச் சுருக்கம்



சனத்தொகை சுருங்குவது என்பது ஜப்பானியரின் பிரச்சினையாகி 20 வருடங்களாகி விட்டன. ஆண்மையச் சமுதாயமாகவும், பெண்களைப் பொதுவிடங்களில் அதிகம் பொருட்படுத்தாமலும் இருந்த ஜப்பானியர்கள், 20ஆம் நூற்றாண்டில் பொதுக்கல்வி பரவலான பிறகு பெண்கள் தம் இரண்டாம் நிலையை ஏற்க மறுத்துத் தனியராக வாழ்வது மேல் என்று தேர்ந்தெடுக்க ஆரம்பித்தபோது நிலைமை மோசமாகி விட்டதை நன்கு உணரத்துவங்கினர்.


பொதுவாகப் பெரும் சனத்திரள் அளவில் மாறுதல்கள் தெரியத் தொடங்குகையில் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கத் தொடங்கினால் அவற்றுக்கு விளைவு தெரிய ஆரம்பிக்க இன்னொரு 20 ஆண்டுகள் போல ஆகும். அதாவது அடுத்த தலைமுறை தொடங்குகையில்தான் விளைவு தெரியும். அதன்படி ஜப்பானியர் தம் மனோபாவங்களையும், அமைப்பு முறைகளையும் மாற்றி இருந்தால் இன்று இந்த சனத்தொகைச் சுருக்கம் இன்னும் தொடர்ந்து கொண்டிராமல் ஆக்கி இருக்கலாம். ஜப்பானின் சமுதாயம் சமீப காலங்களில் விரைந்த மாறுதல்களை உடனடியாக ஏற்காத ஒரு தேக்க நிலையில் உள்ளதால், தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை, சனத்தொகைச் சுருக்கமும் நிற்கவில்லை.

இதன் பலப்பல விளைவுகளில் ஒன்று தற்கொலைகள். பல முதியவர்கள் தம்மைப் பராமரிக்க யாரும் இல்லை என்று தற்கொலை செய்து கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்கொலை செய்து கொள்பவர்களில் இளைஞர்களும் கணிசம். இதற்கு ஜப்பானின் பொருளாதாரம் சுருங்கியதும், தொழிற்சாலை வேலைகள் இல்லாமல் ஆகிக் கொண்டிருப்பதும், அவ்வேலைகளின் இயல்புக்கேற்ப ஜப்பானியப் பல்கலைகளின் போதிப்பு மாற காலதாமதம் ஆனதால் சந்தையின் தேவைக்கு ஏற்ற தகுதிகளோ, வேலைப் பயிற்சியோ இல்லாத ஜப்பானிய இளைஞர்கள் நம்பிக்கை இழந்து தற்கொலை செய்யத் தொடங்கினர் என்பதும் கவனிக்கப்பட்டுள்ளது.

இந்த விபரீத விளைவுகளோடு இன்னொரு விளைவு, ஜப்பானில் அச்சுப் பத்திரிகைகளின் விற்பனை குறைந்து பல பத்திரிகைகள் மூடப்பட வேண்டிய நிலையில் உள்ளன என்பது. புத்தக விற்பனையும் குறைந்து வருகிறது. வருடத்துக்கு 1000 புத்தகக் கடைகள் மூடப்பட்டு வருகின்றனவாம். பத்திரிகைகளின் விற்பனை சுமார் 4 சதவீதம் சென்ற ஆண்டில் மட்டும் குறைந்து விட்டதாம். பல பத்திரிகைகள் தமிழ் வாரப்பத்திரிகைகள் வெகுகாலமாகப் பயனப்டுத்திய உத்திகளைப் பயன்படுத்தி ஓரளவு தத்தளித்தபடி உயிரோடு இருக்கின்றன என்று ஜப்பானிய பத்திரிகைகள் சொல்கின்றன - அதாவது பிரபல எழுத்தாளர்களின் நாவல்களை வாராவாரம் தொடராகப் பிரசுரித்து விட்டுப் பின் புத்தகமாகப் பிரசுரிப்பது என்ற உத்தி. இதுவுமே சிறிது கால வெற்றிக்குப் பிறகு சலித்து விடும் என்பதால் அடுத்து என்ன செய்வது என்ற குழப்பத்தில் இருக்கிறது ஜப்பானியப் பத்திரிகை உலகு என்பது செய்தி.

ஜப்பானிய ஆண்கள் இப்போது காலம் தாழ்த்தித்தான் திருமணம் செய்து கொள்கின்றனராம். இதுவும் சனத்தொகை சுருக்கத்திற்குக் காரணம் எனப்படுகிறது. ஜப்பான் தன் நிலையை முன்னேற்றிக் கொள்ள பெண்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்புகளைத் திறக்க வேண்டும் என்றும், குடியேற வருவோரை வரவேற்க வேண்டும் என்றும் சிந்தனையாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். அதேபோல, அன்னிய நாட்டுத் தொழிலாளர் ∴ சிந்தனையாளர்களையும் ஜப்பான் ஊக்குவித்து வரவேற்கவேண்டும் என்று தெரிவிக்கிறார்கள்.



"பொங்கல்" என்ற சொல் தமிழில் சோறு பொங்குவதையோ பால் பொங்குவதையோ மட்டும் குறிப்பதல்ல. வளர்தல், உயர்தல், எழுதல், பொலிதல், நிறைதல், மிகுதல் என்று பல அர்த்தங்கள் கொண்டு, உள்ளும் புறமும் உற்சாகத்தைப் பொங்கவைக்கும் ஒரு சொல் அது. மண்ணும் மனமும் இயற்கையில் நிறைந்து வாழ்வதைச் சொல்வது.

இயற்கையின் தலைப்பிள்ளைகள் உழவர்கள். அவர்கள் இன்று தலைகுனிந்து நிற்கிறார்கள். ஊர்ப்பசியைத் தீர்ப்பவர்கள், உறுபசியில் உயிரை விட்டுக் கொண்டு இருக்கிறார்கள். நகரமயமாதல் என்ற பெயரில் பல லட்சம் ஏக்கர் விளைநிலங்கள் இன்று காணாமல் போய்விட்டன.

பருவங்கள் பொய்த்து, செயற்கை உரங்களுக்கும் பூச்சி மருந்துகளுக்கும் பழக்கப்பட்டுப் பாழாகிவிட்ட நிலத்தில் இன்று உழவன் கடன் வாங்கி விதைத்து, கடனையேதான் அறுவடை செய்கிறான். விளை பொருள்களுக்கேற்ற விலையும் கிடைப்பதில்லை. அன்னமிடும் உழவர்கள் இன்று அரசாங்கத்தின் மானியத்திற்காகவும் வங்கிகளில் கடனுக்காகவும் கையேந்தி நிற்கிறார்கள். நெருக்கடியால் நிலத்தை விட்டுப் பிரிந்து வேறு தொழிலுக்குப் போகிற உழவர்கள் மனம் உடைந்து போகிறார்கள்.

பிரச்சினைகளின் போது அரசாங்கம் உழவர்களின் கடனைத் தீர்த்துவிட்டால் போதாது. அவர்களை மறுபடியும் நிலத்திலேயே உழைக்க வைப்பதற்கான நம்பிக்கையையும் உறுதியையும் தரவேண்டும். "கவுன்சிலிங்" என்பது வெறும் விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகளைப் பற்றி மட்டும் சொல்வதல்ல.

இங்கே வேளாண்மைக்கென்றே தனியாகப் படிப்புகள் இருக்கின்றன. பல்கலைக்கழகம் இருக்கிறது. ஆனால் அவற்றில் படித்து வெளியேறும் மாணவர்கள், அதிகாரிகளாக இருக்க விரும்புகிறார்களே தவிர, விவசாயிகளாக விரும்புவதில்லை. கிராமத்து மக்களின் உழைப்பில் நகரத்து மக்கள் வாழ்வதற்கான படிப்பாக மண்ணைப் பற்றிய படிப்பு இருக்கக் கூடாது.

('காற்றின் கையெழுத்து' நூலில் கவிஞர் பழநிபாரதி)

# உங்கள் குழந்தையைத் திட்டாதீர்கள்!

- சீதாலட்சுமி -



**1.** இது என்னது? இது எப்படி ஓடுது? என்று வீட்டு உபயோகப் பொருட்களைப் பார்த்து உங்கள் குழந்தைகள் சந்தேகம் கேட்டால், எங்கேனும் படித்தாவது அவர்களுக்குச் சரியான பதில்களைச் சொல்ல முயலுங்கள்.

**2.** பள்ளிக்கூடம் விட்டு வரும் குழந்தைகளை விளையாடவோ, டிவி பார்க்கவோ விடாமல் "படி... படி.." என்று கட்டாயப்படுத்தாதீர்கள். திகட்ட திகட்டக் கொடுத்தால் இனிப்பு கூட கசக்கும். குழந்தைகளின் பொழுதுபோக்கு விஷயங்களைக் கட்டுப்படுத்தினால், படிப்பின் மீது அவர்களுக்கு வெறுப்பே வளரும்.

**3.** பாடத்தைத் தவிர வேறு எதுவும் வேண்டாம் என்று உங்கள் குழந்தை களைக் கட்டாயப்படுத்தாதீர்கள். நீங்கள் எதை வேண்டாம் என்கிறீர்களோ, அந்த விஷயம் அடுத்த ஆண்டில் கேள்வியாக வருவதற்கு கூட வாய்ப்பிருக்கிறது. உதாரணமாக, வீடியோ கேம்ஸை விளையாட விடாமல் உங்கள் குழந்தைகளை நீங்கள் தடுத்தால், வீடியோ கேம்ஸ் எந்த மென்பொருளை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது? என்பது போன்ற கேள்விகள் உங்கள் குழந்தை அடுத்த வகுப்பில் படிக்கும் போது வரும். அப்போது நீங்களே வருந்துவீர்கள்.

**4.** அதிக செல்லம் கொடுப்பதும் உங்கள் குழந்தையின் படிப்புக்குத் தடையாக அமையும். உதாரணத்துக்கு "நீ படிச்சு பெரிய ஆளாகி அம்மாவுக்கும் அப்பாவுக்கும்...." என்று நீட்டி முழக்கி, பிள்ளைகளிடம் கடமைகளை கற்[illegible]காதீர்கள். இதுவே பெரும் சுமையாகி மனதளவில் குழந்தைகளைச் சோர்வடையச் செய்துவிடுகின்றன.

**5.** தங்கள் தேவைகளை தாங்களே செய்துகொள்ள ஆரம்பம் முதலே குழந்தைகளைப் பழக்கவேண்டும். சப்பாத்து போட்டுக் கொள்வது, சாப்பிட்ட பாத்திரத்தை தானே எடுத்து வைப்பது... இப்படியான வி'யங்கள் குழந்தைகளிடையே தன்னம்பிக்கையை வளர்க்கும்.

**6.** அடுத்த குழந்தையோடு உங்கள் குழந்தையை ஒப்பிட்டுப் பேசினால், அந்தக் குழந்தையைப் பார்த்துப் பார்த்து தன் குணாதிசயத்தை மாற்றிக் கொள்ளும் தன்மை குழந்தைக்கு வந்துவிடும். இதனால் உங்கள் குழந்தையின் சாதனை குறுகிப் போய்விட வாய்ப்பு உண்டு. அவர்களை அவர்களாகவே இருக்கவிடுங்கள்.

**7.** சிறுவர்களுக்கான நாடகங்கள், டிவி நிகழ்ச்சிகள் மூலமாக பாடத்தைவிட அதிகம் கற்றுக்கொள்ள முடியும். எண்களையும் நிறங்களையும் அறிவியல் தகவல்களையும் மனதில் பதியவைக்கும் நிகழ்ச்சிகள் டிவியில் நிறைய இருக்கின்றன. அவற்றைப் பார்க்க உங்கள் குழந்தைகளுக்கு தடை விதிக்காதீர்கள்.

**8.** குழந்தைகளுக்கு நிறையக் கதைகள் சொல்ல வேண்டும். கதையின் ஊடாக, அறிவியல் நன்மைகள், மறைந்த மேதைகளின் வாழ்க்கையில் நடந்த சுவையான சம்பவங்கள் போன்றவற்றைச் சொல்லலாம். நிறைய கேள்விகளுக்கான விடைகளை தங்களின் பாடத்தில் தேட ஆரம்பித்துவிடுவார்கள். ஆர்வம் பெருகும்.

**9.** சேமித்து வைக்கும் பழக்கம் மிகவும் நல்லது. உங்கள் குழந்தைக்கு பணத்தின் அருமையை உணர்த்த மட்டுமல்ல, கணிதத்தில் ஆர்வம் ஏற்படவும் சேமிப்பு பழக்கம் உதவுகிறது. விவரம் தெரியும் வயதில் உங்கள் குழந்தைக்கு நீங்கள் வாங்கித் தரும் முதல் பரிசு, உண்டியலாக இருக்கட்டும்.

**10.** படிக்கும் குழந்தைகளை சின்ன சின்ன விஷயங்களுக்காகப் பாராட்டினால் ஆர்வம் பெருகி படிப்பில் சூரப்புலி ஆகிவிடுவார்கள்.

**11.** பிறந்த நாள் போன்ற மகிழ்ச்சிகரமான தினங்களில் உங்கள் குழந்தைக்கு புத்திசாலித்தனத்தைத் தூண்டும் புதிர்ப் பரிசுகள், கட்டுமான விளையாட்டு போன்றவற்றை வாங்கிக் கொடுங்கள். அறிவியல் மற்றும் கணிதம் போன்றவற்றில் ஆர்வம் ஏற்பட இவை காரணமாக இருக்கும்.

# மந்திரிகுமாரியும் ரத்தக்கண்ணீரும்!

- எஸ்.ராமகிருஷ்ணன் -

தமிழ்சினிமாவில் கதாநாயகன் என்ற புனிதபிம்பத்தை முற்றிலும் மாற்றிய இரண்டு திரைப்படங்கள் மந்திரிகுமாரி, மற்றும் ரத்தக்கண்ணீர்.

மந்திரிகுமாரி 1950இல் வெளியானது. ரத்தக்கண்ணீர் 1954ஆம் ஆண்டு. இரண்டின் கதாநாயகர்களும் தன்னுடைய விருப்பத்தின் பாதையில் தன்னை உருவாக்கி கொண்டவர்கள்.

மந்திரிகுமாரியில் வரும்



பார்த்திபன் கொலை, கொள்ளைகளை விரும்பிச் செய்கிறான். கொலை தனது கலை என்று உரத்து சொல்கிறான். ரத்தக்கண்ணீரில் வரும் மோகன் வெளிநாட்டில் படித்து திரும்பிவந்து குடும்பம் சமூகம் இரண்டு தளத்திலும் உள்ள கட்டுப்பாடுகள், ஒழுக்கவிதிகள், மூடநம்பிக்கைகளை எதிர்க்கிறான். சமூகத்தை கடுமையாகக் கேலி செய்கிறான்.

இருவருமே காதலிக்கிறார்கள். திருமணமும் செய்து கொள்கிறார்கள். திருமணத்தின் பிறகும் அவர்கள் இயல்பு மாறிவிடவில்லை. தொழுநோயுற்ற போதும் மோகன் கடவுளிடம் தஞ்சம் புகவில்லை. அது போலவே மந்திரிகுமாரியில் சிறைப்பட்டு மரணதண்டனைக்காக காத்திருந்த போதும் பார்த்திபன் மாறிவிடவில்லை. அவன் பதிபக்தியைக் கேலி செய்கிறான்.

இந்த இரண்டு கதாபாத்திரங்களும் ஒரே கருத்துருவின் இரட்டையர்களைப் போலவே இருக்கிறார்கள்.

இரண்டு படங்களுமே திராவிட இயக்க கருத்துக்களைத் திரையில் நேரடியாகப் பேசுகின்றன. மதத்தின் பெயரால் நடைபெறும் மூடநம்பிக்கைகளை விவாதிக்கின்றன. அவ்வகையில் திராவிட இயக்க அரசியல் தமிழகத்தில் வேர் ஊன்ற செய்வதற்கு இருபடங்களும் முக்கிய காரணிகளாக இருந்திருக்கின்றன.

மந்திரிகுமாரி வெளியான அதே காலகட்டத்தில் நாகையா நடித்த ஏழைபடும்பாடு வெளியானது, இந்தப் படம் விக்டர் க்யூகோவின் "லே மிசரபிள்" நாவலை மையமாக கொண்டு உருவாக்கப்பட்டது. அதுவும் ஒரு திருடனைப் பற்றியே பேசுகிறது. அவன் மனம் திருந்திய திருடன். ஏழ்மை அவனைத் திருடச் செய்கிறது. அவன் தனது திருட்டிற்காக மனம் கலங்குகிறான். மீட்சிக்காகப் போராடுகிறான், அவனை தமிழ்சமூகம் தனது அடையாளமாக அங்கீகரிக்கவேயில்லை.

இந்தியாவில் சினிமா அறிமுகமான காலத்தில் இருந்தே புராணங்களும் இதிகாசங்களும் தான் அதன் கதைக்களமாக இருந்திருக்கிறது. அரிச்சந்திரா, சத்யவான் சாவித்ரி, பஸ்மாசுர மோகினி, லங்கா தகனம், பக்த விதுரன், நள தமயந்தி என உருவான மௌனப்படங்கள் இந்திய சினிமாவை கோவில்கலைகளில் ஒன்றாகவே மாற்றியிருக்கிறது.

இந்திய மக்கள் திரை அரங்கின் வழியாகவே கடவுள் எப்படிப் பேசுவார், எப்படி நடந்து கொள்வார் என்பதை அறிந்து வைத்திருக்கிறார்கள். சினிமா நாட்டார்மரபில் இருந்த கதைகளையோ, அல்லது மக்கள் வரலாற்றினையோ கவனம் கொள்ளவேயில்லை. சமகாலப் பிரச்சினைகளை முதன்மைப்படுத்தவேயில்லை. புராணம் மற்றும் தொன்மம் சார்ந்த மிகை கற்பனைத் தன்மையில் இருந்து இந்திய பொப்பியுலர் சினிமா இன்று வரை விடுபடவேயில்லை. அந்தக் குறையே இன்றும் சினிமாவை முற்றிலும் வணிகமான ஒன்றாக மாற்றி வைத்துள்ளது.

மௌனப்பட காலத்தில் சினிமா பார்ப்பது பாவம், அது மனித மனதில் தீய எண்ணங்களை உருவாக்கிவிடும் என்ற நம்பிக்கையை மதம் உருவாக்கி மக்களைத் தடுத்து வைத்தது. காலமாற்றத்தில் அதே மதம் கடவுளின் அருட்கதைகள், திருவிளையாடல்களை பெருவாரியான மக்களின் நம்பிக்கை வடிவமாக மாற்றுவதற்கும் சினிமாவைப் பயன்படுத்த முயற்சி செய்து வெற்றியும் பெற்றது.



# செய்து பாருங்கள்!



❖ எலுமிச்சைப் புளி விடும் உணவுப் பண்டங்களுக்கு பச்சை மிளகாய் சேர்த்தால்தான் ருசியாக இருக்கும்.

❖ தோசை மா புளித்துவிட்டால் அதில் கொஞ்சம் தண்ணீர்விட்டு கலக்கி வையுங்கள். சிறிது நேரத்தில் தண்ணீர் மாவின் மேல் தெளிவாக நிற்கும். அதை வடித்துவிட்டால் புளிப்பு போய்விடும்.

❖ வெண்டிக்காய் கறி செய்யும்போது கொஞ்சம் தயிர் ஊற்றி வதக்கினால் வழவழப்பு நீங்கி மொறமொறப்பாகவும் சுவையாகவும் இருக்கும்.

❖ தேயிலைத்தூள் வாங்கி போத்தலில் போட்டு வைக்கும்போது, இரு ஏலக்காய்களை தூளாக்கி, கலந்து வைத்தால் தேநீர் மணமாக இருக்கும்.

❖ வடைக்கு அரைக்கும்போது கரட் ஒன்றை துருவிப் போட்டு அரைத்து வடை செய்தால் நல்ல நிறத்துடனும் சுவையாகவும் இருக்கும்.

❖ கத்தரிக்காய், வாழைக்காய், வெண்டிக்காய், மாங்காய் போன்ற காய்கறிகளை நறுக்க ஸ்டீல் கத்தியை பயன்படுத்தினால் அவை கறுத்துப் போகாமல் இருக்கும். இரும்பு கத்திகளைத் தவிர்க்கவும்.

# எழுதுவதென்பது, நான் துக்கம் அனுசரிக்கும் முறை

இசபெல் அலெண்டே சிலியன் எழுத்தாளர். தற்போது அமெரிக்காவில் வசிக்கிறார். நவீன இலக்கிய உலகம் முழுவதிலும் நன்கறியப்பட்டவர். இவரது படைப்புகள் 44 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவரது சில படைப்புகள் மாய யதார்த்தவாதத் தளத்தில் இயங்குபவை. இவரது படைப்புகள் குறித்து பலதரப்பட்ட விமர்சனங்கள் இருப்பினும் உலகம் முழுவதும் அதிகம் வாசிகக்கப்படுகின்ற இலத்தீன் அமெரிக்க எழுத்தாளர்களில் இவரும் ஒருவர். அவரது ஒரு நேர்காணலிலிருந்து.....

— இசபெல் அலெண்டே

**1981,** ஜனவரி 8இல் நான் வெனிசுலாவில் வாழ்ந்துகொண்டிருந்தேன். என்னுடைய அன்புத்தாத்தா மரணப் படுக்கையிலிருப்பதாக எனக்குத் தொலைபேசியில் தெரிவித்தார்கள். நான் அவருக்காக ஒரு கடிதம் எழுதத் தொடங்கி, அது எனது முதல் நாவல், 'ஆவிகளின் வீடானது'. அதிலிருந்து என் புத்தகங்களை எப்போதுமே ஜனவரி 8இல் தான் எழுதத் தொடங்குகிறேன்.

ஜனவரி 8 எனக்கு ஒரு புனித நாள். நான் அன்று எனது அலுவலகத்திற்குத்தனியாக அதிகாலையிலேயே வருகிறேன். கொஞ்ச நேரம் தியானம் செய்கிறேன். அந்தக் கணத்தில் தொர்டங்குகின்ற அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நான் என்னை முழுமையாகத் திறந்து வைக்கிறேன். நான் எதை எழுதப் போகிறேனென்று எனக்குத் தெரியவே தெரியாது. சில மாதங்களுக்கு முன்புதான் நான் ஒரு நூலை முடித்து, வேறு ஏதாவதொரு திட்டத்திலிருப்பேன். ஆனால், ஏற்கெனவே இரண்டுமுறை நடந்திருந்தது போல, நான் கணனி முன் அமர்ந்து அதை இயக்கத் தொடங்கியதும் வேறு ஏதோ ஒன்று வெளிவரும். நான் எதையோ கருக்கொண்டிருந்தது போல, அதுவும் யானைக் கர்ப்பமாக வெகுநாட்களாக அங்கேயே இருந்து வளர்ந்து நான் முழுமையாக என்னைத் தளர்த்தி, எழுதுவதற்குத் தயாரான போது அது வெளிவருவதைப்போல நிகழ்கிறது. நான் அந்தப் பரவச நிலையில் வேறு யாரோ என்வழியாக எழுதுவது போல முதல் வாக்கியத்தை எழுத முயற்சிக்கிறேன். முதல் வாக்கியம் தான் அந்த முழுப்புத்தகத்தையும் தீர்மானிக்கிறது. அது என்னுடைய பாத்திரங்களின் வழியாகப் புகுந்து தேடிக் கண்டடைய வேண்டிய, முன்பின் தெரிந்திராத ஒரு பிரதேசத்துக்குள் நுழைவதற்கான ஒரு வாயில். மெதுவாக நான் எழுத எழுத கதை, நான் அங்கேயே இருந்தாலும், அது, தானாகவே மலர்ந்து தன்னை வெளிப்படுத்துகிறது. அது நிகழ்கிறது, அவ்வளவுதான்.

முதலிலேயே ஒரு வரை கோட்டுத் திட்டம், யாரிடமாவது எழுதுவது குறித்து ஒரு உரையாடல், எழுதிக் கொண்டிருக்கும்போதே சில பகுதிகளை வாசித்தல் என்ற வகையிலான எழுத்தாளர் நான் இல்லை. முதல் வரைவு தயாராகும் வரை - அது தயாராவதற்குப் பல மாதங்கள் கூட வழக்கமாக நீண்ட காலம், பிடிக்கும் - அந்தப் படைப்பு எதைப் பற்றியதென்று எனக்குத் தெரியாது. நான் ஒவ்வொரு நாளும் வெறுமனே உட்கார்ந்து, கதையை வெளியேற்றிக் கொண்டிருப்பேன். அது முடிந்து விட்டதென நான் நினைக்கும்போது அதை அச்சிட்டு, முதன் முதலாக வாசிக்கிறேன். அந்த நேரத்தில்தான் கதை எதைப்பற்றியதென்று எனக்குத் தெரிய வருகிறது. கதையோடு தொடர பற்ற எல்லாவற்றையும் வெட்டியெறியத் தொடங்குகிறேன்.

எழுதுவதன் செயல்பாடுகளை நான் யாரோடும் பகிர்ந்து கொள்வதில்லை. முதல் வரைவு முடிந்ததும், வெகுசிலரிடமே நான் அதைக் காட்டுகிறேன். ஏனென்றால், என்னுடைய இயல்பூக்கத்தில் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. மேலும் என் எழுத்தில் பல கைகள் இருப்பதை நான் விரும்புவதில்லை.

புனைவுகளில் வாழ்க்கையின் குழப்பங்களுக்குப் படைப்பாளி அளிக்கின்ற, அல்லது தெரிவுசெய்கிறஏதோ ஒரு ஒழுங்குமுறை, காலவரிசை, அல்லது ஏதோ ஒரு படிமுறை தான் முதல் பொய்யாக இருக்கிறது. ஒரு எழுத்தாளராக நீங்கள்(வாழ்க்கையின்) முழுமையாக அல்லது ஒரு பகுதியைத் தேர்வு செய்கிறீர்கள். அந்த விஷயங்கள் முக்கியமானவையென்றும் மீதியுள்ளவை முக்கியமற்றவையென்றும் நீங்கள் தீர்மானிக்கிறீர்கள். உங்கள் புரிதலுக்குத் தக்கவாறு அவற்றை எழுதுகிறீர்கள். ஆனால், வாழ்க்கை அப்படியானதல்ல. எல்லா விஷயங்களும் ஒரே நேரத்தில் ஒருசேர ஏதோ ஒரு கலைந்த நிலையில் நிகழ்கின்றன. அங்கே தெரிவு செய்வதெல்லாம் இயலாதது. அதற்கான அதிகாரம் யாரிடமும் இல்லை, வாழ்க்கைதான் அதிகாரத்தலைமையாக இருக்கிறது. ஆகவே, நீங்கள், ஒரு படைப்பாளராக, புனைவு என்பது பொய்தானென ஏற்றுக் கொள்ளும் போது நீங்கள் பொறுப்புகளிலிருந்தும் விடுதலையாகிக் கட்டுப்பாடுகளற்றவராகி விடுகிறீர்கள். நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யமுடியும். பின்னர், வட்டங்களுக்குள் நடக்கத் தொடங்குகிறீர்கள். வட்டம் பெரிதாகப் பெரிதாக நீங்கள் அதிகமான விரிவான உண்மைகளைப் பெறமுடியும். எல்லைகள் இன்னும் விரியும்போது, நீங்கள் அதிகமாக அதனுள் புழங்கும்போது, எல்லாவற்றையும் சுற்றிச்சுற்றிக் தீரக் காணும்போது உண்மையின் துளிகளைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு அதிகமாகும்.




நான் எதுவானாலும் நன்கு காதுகொடுத்துக் கேட்கும் ஒரு நபர். அதோடு கதை தேடும் வேட்டுவச்சி. எல்லோரிடமும் கதை இருக்கிறது. சொல்கிற முறையில், சரியான தொனியில் கூறினால் எல்லாக் கதைகளும் ஆர்வமூட்டுபவைகளே. நான் செய்தித்தாள்களை வாசிகக்கிறேன். செய்திகளில் புதைந்து கிடக்கும் சின்னச் சின்னக் கதைகள் கூட ஒரு நாவலுக்குத் தூண்டுதலாக அமையலாம்

நான் எப்போதுமே குறிப்பெழுதிக் கொள்கிறேன். என்னுடைய பணப் பைக்குள் ஒரு குறிப்பேடு வைத்துக்கொள்வதுண்டு. ஆர்வமூட்டுவதாக எதையாவது கண்டாலோ கேட்டாலோ, உடனேயே குறித்துக்கொள்வேன். இதழ்களிலிருந்து செய்தித்துணுக்குகளை வெட்டி எடுத்துக் கொள்கிறேன். தொலைக்காட்சியில் செய்திகளைக் கேட்கும்போதும் குறிப்பெடுக்கிறேன். மக்கள் என் காதில் போடுகிற கதைகளின் மீதான குறிப்புகளையும் எழுதிக் கொள்கிறேன். நான் படைப்பொன்றைத் தொடங்கும்போது இந்தக் குறிப்புகள் அனைத்தையும் மீள இழுத்துப் பார்வையிடுகிறேன். ஏனெனில் அவை எனக்கு அகத்தூண்டலைத் தருகின்றன. நான் எனது சொந்த இயலெழுச்சியின். அடிப்படையில் அப்படியே தொடர்ந்து கணனியில் சுற்றுக்கோடென்று வரையறை எதுவுமில்லாமல் நேரடியாக எழுதுகிறேன். திரையில் கதை எழுதி முடிந்ததென்றால் அதை அப்படியே அச்சிட்டெடுத்து வாசிக்கிறேன். அப்போதுதான் படைப்பு எதைப்பற்றியதென்று உணர்கிறேன். இரண்டாவது வரைவு மொழி, அழுத்தம், தொனி, ஒலி ஒத்திசைவு எனக் கவனம் கொள்ளும்.

நான் ஒரு நாளில் மட்டும் பத்துப்பன்னிரண்டு மணி நேரம் தனியாக அமர்ந்து எழுதுகிறேன். நான் எவரிடமும் பேசுவதில்லை; தொலைபேசி அழைப்புகளுக்கும் பதிலளிப்பதில்லை. என்னை மீறி நிகழ்கின்ற ஏதோ ஒன்றின் கருவியாக, வெறும் ஊடகமாகத்தான் நான் இருக்கிறேன். என் வழியாகக் குரல்கள் பேசிக்கொள்கின்றன. அவ்வளவுதான். நான் புனைவாக ஒரு உலகத்தைப் படைக்கிறேன் ஆனால், அது எனக்குச் சொந்தமானதல்ல. நான் கடவுள் இல்லை வெறும் கருவி மட்டுமே. அந்த நீண்ட மிகமிகப் பொறுமையான தினசரி எழுதும் பயிற்சியின் மூலமாக என்னைப் பற்றியும் வாழ்க்கையைப் பற்றியும் எத்தனையோ விஷயங்களைக கண்டறிந்திருக்கிறேன் புதிது புதிதாகக் கற்றிருக்கிறேன். நான் என்ன எழுதுகிறேனென்ற உணர்வோடு எழுதுவதில்லை. அது ஒரு வித்தியாசமான நிகழ்முறை - புனைவில் பொய்யுரைப்பதன் மூலமாக உங்களைப்பற்றி, மக்களைப்பற்றி, வாழ்க்கையைப் பற்றி, உலகம் எப்படி இயங்குகிறது என்பது பற்றி உண்மையான சில சின்னச் சின்ன விஷயங்களைக் கண்டுபிடிப்பதாக இருக்கிறது.

என்னுடைய பதினான்காவது வயதில் லெபனானில், ஆயிரத்தொரு இரவுகளைப் படித்தபோது புதிய கற்பனை வளத்தையும் பாலுணர்வுக் கிளர்ச்சியும் கண்டேன். அந்நாட்டில், அந்தக் காலத்தில் பெண்களுக்குப் பள்ளிக்கூடமும் குடும்பமும் தவிர்த்த வேறு சமூக வாழ்க்கை கிடையாது. நாங்கள் திரைப் படங்களுக்குக் கூடப் போவதில்லை. தொல்லைபிடித்த குடும்பத்திலிருந்து தப்பிக்க எனக்கு ஒரே வழி வாசிப்புதான். என்னுடைய வளர்ப்புத் தந்தை, அவருடைய பூட்டிய தனியறைக்குள் மர்மங்கள் நிறைந்ததும் தோலுறையிட்டதுமான நான்கு தொகுதிகளை வைத்திருந்தார். அவை பாலுணர்வைக் கிளறுமென்பதால், நான் பார்க்கவோ படிக்கவோ கூடாதெனத் தடைசெய்யப்பட்ட புத்தகங்கள். இருந்தாலும் அந்தப் பூட்டுக்கு ஒரு மாற்றுச்சாவிக்கும், அவர் சுற்றுவட்டாரத்தில் இல்லாதபோது தனியறைக்குள் புகுந்துவிடுவதற்குமான ஒரு வழியைக் கண்டுபிடித்துவிட்டேன். நான் கைமின்விளக்குதான் பயன்படுத்தினேன். பக்கங்களை அடையாளப்படுத்த முடியாதென்பதால் விரைவாகச் சில பக்கங்களைத் தள்ளித் தள்ளி பாலுறவுப் பகுதிகளை விரும்பித் தேடிப் படிப்பேன். என் சுரப்பிகள் பொங்கிப் பெருக, அந்த அதியற்புதக் கதைகளோடு இணைந்து என் கற்பனை காட்டுக் குதிரையாகப் பாய்ந்தது. திறனாய்வாளர்கள் என்னை இலத்தீன் அமெரிக்க செஹராஜேட் எனக் குறிப்பிட்டபோது நான் அதனை மட்டுமீறிய புகழ்ச்சியாக, முகத்துதியாக உணர்ந்தேன்.

நான், என்னுடைய இருபதாவது வயதில் வாசித்த அமெரிக்க மற்றும் ஐரோப்பியப் பெண்ணிய வாதிகள் சீற்றத்தைப் புலப்படுத்தும் ஒரு தெளிவான இணைப்பு மொழியைத் தந்துள்ளனர். நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் தந்தைவழி அதிகாரமுறைக்கு எதிராக உணர்கிறேன். சிலியன் பெண்ணிய இதழான பாவ்லாவில் பணியாற்றி ஆணாதிக்க அமைப்புக்கெதிராக என் கருத்துக்களையும் எழுத்தினையும் தீட்டிக்கொள்ளத் தொடங்கினேன். அதுவே என் வாழ்க்கையின் சிறந்த காலம்.

நான் 'பாவ்லா' நாவலை எழுதிக் கொண்டிருக்கும்போது என் உதவியாளர் அலுவலகத்துக்கு வந்து, நான் அழுதுகொண்டிருப்பதைப் பார்ப்பாள். என்னைக் கட்டிப்பிடித்துக்கொண்டு, 'நீங்கள் இதை எழுதியே இருக்கக் கூடாது.' என்பாள். நான் சொல்வேன். 'நான் அழுகிறேன். ஏனென்றால் நான் மீண்டுகொண்டிருக்கிறேன். எழுதுவதென்பது, நான் துக்கம் அனுசரிக்கும் முறை.' அந்தப் புத்தகம் கண்ணீரோடு எழுதப்பட்டது. ஆனால், அனைத்தும் குணப்படுத்துகின்ற ஆறுதலளிக்கின்ற கண்ணீர். அது முடிந்த பின்னர், என் மகள் என் இதயத்துக்குள் உயிரோடு

(17ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

தந்தை பீட்டர் பிள்ளை ஞாபகார்த்த புலமைப்பரிசில்கள் நிதியம், ஆகஸ்ட் 2011 க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் முதலாவது அமர்விலே சித்தியடைந்து இம்முறை தேசிய பல்கலைக்கழகங்களில் பட்டக் கல்வியைத் தொடர்வதற்கு தகுதி பெற்றுள்ள மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்களை வழங்க முன்வந்துள்ளது.


மருத்துவம், பொறியியல், கால்நடை மருத்துவியல், பல்வைத்தியம், அளவையியல், சிறபக்கலை, சுற்றுப்புற விஞ்ஞானம், உயிரியல், பௌதீகவியல், நெசவு மற்றும் ஆடைத் தொழில் நுட்பம் விஞ்ஞானம், கணினி விஞ்ஞானம், தகவல் தொழில் நுட்பம், அளவையியல, விஞ்ஞானம் மற்றும் உணவு மற்றும் ஊட்டச்சத்து ஆகிய துறைகளில் பட்டப்படிப்பினைத் தொடரவுள்ள மாணவர்கள் இப் புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள் ஆகக் குறைந்த இசற் புள்ளி 1.6000 மற் றும் பொது வினாப் பரீட்சையில் சாதாரண சித்தியும் பெற்றிருக்க வேண்டும். அல்லது மாகாணத்தில் அதிக புள்ளிகள் பெற்ற 10 மாணவர்களில் ஒருவராகவும் நிதி உதவி தேவைப்படுபவராயும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப படிவங்களைப் பெற்றுக கொள்வதற்கு சொந்த முகவரி எழுதப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட காகித உறையை கௌரவ செயலாளர், தந்தை பீட்டர்பிள்ளை ஞாபகார்த்த புலமைப் பரிசில்கள் நிதியம், 160/24 கிரிமண்டல மாவத்தை, கொழும்பு - 05 என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கௌ்ளலாம். (10)

# குளத்தின் கலிங்கு பாய்வதால் குடியிருப்புகளுக்குள் நீர்த்தேக்கம்

## பல்லவராயன் கட்டில் அவலம்



(கிரு - சிகரம்)

அண்மையில் பெய்துள்ள மழை காரணமாக பல்லவராயன் கட்டுக்குளம் கலிங்கு பாய்வதால் நாச்சிக்குடா - முழங்காவில் வீதி நீரில் மூழ்கியுள்ளதுடன், வயல் நிலங்கள், குடியிருப்புகளுக்குள்ளும் நீர் ஊடுருவியுள்ளது.

அண்மையில் பெய்த மழை காரணமாக பல்லவராயன் கட்டுக்குளத்தில் நீர் நிரம்பியுள்ளதுடன், பாதுகாப்புக் காரணங்களுக்காக வான்கதவுகளும் திறந்துவிடப்பட்டுள்ளன.

இதனால் குளம் கலிங்கு பாய்வதால், இக்குளத்திற்குக் கீழ் உள்ள வயல் நிலங்கள் மற்றும் வீதிகள் என்பன நீரில் மூழ்கியுள்ளன.

இதனால், நாச்சிக்குடா - முழங்காவில் வீதியின் அதிகமான பகுதிகள் நீரால் அரித்துச் செல்லப்பட்டுள்ளதால், இவ் வீதியூடாக வாகனங்கள் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வீதியின் நிலைமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த இந்த பகுதிக் குடிமக்கள்.

பல்லவராயன் கட்டுக்குளத்திற்கு அருகில் இந்த வீதி உள்ளதால், மழை காலங்களில் நீர் வழிந்தோடுவதற்காக இப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பாலங்களின் அளவுகள் சிறியதாக இருப்பதனாலேயே வீதி மூடி நீர் தேங்குவதாக இந்த வீதியூடாக தினமும் பயணிக்கும் வியாபாரி ஒருவர் குறிப்பிட்டார்.

அத்துடன், தேவையற்ற இடங்களில் பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் வீதி மட்டுமன்றி வயல் நிலங்கள் மற்றும் குடியிருப்புகளுக்குள்ளும் வெள்ளம் செல்வதாக அப்பகுதி மக்கள் சுட்டிக் காட்டினர்.



யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மாணவர்களினால் மேற்கொள்ளப்பட்ட சிறுவர் சந்தையை அதிபர், ஆசிரியர்கள், மேற்பார்வை செய்வதைக் காணலாம். (105)

# மாயமாக மறைந்தது தலைக்கவசம்; வசமாக மாட்டினார் இளைஞர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் உள்ள பாடசாலை அதிபர் ஒருவரின் மாயமாக மறைந்த தலைக்கவசத்துடன் ஒரு இளைஞன் வசமாக மாட்டிய சம்பவம் ஒன்று அண்மையில் சாவகச்சேரி நகரில் இடம்பெற்றுள்ளது.

கடந்த மாத இறுதியில் பிரஸ்தாப அதிபர் மின்னியல் பொருட்கள் வாங்க சாவகச்சேரி சென்றுள்ளார். கடையின் வாயிலில் மோட்டார் சைக்கிளில் தலைக்கவசத்தை கழற்றி வைத்துவிட்டு கடைக்குள் சென்றுவிட்டு கண்ணிமைக்கும் நேரத்தில் திரும்பியபோது தலைக்கவசம் மாயமாக மறைந்துள்ளது.

வெளிநாட்டு பாணியில் அமைந்த மிக விலை மதிப்புள்ள வித்தியாசமான வடிவத்திலான இத்தலைக்கவசம் மிக அரிது. எனவே இதை அணிபவர்கள் கண்ணில் படுவார்கள் என்று எண்ணிய அதிபர், நண்பரின் உதவியுடன் வீடு திரும்பிவிட்டார்.

இந்த வாரம் சாவகச்சேரி நகரில் உள்ள காப்புறுதி நிறுவனம் ஒன்றிற்கு இளைஞர் ஒருவர் இத்தலைக்கவசத்துடன் வந்ததை பிரஸ்தாப அதிபரின் இளைய மகன் கண்டுள்ளார். துரிதமாக செயற்பட்ட அவர், தொலைபேசி மூலம தனது அண்ணனின் உதவியைப் பெற்றதோடு காப்புறுதி நிறுவனத்திற்குள் நுழைந்த அந்த இளைஞன் வெளியே வரும்வரை காத்திருந்துள்ளனர்.

தலைக்கவசத்துடன் வெளியே வந்த இளைஞன் இவர்களிடம் வசமாக மாட்டினார். மாட்டியவர் இந்தத் தலைக்கவசத்தை தான் திருடவில்லை என்றும், இன்னொருவரிடம்தான் 500 ரூபாவுக்கு வாங்கியதாகவும் மழுப்பியுள்ளார். பொலிஸாரிடம் தன்னை ஒப்படைக்க வேண்டாம் என்றும், உங்களது தலைக்கவசத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்னை விட்டுவிடுங்கள் என்று இலாவகமாக கூறி அவ்விடத்திலிருந்து மறைந்தார் அந்த இளைஞன். இவ்வாறு தலைக்கவசத்துடன் மாட்டியவர் தென் மட்டுவிலைச் சேர்ந்தவர் என்று தெரியவருகிறது. (இ)

# வேலை வாய்ப்புச் செய்திகள்

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்திற்கு அலுவலக பராமரிப்பாளர் மறறும் சமையலாளர் (பெண்) தேவை. தொடர்புகளுக்கு: தலைவர் யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம், பழைய பூங்கா வீதி, சுண்டிக்குழி.

---

கொழும்பு சுற்றுப்புறம், யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் கட்டட நிர்மாணத் துறையில் உடனடி வேலை வாய்ப்புகள் உண்டு. மேசன், பிளம்பர், செடலின் பாஸ், இலக்ரீசியன், பெயின்டர் தேவை. 18 தொடக்கம் 50 வயதிற்கு இடைப்பட்டவர்கள் தொடர்பு கொள்ளலாம். உணவு, தங்குமிட வசதி என்பன வழங்கப்படும். தொடர்புகளுக்கு: 077 756 1883.

---

கிளிநொச்சியில் இயங்கும் தனியார் நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் தேவை. க.பொ.த சாதரண தர சித்தி தகைமையாகக் கொள்ளப்படும். தொடர்புகளுக்கு: த.சுதர்சன், இல 86. உதயநகர் மேற்கு, கிளிநொச்சி. தொலைபேசி இல: 077 617 7383, 077 880 3006.

---

யாழ்ப்பாணம் - கோண்டாவிலில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய 30 தொடக்கம் 40 வயதிற்கு இடைப்பட்ட வீட்டுப் பணிப்பெண் தேவை. தொடர்புகளுக்கு: இல,181 பொற்பதி வீதி, கோண்டாவில்.

---

அச்சுவேலி மாற்று வலுவுள்ள சிறுவர்களுக்கான காப்பகத்தில் தங்கியிருந்து பணியாற்றக் கூடிய பணியாளர்கள் உடன் தேவை. தொடர்புகளுக்கு: 021 222 5796, 077 362 7055.

---

கணனி அறிவும், அனுபவமும் உள்ள பில் கிளாக் உடன் தேவை. தொடர்புகளுக்கு: 37/1, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

---

கிளிநொச்சியில் இயங்கும் யூனியன் அஷூரன்ஸ் நிறுவனத்திற்கு நிதி ஆலோசகர், குழு அபிவிருத்தி முகாமையாளர் தேவை. தொடர்புகளுக்கு: 077 949 3003, 077 314 5259.

---

நல்ல சுறுசுறுப்பும், இளமைத்துடிப்பும் உள்ள விற்பனை மேம்படுத்தல் அதிகாரி தேவை. எதிர்வரும் 12, 13 ஆம் திகதி காலை 9.00 மணிமுதல் மாலை 4 மணி வரை நேர் முகத்தேர்வு நடைபெறும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: எடிசலாட் மினி சென்டர், 127, (MPCS) கட்டடம், கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணம்.

---

வயது முதிர்ந்த இருவரை வீட்டில் தங்கியிருந்து பராமரிக்கக்கூடிய 45 வயதிற்கு மேற்பட்ட சைவ போசனமுள்ள பணிப்பெண் தேவை. தொடர்புகளுக்கு: 077 902 4343.

---

ஈஸ்வரன் போக்குவரத்து சேவையில் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. போக்குவரத்து முகாமையாளர், பணம் வசூலிப்பாளர், சாரதி மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: இல 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

சட்ட அலுவலர் பதவிக்கான வெற்றிடம் யாழ்ப்பாணம், மன்னர், வவுனியா ஆகிய நிலையங்களில் சட்ட அலுவலராக (AAL) பணியாற்றுவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிபரக் கோவையை shaheema.lacpsu@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும். தொடர்புகளுக்கு: 077 555 6648.

# யுத்தத்தால் சிதைந்த கல்விப்பாரம்பரியத்தை மீண்டும் கட்டியெழுப்ப அனைவரும் இணைவோம்

## நாடாளுமன்றில் அறைகூவல்

(கொழும்பு)

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் வடக்கில் கல்விப்பாரம் பரியம் சிதைந்து விட்டது. அதனை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்று ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சந்திரகுமார் தெரிவித்தார். கடந்த வாரம் நாடாளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, கல்வி தொடர்பான ஒத்திவைப்புப் பிரேரணையில் எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்துக்காக நான் மகிழ்ச்சியடைகின்றேன். இன்று இங்கு பேசிய அனைவரும் கல்வியில் மாற்றங்களை ஏற் படுத்த வேண்டுமென்பதை வலியுறுத்தியிருக் கிறார்கள். அந்தக் கருத்தையே நானும் கொண்டிருக்கின்றேன் கல்வியானது இந்த நாட்டிலே மக்களால் உயிர்நாடியாக கருதப்படுகின்றன. அந்தவகையில் இந்தக் கல்வியில் முன்னேற்றகரமான மாற்றங்களை ஏற்படுத்துவதனூடாகத்தான் இந்த நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும்.

எங்கள் நாடு அதிசிறந்த கல்வியாளர்களை உருவாக்கிய நாடு. அந்த நிலைமையை நாங்கள் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் எங்களுடைய அவாவாகவும் இருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்திலே நான் எனது பிரதேசம் சார்ந்த கல்வி நிலைமையை இங்கு குறிப்பிடவிரும்புகின்றேன். 30 ஆண்டுகால யுத்தம் எங்கள் தமிழர்களின் கல்வியை சிதைத்து விட்டது. யுத்தத்திற்குப் பிற்பாடு இழந்த எமது கல்வி நிலையை மேம்படுத்துவதற்கு நாங்கள் எல்லோரும் சேர்ந்து முயற்சி செய்துகொண்டிருக்கின்றோம். குறிப்பாக மக்களின் கல்வி நிறுவனங்கள் எல்லாம் யுத்தத்தினால் அழிவுற்றது இப்போது மீள் குடியேற்றத்துக்குப் பிறகு 3-3 1/2 ஆண்டு குறுகிய காலத்துக்குள் எல்லாப் பாடசாலைகளும் இயங்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது. இதற்காக நான் மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களுக்கும், குறிப்பாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ம்ற்றும் கல்வி அமைச்சர் ஆகியோருக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனாலும் எங்களுக்கு தொடர்ந்தும் பல்வேறு பற்றாக்குறைகள் இருந்துகொண்டிருக்கின்றன. ஏராளமான பௌதீக வளங்களைப் பெற்றுத்தருவதற்கு அவர்கள் மிகவும் உறுதுணையாக இருந்தாலும் பற்றாக்குறைகள் தொடர்ந்தும் இருந்துகொண்டிருக்கின்றன. பாடசாலைகள் இயங்கக்கூடிய அளவுக்கு பௌதீக வளங்களை நாங்கள் பெற்றிருந்தாலும் முழுமையான ஒரு கல்வி நிறுவனமாக பாடசாலையாக மாற்றுவதற்குரிய வளங்களை நாங்கள் எதிகாலத்திலே பெற்றாக வேண்டும். அதனூடாகத்தான் இழந்த வடமாகாண கல்வி நிலையை மேம்படுத்த முடியுமென்று நர்ன் கருதுகின்றேன். தற்போது ஆயிரம் பாடசாலைகள் திட்டம் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. எங்கள் பகுதிகளில் ஆயிரம் பாடசாலைகள் திட்டம் அமுல்படுத்தப்படும்போது நாங்கள் சில நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியிருக்கின்றது. பாடசாலைகளுக்கு மேலதிக வசதிகளை வழங்கி அவற்றை ஒரு நிறைவான கல்வி நிறுவனமாக மாற்றுவதுதான் அரசின் நோக்கமாகும் ஆனால் குறைபாடுகளுக்கு மத்தயில் இருக்கும் எங்கள் பாடசாலைகளில் இந்தத் திட்டத்தினை அமுல்படுத்து வதால் மட்டும் பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடி யாது. குறிப்பாக இன்று கிளிநொச்சி, வன்னி மாவட்டங்களில் இருக்கின்ற உயர்நிலைப் பாடசாலைகளில் ஏற்கெனவே ஏராளமான வளப்பற் றாக்குறைகள் இருக்கின்றன. ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் அபிவிருத்தியில் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 26 பாடசாலைகளுக்கு விஞ்ஞான கூடங்கள் வழங்கப்படுவதை நாங்கள் வர வேற்கிறோம். ஆனால் விஞ்ஞான கூடங்கள் மட்டும் அந்தப் பாடசாலைகளின் குறைபாடு களைத் தீர்த்துவிடாது ஏனென்றால் பிரபல பாடசாலைகள் உட்பட பெரும்பாலான பாடசாலைகளில் 15 வகுப்பறைகளுக்கு மேல் கட்டட வசதிகள் இல்லை. ஆகவே கட்டட வளப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கும் கல்வி அமைச்சு உரிய விசேட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எங்களுக்கு அதற்கான நிதி வசதிகளைப் பெற்றுத்தருவதற்கு உதவவேண்டும் எங்களுக்கு அதற்கான நிதி வசதிகளைப் பெற்றுத்தருவதற்கு உதவ வேண்டும் மென்பதை நான் இச்சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### வழியெங்கும் ஒளியேற்றுவார்



பரபரப்பின்றி அங்கொன்று, இங்கொன்றுமாக இயங்கிக்கொண்டிருக்கும் மருதனார் மடத்திற்கு, அதன் அடையாளத்தை பறைசாற்றும் விதமாக, எங்கள் போக்குவரத்தின் பாதுகாவலராக அருள்பாலிக்கிறார் ஆஞ்சநேயர். ஆலயம், பாடசாலை, வலயம், மாகாணம், பல்கலைக்கழகம், சந்தை என வரலாற்று ரம்யங்கள் நிரம்பிய மருனார்மடச் சூழலிற்கு மேலும் மகுடம் வைப்பது போன்று 60 அடியில் ஆஞ்சநேயர் அருள் பாலிக்கிறார். மருமனார்மட ஆஞ்சநேய ஆலைய நிர்வாகத்தினால் 60 அடி உயரம் கொண்ட ஆஞ்சநேயர் உருவச் சிலை உருவாக்கப்பட்டு திரை நீக்கம் செய்யப்பட்டது. இந்தியக் கலைஞர்களால் உருவாக்கப்பெற்ற இச்சிலை, திரை நீக்கம் செய்து சில வாரங்களில் கை உடைந்த நிலையில் மூடப்பட்டிருந்தது. இந்நிலையில் திருத்த வேலைகள் சீர்செய்யப்பட்டு மீண்டும் புதுப்பொலிவுடன் ஆஞ்சநேயர் சிலை திரை நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. பார்போர் கண்களைக் கொள்ளை கொள்ளும் ஆஞ்சநேயர், முருகண்டிப் பிள்ளையார் போன்று எங்கள் வழிகளுக்கு ஒளியேற்றுவார் என நம்புவோம்.

(எஸ்.பி.)

# கல்வியியல் முதுமாணிகற்கைநெறிக்கு கோரப்படுகிறது விண்ணப்பம்

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக உயர்பட்டப்படிப்புகள் பீடம் கல்வியியல் முதுமாணி கற்கை நெறிக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமும், பட்டபின் கல்வி டிப்ளோமாவும் பெற்றிருப்பதுடன், ஒரு பாடசாலையில் அல்லது யாதேனும் கல்விநிறுவனத்தில் குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுகள் கற்பித்தல் அனுபவம் அல்லது மேற்படி கற்கைநெறிக்குப் பொருத்தமான கல்விசார் பணிகளில் குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

தமிழ்மொழிமூலம் நடைபெறும் இக்கற்கைநெறி ஒருவருட காலமாகும். கற்கைநெறிக்கட்டணம் 75, 000 ரூபா, விண்ணப்பப் பதிவுக் கட்டணம் 1000 ரூபா ஆகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் உயர் பட்டப் படிப்புகள் பீட அலுவலகத்தில் பணம் வைப்பிலிடும் பத்திரத்தைப் பெற்று, மக்கள் வங்கி யாழ்.பல்கலைக்கழகக்கிளையில் விண்ணப்பப்பதிவுக் கட்டணத்தைச் செலுத்தி, உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்து, விண்ணப்பப்படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத்திகதி 11.04.2013 எனவும் பதிவாளர் அறிவித்துள்ளார். (10)

# காணி எல்லைகளை தேடிஅலையும் நாவாந்துறை - வடக்கு மக்கள்

## தீர்வுகாண ஒன்று கூடலுக்கு அழைப்பு

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட நாவாந்துறை - வடக்கு சோனகதெரு பகுதியில் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு, மண் அணை பரவப்பட்டு நிலம் சம தரையாக்கப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் தமது காணி எல்லைகளைக் கண்டு பிடிக்க முடியாத நிலைமை தோன்றியுள்ளது.

காணி எல்லைகளைக் கண்டு பிடிப்பது தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வுகாணுமுகமாக எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 10.00 மணிக்கு யாழ்.பிரதேச செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. யாழ்.பிரதேச செயலரின் வேலைத்திட்டத்திற்கமைய இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்குடன் கூட்டப்படவுள்ள இக்கூட்டத்திற்கு நாவாந்துறை - வடக்கு சோனகத்தொரு மற்றும் சம்பந்தப்பட்ட கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பொதுமக்கள் தமது காணி தொடர்பான ஆவணங்களுடன் சமூகமளிக்கு மாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (10)


# காரை நலன்புரிச்சங்கம் 13 பேருக்கு மருத்துவ உதவி

(யாழ்.நிருபர்)

பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கத்தின் மருத்துவ உதவித்திட்டத்தின் கீழ் காரைநகரைச்சேர்ந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 13 பேருக்கு “கண்படர்” (cataracx) அகற்றல் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காரைநகர் அபிரிருத்திச் சபையின் ஏற்பாட்டில் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட இச்சிகிச்சையை கண்வைத்திய சிகிச்சை நிபுணர் டாக்டர். குகதாசன் மேற்கொண்டார். காரைநகர் அபிவிருத்திச்சபையில் பதிவு செய்த கண்படர் நோயாளிகளில் அவசர சிகிச்சை செய்யப்படவேண்டிய தெரிவு செய்யப்பட்ட நோயாளர்கள் 13 பேருக்கே இச்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.(10)

# பரமர் சங்கமம்



‘இளகிய இரும்பைக்கண்டால் கொல்லன் தூக்கித்தூக்கி அடிப்பான்: எதுவும் தங்களுக்கு இசைவாக அம்பிட்டால் இந்த மனிதகுலம் இலகுவாக விட்டு விடுவதில்லை என்பதை மேற் சொன்ன பழமொழி பூடகமாகச் சொல்கிறதல்லவா?

மக்கள் சுத்திச் சுத்தி பல் வேறுவிதமான யுத்தங்களுக்கு முகம் கொடுத்து வாழ்நாளை யுத்த கலாத்திலே போக்கிக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம்.

இரண்டுக்கும் மேற்பட்ட தசாப்தகாலம் உள்நாட்டில் நடந்த யுத்தம் பீதியும், அலைச்சலும், உலைச்சலுமாக மக்களை வேதனைப் படுத்தியது.

அக்காலத்தில் இரவும் சரி பகலும் சரி எந்த வேளையும் எறிகணைகள் வந்து விழலாமென்ற பீதியோடு தகுந்த நித்திரையும் இல்லாம் விழித்திருந்தனர்.

பதுங்கு குழிகளை அமைத்து அப்படியான நேரங்களில் அதனுள் அடைக்கலம் புகுந்ததும், ஆத்தாது போனால் அயல் கிராமங்களுக்கு ஓடோடிச் சென்று கோவில் மற்றும் பாடசாலைகளில் தஞ்சமடைந்ததும் வரலாறு.

இரவு நேரங்களில் பீப்பாக்குண்டுகளை போர் விமானங்கள் கண் மண்தெரியாமல் போட்ட போதெல்லாம் பிள்ளை. குட்டிகளையும் தங்களையும் பாதுகாத்துக்கொள்ள ஆலாப் பறந்ததை நினைத்துப் பார்க்கலாம்.

விடிந்தால் உழைப்புக்கு என்ன செய்வதென யோசிப்பதில் குடும்பத் தலைவன் மனதில் போர் மூளும். அந்த வேளையில் உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் தொழில்களைத் தவிர மற்ற அனைத்தும் முடங்கிக் கிடந்தன.

உழைத்தால் தானே சீவியம் போகும். சாதாரண கூலித் தொழிலாளிகள் தொழில் வாய்ப்புக்கிடைக்குமோ எண்டு மூக்குச் சாத்திரம் பாக்க வேணும்.

மலிகைக் கடைகளில் உணவுப்பொருட்கள் வித்துத் தீர்ந்து விட்டால் கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்படும் உலர் உணவு நிவாரணத்தைப் பெறக் கச்சேரி, விதானை வீடென உலையவேண்டி இருந்தது.

இதுகளுக்கெல்லாம் தாக்குப் பிடித்து 2009 ஆம் ஆண்டில் அனர்த்த யுத்தம் ஓய்வுக்கு வந்த பின்னால் கொஞ்சம் நிமிரலாம் எண்ட ஏழைகளின் முஷ்டிகளை நிமிர விடாமல் மீண்டும் கூனவைக்க மற்றொரு யுத்தம் தொடுக்கப்பட்டுள்ளது.

“பரமருக்கு என்ன விசரே எங்க புதிசா ஒரு யுத்தம் தொடங்கி இருக் கெண்டு” நீங்கள் யோசிப்பது விளங்குது.

அதுதான் பொருளாதார யுத்தம், இப்பெல்லாம் வேலைகள் மலிந்து கிடக்கு. அதுவும் நாளொன்று ஆயிரம், அதுக்கும் மேலால சம்பளம் கிடைக்கக் கூடிய வேலை வாய்ப்புகள் அனைவருக்கும் கிடைத்துவருகின்றன.

என்ன பிரயோசனம் மறுநாள் உடம்புக்கு ஏலவில்லை எண்டு உழைப்பாளி ஒருநாள் கிடந்தால் அடுப்புக்கை பூனைதான் படுக்கும்.

அந்தளவுக்கு வாழ்க்கைச் செலவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. எதுக்கெடுத்தாலும் காசு காசெண்டு அள்ளி இறைக்க ஒவ்வொரு வீடும் வங்கியாக வெல்லோ இருக்க வேணும்.

இந்தப் பொருளாதார யுத்தத்தை நடத்திக் கொண்டிருப்பது, யாழ்ப்பாணத்தில் புற்றீசல்போல தொடங்கப்பட்டுள்ள வங்கியள் எண்டால் நம்பு வியளே!

சோழியன் குடும்பி சும்மா ஆடாதெண்டும் நம்மவர் சும்மாவே சொல்லி வைச்சவை என்ன நான் சொல்லுறே...

20) பொம்மைக்காரின் விலை ரூ. 1845 என்பதை இரகசியக் குறியீட்டில் எழுதுக.
(..........................................................................................)

21) மின்னழுத்தியொன்றின்மீது WIE / AD எனக் குறிப்பிடப்பட்டிருப்பின் அதன் உண்மையான விலை எவ்வளவு? (..........................................................................................)


22) கணிதச் செய்கையொன்றில் பெருக்கல் X என்ற அடையாளத்தாலும், வகுத்தல் + என்ற அடையாளத்தாலும் குறிப்பிடப்பட்டிருப்பின் 12 X 5 + 3 என்பதன் பெறுமதி எவ்வளவு?
(..........................................................................................)

**23 ஆம் 24 ஆம் வினாக்களில் உரிய விதத்தில் பிரித்து எழுதப்படாத வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன. இவ்வாக்கியங்களில் உள்ள சொற்களை உரிய முறையில் பிரித்து, நிறுத்தற் குறியீடுகளை இட்டு கருத்துக்களை வாக்கியமாக்கி எழுதுக.**

23) ஆமா ம்ஆமா ம்முதிய வரேஎம துசெய லைநி னைத்துநா ம்வெட் கப்ப படுகின்றோம்
(..........................................................................................)

24) தாயேசுக் கிரீவன் எங் கேஇரு க்கிறா ன்என் றுஇரா மன் கேட் டான்
(..........................................................................................)

**ஒரு தோட்டத்திலுள்ள மரங்களின் எண்ணிக்கையை காட்டும் வட்ட வரைபு கீழே தரப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி 25 ஆம், 27 ஆம்வினாக்களுக்கு விடை எழுதுக.**




25) **தோட்டத்தில் எத்தனை சதவீதம் தென்னை மரங்கள் உண்டு?** (..............................)

26) **தோட்டத்திலுள்ள மொத்த மரங்களின் எணணிக்கை 600 எனில் மாமரங்களின் எண்ணிக்கை யாது?** (..............................)

27) தோட்டத்தில் சம எண்ணிக்கையில் காணப் படும் மரங்கள் எவை? (..............................)

**கடந்த வெள்ளிக்கிழமை (08.03.2013) வெளியான புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளுக்குரிய விடைகள்**

(1) (i) கடற்கரைக்காட்சி (ii) பொங்குகின்றபால் (iii) பார் (iv) நல்ல (v) சிப்பிகள் (vi) தடதட (vii) கடலலைகள் கால்களைத் தழுவிவிட்டுப் போவதைப்பார்.
(2) (i) முயற்சி வெற்றியைத் தரும். (ii) சிறு உதவி செய்தவரை என்றும் மறவாதே.
(3) (i) செயற்கைக்கோள் (ii) மூலிகைத்தைலம்
(4) (i) விகடகவி (ii) ஐம்புலன்
(5) (i) Mother (ii) Bottle
(6) என்னை மன்னியுங்கள் (7) Where are you going?
(8) உங்கள் பெயர் என்ன? (9) மம கிஹிங் என்னம.
(10) 1 (11) 3 (12) 3 (13) 4 (14) 3 (15) 3
(16) 3 (17) 2 (18) 3 (19) 4 (20) 1 (21) 2
(22) 1 (23) 2 (24) 4 (25) 2 (26) 2 (27) 2
(28) 4 (29) 3 (30) 1 (31) சந்திரன் (32) சூரியன்
(33) சுத்தியல் (34) சாய்தளப் பலகை
(35) மூடிவெட்டும் கருவி (37) (i) 13 (ii) 95
(iii) ரூ. 216 (iv) 11 (38) 9 (39) ரூ. 100



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I
1.30 மணி




# கல்வி முரசு


S.T.திலக்

◆ **1 தொடக்கம் 19 வரையுள்ள வினாக்களில் ஒவ்வொன்றுக்கும் உரிய, சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**


1) கீழே தரப்பட்டுள்ள பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள தாகவரம் எது?
உணவாகப் பயன்படும் தாவரம், ஆணிவேரில் உணவு சேமிக்கும், இதிலிருந்து சீனி உற்பத்தி செய்யப்படும்.




2) கீழே தரப்பட்டுள்ள பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விளையாட்டு எது?
இங்கிலாந்தைப் பிறப்பிடமாகக்கொண்ட வெளியக விளையாட்டு ஓர் அணியில் 11 வீரர்கள் விளையாடுவர். இலங்கையில் மிகப் பிரபலமான விளையாட்டு.




3) தரப்பட்டுள்ள அடைப்புக்களில் உள்ள ஒவ்வொரு உருவுக்கும் ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன.




◆ **உருக்களுக்கு இடையிலான தொடர்பை சரியாகக் காட்டும் விடையின் கீழ்க் கோடிடுக.**

(1) AG, DF, BE, CH
(2) AD, BC, FG, EH
(3) AG, BE, CF, DH

**பின்வரும் பாடலை வாசித்து 4 ஆம், 5 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர் மேல் எழுத்துக்கு நேர்.

4) பாடலில் நல்லார் எனக் குறிப்பிடப்படுபவர்கள் யார்?
1) மிகவும் வறுமையில் வாடும் ஒருவர்.
2) நற்குணங்கள் உடைய உருவர்.
3) பிறருக்கு உதவி செய்யும் ஒருவர்.

5) இப்பாடலில் வரும் கல்மேல் எழுத்துப்போல் என்ற தொடரின் கருத்து யாது?
1) கல்லில் செதுக்கப்பட்ட எழுத்து.
2) என்றும் அழியாது நிலைத்திருக்கும்.
3) கல்லின் மேல் எழுதுவதைக் குறிக்கும்.

6) கீழே தரப்பட்டுள்ள உருக்களில் பொருத்தமற்றதைத் தெரிவு செய்க.

1) 
2) 
3) 


பின்வரும் விலைப்பட்டியலை வாசித்து விடை தருக.


| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| A - சீனி | ஒரு கிலோ கிராம் | 52.00 |
| B - பருப்பு | 500 கிலோ கிராம் | 45.00 |
| C - தேயிலை | 250 கிலோ கிராம் | 100.00 |
| D - கடலை | ஒரு கிலோ கிராம் | 78.00 |
| E - மாசி | 100 கிராம் | 45.00 |


7) பொருட்களின் விலைகளுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும் விடை எது?
1) ABDCE 2) ECBDA 3) ECDBA

8) விலைப்பட்டியலினுள் ஒவ்வொரு பொருளையும் ஒரு கிலோகிராம் வீதம் கொள்வனவு செய்ய எவ்வளவு பணம் தேவைப்படும்.
1) ரூபா. 968.00 2) ரூபா 1031.00 3) ரூபா. 1070.00

◆ பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 9 ஆம், 10ஆம், 11 ஆம் வினாக்களுக்கு விடை தருக.











9) ஒரு பென்சிலின் விலை எவ்வளவு?
1) ரூ. 10.00 2) ரூ.15.00 3) ரூ. 20.00

10) ஒரு பேனாவின் விலை எவ்வளவு?
1) ரூ. 10.00 2) ரூ.15.00 3) ரூ. 20.00

11) ஒரு புத்தகத்தின் விலை எவ்வளவு?
1) ரூ. 110.00 2) ரூ.120.00 3) ரூ. 130.00

12) பின்வரும் உருக்களில் பொருத்தமற்ற உருக்களின் கீழ்க் கோடிடுக.

1) 
2) 
3) 



13) 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1 ஆம் திகதி ஞாயிறு எனில், அவ்வருடத்தில் மார்ச் மாதம் 1 ஆம் திகதி என்ன கிழமை?
1) வெள்ளி 2) சனி 3) ஞாயிறு

14) வரண்ட காலங்களில் அதிக தாகம் ஏற்படும் ஒருவனுக்கு அதிக தாகம் ஏற்படுகிறது எனில்
1) வரண்ட காலமாக இருக்கும்
2) நீரிழிவு நோயாக இருக்கும் 3) எதுவும் உறுதியாகக் கூறமுடியாது

15) பாடசாலையில் நிதமும் இருப்பவை
1) ஆசிரியர், மாணவர் 2) கட்டடம், தளபாடம் 3) அதிபர், ஆசிரியர்

16) பசியால் வாடிய நரியொன்று திராட்சைத் தோட்டத்தினூடாக சென்றபோது; திராட்சைக் குலையைக் கண்டு பறித்துத் தின்ன முயற்சி செய்தது. இந்த வாக்கியத்திலுள்ள கருத்துப் பிழை யாது?
1) நரி திராட்சைத் தோட்டத்திற்கு செல்வதில்லை
2) நரிக்குப் பசி ஏற்படுவதில்லை.
3) நரி ஒருபோதும் திராட்சைப் பழம் உண்பதில்லை.

17) குமரனின் ஒரே தங்கையான மாலதி தனது தங்கையுடன் கடைத்தெருவுக்குப் போனதாக கூறினாள். இக்கூற்று உண்மையாகவும் இருக்கலாம். இதற்குச் சரியான விளக்கம் யாது?
1) குமரனுக்கு மாலதி தவிர இன்னொரு தங்கையுண்டு.
2) குமரனின் பெரியம்மாவின் சிறிய மகள், குமரனின் வீட்டில் தங்கியுள்ளமை.
3) குமரனின் மாமாவின் இளைய மகள், குமரனின் வீட்டில் தங்கியுள்ளமை.

◆ 18 ஆம், 19 ஆம் வினாக்களிலே தொடக்கத்தில் தரப்பட்டுள்ள கூற்றைப்பற்றிய சரியான முடிவைத் தெரிவு செய்க.

18) தமிழ் - சிங்கள புத்தாண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் பிறக்கும்.
1) இது பெரும்பாலும் நிகழும் நிகழ்வாகும்
2) இது எப்போதும் நிகழும் நிகழ்வாகும்.
3) இது சிலவேளை நிகழும் நிகழ்வாகும்.

19) காலை வேளையில் ஒருவர் கிழக்கு நோக்கி நடந்து சென்றால், அவரது நிழல் அவரைப் பின் தொடர்ந்து வரும்.
1) இது பெரும்பாலும் உண்மையாகும் 2) இது எப்போதும் உண்மையாகும்.
3) இது ஒருபோதும் உண்மையானதன்று.

◆ ஒரு விற்பனை நிலையத்தில் பொருட்களுக்கான விலைகள் பின்வருமாறு இரகசியக் குறியீட்டின் அடிப்படையில் எழுதப்பட்டது. இதனைப் பயன்படுத்தி 20 ஆம், 21 ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.

| W | H | I | T | E | B | O | A | R | D |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 0 |

# பாலியல் வன்கொடுமை தடுப்பு மசோதா; அமைச்சரவை சிறப்புக் கூட்டத்தில் ஒப்புதல்



மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் பாலியல் வன்கொடுமை தடுப்பு குறித்த புதிய மசோதா தொடர்பாக பல்விதமான கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

பாலியல் தாக்குதல் என்ற வார்த்தை நீடிக்க வேண்டும் என்று சிலரும், பாலியல் கொடுமை என்ற வார்த்தை பயன்படுத்தப்பட வேண்டும் என்று சிலரும் யோசனை தெரிவித்தனர்.

விருப்பத்துடன் பாலியல் உறவில் ஈடுபடும் ஆண், பெண்ணின் வயதை 18 என்பதற்கு பதில் 16 ஆக குறைப்பது குறித்தும் அமைச்சர்கள் இடையே கருத்துகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன அவை கருத்து வேறுபாடுகள் அல்ல.

இந்த விடயத்தில் மத்திய உள்துறையும், மத்திய சட்டத் துறையும் ஆலோசித்து ஒரு முடிவுக்கு வரும். அதன் பிறகு பாலியல் வன்கொடுமை தடுப்பு குறித்த புதிய மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் தெரிவிக்கும்.

இம்மாதம் 22 ஆம் திகதிக்குள் நாடாளுமன்றத்தில் இந்த மசோதாவை தாக்கல் செய்ய மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. அதனால், மத்திய அமைச்சரவையின் சிறப்புக் கூட்டத்தை கூட்டி மசோதாவுக்கு ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்று சிதம்பரம் கூறினார்.

பாலியல் வன்கொடுமை தடுப்பு மசோதாவுக்கு மத்திய அமைச்சரவையின் சிறப்புக் கூட்டத்தில் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்படும். இந்த விடயத்தில் அமைச்சர்களிடையே கருத்து வேறுபாடு எழவில்லை என்று மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம் கூறினார்.


இது தொடர்பாக, நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் சிதம்பரம் வெள்ளிக்கிழமை கூறியதாவது,

# ஊழல் விவகாரத்தை கையாளும் பா.ஜ.க. மீது அதிருப்தி

ஊழல் பிரச்சினையை பாரதிய ஜனதாக் கட்சி கையாளும் விதம் குறித்து தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

பாரதிய ஜனதா மூத்த தலைவர் அத்வானி பாரதீய ஜனதா ஊழலை சகித்துக் கொள்ளாது என்ற எதிர்பார்ப்பு உள்ளது ஆனால் கர்நாடகத்தில் முன்பு ஏற்பட்ட பிரச் சினையை தீர்க்க கட்சி கையாண்ட விதம் எனக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்ததாக அப் போது அவர் குறிப்பிட்டார்.

மத்தியில் தற்போது ஆட்சியில் உள்ள காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு



கூட்டணி அரசின் மீது கடந்த சில ஆண்டுகளாக மக்கள் மிகுந்த வருத்தத்தில் இருப்பதாக தான் கருதுவதாகவும், அதேபோல் சில வகைகளில் பாரதிய ஜனதா மீதும் மக்களுக்கு அதிருப்தி உள்ளது என்றும் அத்வானி தெரிவித்தார்.

# சமூகப்பணியில் த்ரிஷா; அரசியலில் முதற்படி



எதிர்காலத்தில் சமூகப் பணிகளில் அதிக அளவு ஈடுபடத் திட்டமிட்டுள்ளேன். அரசியலுக்கு வருவது குறித்து எந்த முடிவும் எடுக்கவில்லை என்று கூறியுள்ளார் நடிகை த்ரிஷா.

பத்தாண்டுகளாக நடித்துக் கொண்டிருக்கும் த்ரிஷா, அரசியலுக்கு வருவதை சூசகமாக அறிவித்துள்ளதாகவே இது பார்க்கப்படுகிறது. நடிப்பில் பிஸியாக இருந்தாலும், சமூக சேவை, பிராணிகள் பாதுகாப்பு, ஆதரவற்றோருக்கு உதவி என பல்வேறு நல்ல விஷயங்களைச் செய்து வருகிறார் த்ரிஷா.

மகளிர் தினத்தை ஒட்டி அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

• சமூகத்தில் பெண்களை பாதிக்கிற விடயங்கள் நிறைய உள்ளன. பெண் சிசுக் கொலை, பெண்கள், சிறுமிகள் மீதான பாலியல் பலாத்காரம் போன்றவை முக்கிய பிரச்சினைகளாக உள்ளன். இது போன்ற செய்திகள் அன்றாடம் வந்த வண்ணம் உள்ளன. இது மிகுந்த வருத்தத்தைத் தருகிறது.

இதற்கு முடிவு கட்டி பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும். இதற்காக சட்டத்தில் மாற்றம் கொண்டு வர வேண்டும். ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் இதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். கற்பழிப்புக் குற்றங்களில் ஈடுபடுவோருக்கு உடனடியாக தண்டனை வழங்கும்படி சட்டம் கொண்டு வரவேண்டும். குஷ்பு, ராதிகா போன்றோர் சினிமாவில் இருந்து அரசியலுக்கு வந்திருப்பது சந்தோஷமான விடயம். அரசியலில் ஈடுபடுவது தவறானது அல்ல என்றார்.



மகாசிவராத்திரியை முன்னிட்டு அலகாபாத்திலுள்ள திரிவேணி சங்கமத்தில் புனித நீராடிவிட்டு திரும்பிய அசாம் முதல்வர் தருண் கோஹாய்.

# 28 மாலுமிகள் விடுதலை

சோமாலிய கடற் கொள்ளையர்களால் கடந்த ஆண்டு கைது செய்யப்பட்ட 28 இந்திய மாலுமிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் 2 கப்பல்கள் மூலம் இந்தியா திரும்ப உள்ளனர் என்றும், இன்னும் ஓரிரு தினங்களில் இவர்கள் பாதுகாப்பாக நாடு திரும்புவார்கள் எனவும் மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் ஜி.கே.வாசன் கூறினார்.

இந்தியச் செய்திகள்

# கிறிஸ்தவ நற்சிந்தனை

## புதிய படைப்பு

(எசாயா 65 : 17 - 21)
(யோவான் 4 : 43 - 54)

விஞ்ஞானம் புதிய உலகை உருவாக்கும் என்று இந்த உல்கம் கனவு கண்டது. மனித முன்னேற்றம், தொழில் நுட்பம், உற்பத்தி புதிய உலகைக் கொண்டுவரும் என்று இந்த உலகம் கனவுகண்டது. இரண்டு உலகமகா யுத்தங்கள், பணக்காரர் - ஏழை இடைவெளி, சர்வாதிகார ஆட்சிகள், மனிதநேயத்தின் மடிவு இந்தக்கனவுகளை எல்லாம் தவிடுபொடியாக்கிவிட்டது.

இன்றைய பின் - நவீன உலகம் புதிய உலகு பற்றி அவநம்பிக்கையோடு வாழும் உலகம். ஆனால் நம்பிக்கை இல்லா விடத்தில் நம்பிக்கை வைக்கும் சமூகமே கிறிஸ்தவ சமூகம், அதன் நம்பிக்கை தன்னிலோ, உலக மாற்றத்திலோ, உலக அமைப்புக்களிலோ அல்ல அதன் நம்பிக்கை இறைவனுடைய செயற்பாட்டில் வைக்கும் நம்பிக்கை "இதோ! புதிய விண்ணுலகையும் புதிய மண்ணுலகையும் படைக்கிறேன்" என்ற கடவுளின் வாக்குறுதியில் வைக்கும் நம்பிக்கை.

போரும், வறுமையும், சுரண்டலும் இல்லா; பாதுகாப்பும், அமைதியும் ஆட்சிபுரியும் கடவுள் உருவாக்கும் அந்த புதிய உலகை இன்றைய வார்த்தைகள் விபரிக்கின்றன. (எசாயா 65 : 19 - 25)

இந்தப் புதிய உலகம் உருவாகும் அடிப்படை கடவுளின் மன்னிப்பே "முந்தியவை நினைத்துப் பார்க்கப்படுவதில்லை, மனதில் எழுவதுமில்லை" என்ற கடவுளின் வார்த்தைகள் எத்தனை மகத்துவமானவை. அது கடவுள் தரும் மன்னிப்பு, கடவுள் தரும் புதிய தருணம், கடவுள் தரும் புதிய வாழ்வு என்பதை சுட்டிக் காட்டுகின்றது.

கடவுளின் புதிய படைப்பு ஆரம்பிப்பது நம்மோடு நாம் புதிய படைப்பாக மாறும்போதுதான் உலகம் புதிய படைப்பாக மாறும்.

வி.பி.தனேந்திரா.


# பாகிஸ்தான் பிரதமர் வருகை!

ஒரு நாள் ஆன்மிகப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் பிரதமர் ராஜா பர்வேஷ் அஸ்ரப், ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் வந்தடைந்தார்.

40 பேர் கொண்ட குழுவுடன் தனிப்பட்ட பயணமாக இந்தியா வந்துள்ள பாகிஸ்தான் பிரதமர், அஜ்மீர் தர்ஹாவிற்கு சென்று குடும்பத்துடன் வழிபாடு நடத்துகிறார்.

முன்னதாக ஜெய்ப்பூரில் பாகிஸ்தான் பிரதமருக்கு இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித், மதிய விருந்து அளிக்கின்ற போது இருதரப்பு பிரச்சினைகள் குறித்து பேசப்பட மாட்டாது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளையில் அஜ்மீர் தர்ஹாவின் மதகுருக்களில் ஒருவரான ஜெய்னுலாபுதீன் அலி கான், பாகிஸ்தான் பிரதமரைப் புறக்கணிக்கப் போவதாக அறிவித்துள்ளார். கடந்த மாதங்களில் இந்திய இராணுவ வீரர்கள் இருவரை பாகிஸ்தான் இராணுவத்தினர் தலையைத் துண்டித்து கொலை செய்த நிலையில், அந்நாட்டு பிரதமரின் வருகையை எதிர்ப்பதாக மதகுரு தெரிவித்துள்ளார். இதனால் பாகிஸ்தான் பிரதமரின் வருகையைக் கண்டித்து அஜ்மீர் உள்ளிட்ட பல இடங்களிலும் பல்வேறு அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.



எழுதுவதென்பது...

(15ஆம் பக்கத்தொடர்ச்சி...)

வசிப்பதாக, அவளின் நினைவுகள் பாதுகாக்கப்படுவதாக நான் உணர்ந்தேன். அது எழுதப்பட்டதனாலேயே எப்போதும் நினைவு கொள்ளப்படும். பெயர்கள், இடங்கள், மற்றும் விவரங்களை யெல்லாம் என்னால் நினைவில் வைத்திருக்க முடியாது. அதனாலேயே என் அம்மாவுக்குத் தினமும் கடிதம் எழுதுகிறேன். பாவ்லா வைப்பற்றி, என் வாழ்க்கையையும் இணைத்து எழுதும்போது, அதை எப்போதைக்குமான பதிவாகச் செய்துவிடுகிறேன். நான் அதை ஒருபோதும் மறப்பதில்லை. அதுதான் ஆன்மாவின் வாழ்க்கை.

# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ......................................

முகவரி : ......................................

பிறந்த ஆண்டு : ......................................


கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

......................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# கென்யாவின் அதிபராக உருகென்யட்டா தெரிவு



50 சதவீத வாக்குகள் பெற்று கென்யாவின் அதிபராக உரு கென்யட்டா தெரிவானார்


கென்யாவில் கடந்த திங்களன்று நடந்த நாடாளுமன்ற தேர்தலில் 86 சதவிகித வாக்குகள் பதிவாகின. இதில் 50 சதவிகித வாக்குகள் பெற்று துணை பிரதமராக இருந்த உரு கென்யட்டா முன்னிலை பெற்றார்.

எனவே, கென்யட்டா புதிய அதிபராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்த வெற்றியானது ஜனநாயகத்திற்கும், அமைதிக்கும் கிடைத்த வெற்றி என்று கென்யட்டா கூறியுள்ளார். மேலும் விருப்பு வெறுப்பின்றி எதிர்கட்சியினரிடையே இணைந்து செயல்படுவேன் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

கென்யட்டாவின் வெற்றிக்கு எதிராக களத்தில் நின்ற ரையிலா ஒடிங்கா தேர்தலில் முறைகேடு நடந்துள்ளதாக கூறியுள்ளார்.

கடந்த 2007-ம் ஆண்டு நடந்த தேர்தலில் போது, 1000-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இந்த வன்முறைக்கு தூபம் இட்டதாக கென்யட்டா மீது பன்னாட்டு நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# அதிகரிக்கும் குழந்தை திருமணம்; ஐ.நா.வெளியிடும் அதிர்ச்சித் தகவல்



குழந்தை திருமணத்திற்கு 14 கோடிக்கும் அதிகமான சிறுமிகள் வரும் 2011 - 2020 ஆம் ஆண்டுக்குள் உட்படுத்தப்படுவார்கள் என ஐ.நா. மக்கள் தொகை நிதியம் தெரிவித்துள்ளது.

குழந்தை திருமண பழக்கம் தொடர்ந்தால் ஆண்டுக்கு 14.2 மில்லியன் சிறுமிகளுக்கு குழந்தை திருமணம் நடக்கும் அல்லது தினமும் 39,000 சிறுமிகளுக்கு திருமணம் நடக்கும்.

வளர்ந்து வரும் நாடுகளில் இளைஞர் சமுதாயத்தின் எண்ணிக்கை பெருகிவருவதால் குழந்தை திருமண எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. இது குறித்து ஐ.நா. மக்கள்தொகை நிதியத்தின் தலைவர் பாபா டுண்டே ஓசோடிமெஹின் கூறுகையில்,

குழந்தை திருமணம் என்பது மனித உரிமை மீறலாகும். சிறுமியாக இருக்கையில் திருமணம் செய்து கொடுத்தால் அவரின் திறமைகள் வெளிப்படாமலேயே போகும். இளம் வயதில் திருமணமாகும் சிறுமிகள் கணவரால் கொடுமைக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

15 முதல் 19 வயது வரை உள்ள சிறுமிகள் கர்ப்பம் மற்றும் பிரச வத்தின்போது ஏற்படும் பிரச்சினைகளால் தான் அதிகம் இறக்கின்றனர்.

அதுவே சரியான வயதில் திருமணம் செய்து சிறிது காலம் கழித்து குழந்தை பெறும் பெண்கள் ஆரோக்கியமாக உள்ளனர் என்று உலக சுகாதார அமைப்பு அதிகாரி பிலாவியா பஸ்ட்ரியோ தெரிவித்துள்ளார்.


குழந்தை திருமண பிரச்சினையை உடனே கவனிக்காவிட்டால் வரும் 2015 ஆம் ஆண்டுக்குள் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதத்தை குறைப்பது மற்றும் பிரசவ மரணத்தை வெகுவாகக் குறைக்கும் ஐ.நா.வின் குறிக்கோள்கள் தோல்வியடையும்.

தெற்கு ஆசியா மற்றும் வட ஆப்பிரிக்க நாடுகளில் தான் அதிக அளவில் குழந்தை திருமணம் நடக்கிறது. உலக அளவில் குழந்தை திருமணங்கள் அதிகம் நடக்கும் 10 நாடுகளின் விவரங்கள்:

நைஜர் - 75 சதவீதம், சாட் மற்றும் மத்திய ஆப்பிரிக்கா - 68 சதவீதம், வங்கதேசம் - 66 சதவீதம், கினியா - 63 சதவீதம், மொசாம்பிக் - 56 சதவீதம், மாலி - 55 சதவீதம், புர்கினா பாசோ மற்றும் தெற்கு சூடான் - 52 சதவீதம், மாளவி - 50 சதவீதம்.

உலகச் செய்திகள்

# பாப்பரசர் தேர்வு; புகைபோக்கி தயார்



வத்திக்கானில் புதிய பாபபரசருக்கான தெரிவு முடிவுகளை அறிவிப்பதற்காக புதிய புகைபோக்கி ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

ஓரிரு தினங்களில் வத்திக்கானில் கூடும் றோமன் கத்தோலிக்க கார்டினல்கள், புதிய பாப்பரசரை தேர்ந்தெடுப்பார்கள்.

இதற்காக தொடர்ச்சியான வாக்கெடுப் புக்கள் இரகசியமாக நடத்தப்படும்.

பாரம்பரிய நடைமுறைகளின்படி இதற்கென சிறப்பாக அமைக்கப்பட்ட புகை போக்கிகளில், ஒவ்வொரு சுற்று வாக்கெடுப்பு முடிந்ததும், அந்தந்த வாக்குச் சீட்டுக்கள் போட்டு எரிக்கப்படும். முடிவுகள் எதுவும் வராத பட்சத்தில் அதனை அறிவிக்க இரசாயனம் கலந்து கறுப்புப் புகை வெளியேற்றப்படும். முடிவு தெரிந்தால், அதனை அறிவிக்க வெள்ளை நிறப்புகை வெளியாகும். அதன் பின்னர் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பாப்பரசர் மக்கள் முன்பாக தோன்றுவார்.

# சிரியாவில் சிறைபிடிக்கப்பட்ட ஐ.நா.குழுவினர் விடுதலை



உள்நாட்டுப் போர் நிகழ்ந்து வரும் மத்திய கிழக்கு நாடான சிரியாவில், புரட்சிப் படையினர் பிடித்து வைத்திருந்த ஐ.நா. அமைதிக் குழுவைச் சேர்ந்த 21 பேர் விடுவிக்கப்பட்டனர்.

அவர்கள் சிரியாவில் இருந்து ஜோர்தான் நாட்டுக்கு வந்தடைந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. முன்னதாக சிரியாவின் தென்மேற்குப் பகுதியில் உள்ள ஜம்லா கிராமத்தில் இருந்து அவர்கள் கடத்திச் செல்லப்பட்டனர்.

கடத்திச் சென்றவர்களை விடுவிக்க வேண்டுமென்றால், தங்கள் பகுதியில் இருந்து சிரியா அதிபர் பஷார் அல் அசாத் ஆதரவு இராணுவத்தினர் வெளியேற வேண்டுமென்று புரட்சிப் படையினர் வலியுறுத்தினர்.

ஐ.நா. குழுவினரைப் பிடித்து வைத்திருப்பது புரட்சியாளர்களுக்கு நல்லது அல்ல என்று ஐ.நா. சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. ஏனெனில் மேற்கத்திய நாடுகள்தான் புரட்சியாளர்களுக்கு பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது. இதையடுத்து புரட்சிக் குழுவினர் நிபந்தனையின்றி பிணைக் கைதிகளை விடுவித்தனர்.

# சவப்பெட்டி அறைக்குள் வாழும் ஜப்பானியர்கள்



இடநெருக்கடியின் காரணமாக ஜப்பானியர்கள் சவப்பெட்டி அளவை விட சற்று பெரிய அறைகளில் வசித்து வருகிறார்கள்.

உலகிலேயே அதிக மக்கள் நெருக்கடி கொண்ட நகரங்களில் ஜப்பான் தலைநகர் டோக்கியோவும் ஒன்று. இந்நகரில் வேலை செய்ய அந்நாட்டின் பல பகுதிகளிலிருந்து மக்கள் வருவதால் அங்கு இட நெருக்கடி மேலும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் அங்குள்ள அடுக்கு மாடி குடியிருப்புகளில், சவப்பெட்டி அளவை விட கொஞ்சம் பெரிய அளவு கொண்ட அறைகள் வாடகைக்கு விடப்படுகின்றன. வேலை பார்ப்பதற்காக நாள் முழுதும் அலுவலகங்களில் செலவிடுபவர்கள், தூங்குவதற்கு மட்டும் இந்த அறைகளை பயன்படுத்துகின்றனர்.

இந்த அறைகளில் சிறிய பொருட்களை மட்டும் வைத்துக்கொள்ள முடியும். மற்றபடி, படுக்கை விரித்து, அதில் தூங்கிக்கொள்ளலாம். எனினும் ஆறடிக்கு மேல் உயரம் கொண்டவர்கள் பாடு திண்டாட்டம் தான். அவர்களால், வசதியாக காலை நீட்டி படுக்க முடியாது.

கெக்கீ-செமா என்று அழைக்கப்படும் இந்த அறைகளில், ஜன்னலே கிடையாது. அத்துடன், இந்த குட்டி அறைகளின் மாத வாடகை, 33 ஆயிரம் ரூபாய் ஆகும். இருந்தாலும், வேறு வழியில்லாமல் இந்த அறைகளில் ஜப்பான் இளைஞர்கள் தங்கியுள்ளனர்.

# சர்வதேச மகளிர் தினம் நாளை கிளிநொச்சியில்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சர்வதேச மகளிர் தினம் நாளை செவ்வாய்க்கிழமை அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகமும், கரைச்சிப் பிரதேச செயலகமும் இணைந்து இந்நிகழ்வை நடத்தவுள்ளன.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் கலந்துகொள்ள உள்ளார்.

பிற்பகல் 1.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாக அரசாங்க அதிபரின் தலைமையில் மகளிர் உத்தியோகத்தர் கலந்துகொள்ளும் நடைபயணம் மாவட்டச் செயலகம் நோக்கி நடைபெறவுள்ளது.

கரைச்சிப் பிரதேச செயலகத்தில் 2.30 மணிக்கு கரைச்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் சர்வதேச மகளிர்தின நிகழ்வு ஆரம்பமாகும்.

மகளிர் தின நிகழ்வில் மாவட்ட ரீதியாகத் தெரிவு செயயப்பட்ட 20 பெண்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். சிறந்த சமூகசேவை, பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களில் சிறந்த சுயதொழில் முயற்சியாளர், தலைமைத்துவ ஆற்றல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டே இவ்வாறு 20 பெண்கள் தெரிவுசெய்யப்பட்டனர். இந்நிகழ்விற்கு யு.என்.எச்.சி.ஆர் அமைப்பு அனுசரணை வழங்குகின்றது. (90, 142)

## கேப்பாபுலவு மக்களுக்கான முதற்கட்ட வீடுகள் கையளிப்பு

முல்லைத்தீவு கேப்பாபுலவு பிரதேசத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கென முதற்கட்டமாக அமைக்கப்பட்ட 50 நிரந்தர வீடுகள் எதிர்வரும் 16 ஆம் திகதி பயனாளிகளிடம் கையளிக்கப்படவுள்ளன. மீள்குடியேற்றத்துறை அமைச்சர் குணரட்ன வீரக்கோன், பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இவ்வீடுகளைக் கையளிக்க உள்ளதாக அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். கேப்பாபுலவில் மீள்குடியமர்த்தப்பட்ட 165 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை அமைக்கும் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 50 வீடுகள் அமைக்கப்பட்டன. தலா 3,75,000 ரூபா செலவில் இவ்வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. வீடுகள் அமைக்கும் பணிகள் பூர்த்தியடைந்திருக்கும் நிலையில் எதிர்வரும் சனிக்கிழமை இவை கையளிக்கப்படவிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

### உரும்பிராயில்...

உள்ளார். இவ்விபத்துச் சம்பவத்தில் கோண்டாவில் குட்செட் றோட்டைச் சேர்ந்த சின்னத்தம்பி ரம்சன் (வயது-23) என்ற இளம் குடும்பஸ்தர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார். இவருடன் கூடச் சென்ற இவரது நண்பரான கோண்டாவில் குட்செட் றோட்டைச் சேர்ந்த பஞ்சலிங்கம் செல்வக்குமார் (வயது-28) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியதாகவும் படுகாயமடைந்தவர் பின்பகுதியில் அமர்ந்திருந்ததாகவும், சிவராத்திரியை முன்னிட்டு கோயிலுக்குச் சென்றவேளையே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இவர்கள் தலைக்கவசம் அணியாத நிலையில் சென்று விபத்திற்குள்ளானதால் இவர்களின் தலைப்பகுதியே சிதைவடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின்சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்துச் சம்பவம் பற்றி கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

### இந்திய மத்திய...

உள்நாட்டு விடயங்களில் தலையிட முடியாதென்றால், தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் பிரச்சினையில் ஜவஹர்லால் நேருவும் வங்கதேசப் பிரச்சினையில் இந்திராகாந்தியும் தலையிட்டது எங்கனம் என வினவியிருக்கிறார்.

இந்நிலையில் போர்க் குற்றங்கள் தொடர்பாக இலங்கை ஜனாதிபதி மகிந்தா மீது பன்னாட்டு விசாரணை வேண்டுமென்ற கோரிக்கை குறித்து மத்திய அரசு தன் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டே ஆகவேண்டும், ஈழத்தமிழர் நலனில் அது அக்கறை காட்டவேண்டும் என்பதை வலியுறுத்தியே எதிர்வரும் மார்ச் 12 அன்று பொதுவேலை நிறுத்தத்திற்கான அழைப்பு எனக் கருணாநிதி கூறியிருக்கிறார்.

இதனிடையே இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக பொதுவாக்கெடுப்பு வேண்டும், இலங்கைக்கெதிரான அமெரிக்க தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கவேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை லயோலா கல்லூரி மாணவர்கள் 8 பேர் மேற்கொண்டுள்ள உண்ணாநோன்பு மூன்றாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

### உயிரிழந்த...

பட்டியலிட்டிருப்பது மிகப்பெரும் தவறு மட்டுமல்லாமல் ஊதியம் வழங்கும் முறையிலும் குறைபாடுகள் இருப்பதாக நாம் சந்தேகிக்கின்றோம்.

இப்பட்டியலின் குறைபாடுகள் பற்றி ஏற்கனவே பலரிடம் எடுத்துக்கூறியும் எவரும் முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை.வட்டுக்கோட்டையில் ஆசிரியர்களின் விபரங்களைக் கணனியில் பதிவேற்றம் செய்து இடமாற்றங்களையும் இதர செயற்பாடுகளையும் சிறப்பாக முன்னெடுப்பதற்காக பல இலட்சம் ரூபாய்களைச் செலவு செய்து பல கல்வி நிர்வாகசேவை அதிகாரிகளும் ஊழியர்களும் படாதபாடுபட்டு கண்டது என்னவென்றால், எதுவுமே இல்லை.

ஒரு மாநிலக் கல்விப் பணிப்பாளர் செய்த வேலையை இன்று பல நிர்வாக சேவை அதிகாரிகள் இணைந்து செய்ய முடியவில்லை என்றால், எங்கு தவறு இருக்கின்றது என்பதனை இன்னும் எவரும் கண்டறியவில்லை. வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் தனித்துநின்று செய்த காரியத்தைத் தவறு என்று சொன்னவர்கள் இன்று குட்டையைக்குழப்பி குட்டிச் சுவராக்கியிருக்கின்றார்கள்.

ஆசிரியர் இடமாற்றம் என்பது வடமாகாணத்தில் அரச சுற்று நிருபங்களுக்கும், நியதிகளுக்கும் அப்பாற்பட்டு அடாவடித்தனமாக நடைபெறுவதனை அப்பட்டமாக இது காட்டுகின்றது.

இடமாற்றப் பட்டியலில் இணைக்கப்பட்ட ஆசிரியர்களில் பலர் பிறமாகாணங்களில் பல ஆண்டுகள் கடமையாற்றியவர்கள். கஷ்டப்பிரதேச, அதிகஷ்டப்பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றியவர்கள். பலர்குழந்தைகளோடு வயது முதிர்ந்து வாழ்பவர்கள். இவர்களையெல்லாம் இடமாற்றம் செய்வதனால் என்ன பலாபலன் கிடைக்கப்போகின்றது. புதிய ஆசிரிய நியமனங்களை வழங்குங்கள் என்பதனை பல தடவைகள் நாம் எடுத்துக் கூறியும் தாங்கள் நினைத்தவற்றைச் செய்யும் அதிகாரிகளுக்கு இனிமேலும் புரியவில்லை என்றால் இவர்களுக்கு இறைவன் வழங்கும் தண்டனை மிகவும் பாரதூரமானதாக இருக்கப்போகின்றது.

இடமாற்றப் பட்டியலில் பெயர்கள் குறிப்பிடப்பட்ட ஆசிரியர்கள் எவரும் இடமாற்றத்தை ஏற்றுக்கொள்ளாது சட்டநடவடிக்கைகளுக்குச் செல்ல ஆயத்தமாக இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஒரு பாடசாலையில் உள்ள பிள்ளைகளின் கல்வியை அழித்து இன்னொரு பாடசாலைக்கு ஆசிரியரைக் கட்டாயப்படுத்தி அனுப்பவேண்டுமென்று எந்தச் சுற்று நிருபத்திலும் இல்லை. இதனை இதுவரைகாலமும் பொறுத்திருந்த நாம் சட்ட நடைமுறைகளுக்கூடாக தட்டிக்கேட்கும் தருணம் வந்து விட்டது. குடாநாட்டுப் பாடசாலைகளின் கல்வி அழிந்துவிடும் அளவிற்கு இது பாரதூரமானது என்பதனால் அனைவரின் ஒத்துழைப்பையும் இதற்காக வேண்டி நிற்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீட்டுக் கிணற்றிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வீட்டுக்கிணறு ஒன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

சண்முகநாதன் தியாகராஜ் (வயது-36) என்பவரது சடலமே இவ்வாறு இராசாவின் தோட்டம் வீதியிலுள்ள அருள் மாதா கோயிலுக்கு அருகாமையிலுள்ள வீட்டுக்கிணற்றிலிருந்து மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சடலம் நேற்று யாழ். போதனாவைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு மரண விசாரணைகளுக்காகப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (இ)

### அமெரிக்கத் தீர்மானம்...

குழு தீர்மானம் தொடர்பான ஆராய்ந்து தனது பரிந்துரைகளை முன்வைக்கும் எனவும், அதன் அடிப்படையில் அரசாங்கம் அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவின் உத்தேச தீர்மானத்தில், நல்லிணக்கத்தை ஏற்படுத்தல், குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணை நடாத்தல், குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உண்மையைக் கண்டறியும் பொறிமுறைமை ஒன்றை உருவாக்குதல் போன்ற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. இந்த உத்தேச தீர்மானம் தொடர்பில் ஆராய்ந்து எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது தீர்மானிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### ஜெனிவாத்...

பொதுமைக் கொள்கைக்கு எதிரான தீர்மானம் இது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தீர்மானத்தின் உள்ளடக்கம் தொடர்பில் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளும் திட்டம் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தீர்மானம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பக்கச்சார்பான, ஒரு தலைப்பட்சமான தீர்மானங்கள் குறித்து இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளும் திட்டமில்லை.

நல்லிணக்க முனைப்புக்களுக்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும், ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை அரசாங்கம் ஒருபோதும் நிராகரிப்பதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். திறந்த மனதுடன் உலக நாடுகள் இலங்கையுடனான உறவுகளைப் பேணும் என எதிர்பார்ப்பதாக ரவிநாத் ஆரியசிங்க இதன்போது நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

### அமெரிக்க...

கொள்ளமுடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். விசேட செயற்பாடுகளின்போது இலங்கையுடன் இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக்கொண்டு செயற்படுவது தொடர்பில் அந்த சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைத் தவிர குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் சர்வதேச கண்காணிப்பாளர்களுக்கு எவ்வித கட்டுப்பாடுமின்றி நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கான வாய்ப்பை வழங்கவேண்டும் எனவும் சரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம் நீதிமன்ற சுயாதீனம், மொழி, சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கு உள்ள உரிமை, பெண்கள் உரிமைகள், காணாமற்போதல், கடத்தல் போன்ற விடயங்களில் பிரச்சினை ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் எவ்வித தடையும் இன்றி ஐ.நா. பிரதிநிதிகள் நாட்டுக்குள் பிரவேசித்து ஆராய்வதற்கான சூழல் உருவாக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

### காணிப்பிரச்சினை...

அலுவலகங்களில் கடமையாற்றுவதற்கென தேர்வுசெய்யப்பட்ட வடபகுதியைச் சேர்ந்த 60 பட்டதாரிகளுக்கு அன்றையதினமே நியமனக் கடிதங்களையும் அமைச்சர் வழங்கவிருப்பதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

காணிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்மொழிவை அமுல்படுத்த வேண்டிய பொறுப்பு காணி அமைச்சுக்கு உள்ளது. இதற்கமைய வடக்கில் மீளக்குடியமர்ந்த மக்களின் காணிப் பிரச்சினைக்குத் தீர்வைப பெற்றுக்கொடுப்பதற்கும், படையினரின் பாவனைக்கு எடுக்கப்பட்ட காணிகளை அவற்றின் உரிமையாளர்களிடம் மீளப்பெற்றுக்கொடுக்கும் விசேட செயற்பாட்டை துரிதப்படுத்தும் வகையிலுமே இந்த விசேட அலுவலகங்கள் திறக்கப்படவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இராணுவப் பயன்பாட்டுக்கென ஒதுக்கப்பட்ட காணிகளை சுவீகரிப்பதற்கும், ஏனைய காணிகளை உரிமையாளர்களிடம் பெற்றுக்கொடுப்பதற்கும் ஏதுவாக காணி சுவீகரிப்பு அதிகாரியொருவரும் வடமாகாணத்தில் நியமிக்கப்படவிருப்பதாக காணி அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்ட 5600 ஏக்கர் காணிகள் பொதுமக்களிடம் ஏற்கனவே கையளிக்கப்பட்டுள்ளன. இதுவரை கையளிக்கப்படாத காணிகளுக்கு நஷ்டஈடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நடைபெறவுள்ள அலுவலகத் திறப்பு விழாக்களில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன், பிரதிய மைச்சர் சிறிபால கம்லத், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர்கள் மற்றும் அமைச்சின் செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# அதிகாரப் பகிர்வு தாமதம் கூட்டமைப்பே காரணம்

## குற்றஞ்சாட்டுகிறது அரசு

(கொழும்பு)

அதிகாரப் பகிர்வைப் பகிர்ந்தளிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதத்திற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே காரணமென அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. இது தொடர்பாக அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளதாவது,

அதிகாரப் பகிர்வை மேற்கொள்ளும் வகையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ள போதிலும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அதில் அங்கம் வகிக்கவில்லை. மாறாக அவர்கள் பல்வேறு நிபந்தனைகளை முன்வைத்து தீர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளை தாமதிக்கச் செய்கின்றனர். இதற்கு அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டிய அவசியமில்லை. இதற்குக் கூட்டமைப்பே பொறுப்புக்கூற வேண்டும்.

அத்துடன் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை ஒரே இரவில் அமுலாக்கிவிட முடியாது என்பதை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். இதற்காக குறுங்கால மற்றும் நீண்டகால அடிப்படையில் அவற்றை அமுலாக்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

ஜெனிவாவில் இலங்கைக்கெதிராகப் பிரேரணை கொண்டு வரப்பட்டாலும் இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர ரீதியான உறவுகளில் இது பாதிப்பை ஏற்படுத்தாது.

இந்த நாடுகளுடனான இராஜதந்திர உறவு சிறந்தமுறையில் உள்ளது.

சில சந்தர்ப்பங்களில் இந்தியாவின் நிலைப்பாட்டுக்கோ அல்லது அமெரிக்காவின் நிலைப்பாட்டுக்கோ இலங்கையால் இணங்கமுடியாமல் போகலாம்.

அது இந்த நாடுகளுக்கு இடையிலான உறவை நேரடியாக பாதிக்காது என்று தெரிவித்தார். ஜெனிவா பிரேரணைக்கு இந்தியாவின் ஆதரவு எவ்வாறாக இருந்தாலும்.

இந்திய அரசாங்கத்திற்கு உள்ள பிரச்சினைகளை இலங்கை புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இந்திய காங்கிரஸ் அரசாங்கம் தனியான கட்சி அல்ல. அது பல்வேறு கட்சிகளின் கூட்டாக உள்ளது. இந்த நிலையில் அரசாங்கத்தின் மீது பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. அதனால் இந்திய அரசாங்கம் இலங்கையுடனான உறவு குறித்து மாத்திரம் இன்றி, தொடர்ந்து ஆட்சி நடத்துவது தொடர்பிலும் சிந்திக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# தமிழகத்திற்கான விஜயம் பயண எச்சரிக்கை விரைவில்

தமிழகத்திற்கான விஜயம் தொடர்பில் பயண எச்சரிக்கை விடுக்கப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. தமிழகத்திற்கான பயணங்கள் தொடர்பில் எச்சரிக்கை விடுப்பது குறித்து வெளிவிவகார அமைச்சு கண்காணித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்திய அதிகாரிகளுடன் இந்த விடயம் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ரொட்னி பெரேரா தெரிவித்துள்ளார். இலங்கையர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என இந்தியா உறுதியளித்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். அண்மைக்காலமாக தமிழகத்தில் அமைந்துள்ள இலங்கை நிறுவனங்கள் மற்றும் இலங்கைப் பிரஜைகள் மீது தாக்குதல்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தின் நிலைமைகள் குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருவதாகவும், பயண எச்சரிக்கை விடுப்பது குறித்து தீர்மானிக்கப்படவில்லை எனவும் ரொட்னி பெரேரா தெரிவித்துள்ளார்.

# புலி ஆதரவாளரின் செயற்பாடு ஜெனிவா கூட்டத்தில் அதிகரிப்பு

## அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு



விடுதலைப் புலிகள் யுத்த ரீதியாக பின்வாங்கினாலும், பிரிவினைவாதமாக செயற்படுவதில் தொடர்ந்தும் முன்னேறி வருவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், சுகாதார அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தமது அரசியல் வாழ்க்கைக்கு 47 வருடங்கள் பூர்த்தியாகின்றமை மற்றும் நாடாளுமன்ற செயல்பாடுகளுக்கு 25 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு பொலநறுவை கேட்போர் கூடமொன்றில் கௌரவிக்கும் நிகழ்வொன்று நேற்று இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறுகையில்,

மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் விடுதலைப்புலி ஆதரவாளர்களின் செயற்பாடுகள் தற்போது மேலோங்கியுள்ளன.

யுத்தத்தாலும், பௌதிக ரீதியாகவும் அவர்கள் முறியடிக்கப்பட்ட போதும் இன்று ஜெனிவாவில் இருந்து கொண்டு இலங்கையை அழிப்பதற்கு பாரிய அளவில் சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். சர்வதேச வல்லரசுகளுடன் கைகோர்த்து செயல்படுகின்றனர்.

எனவே நாங்கள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும் எஞ்சியுள்ள கடல்கடந்த நிலையில் செயற்படும் விடுதலைப் புலி தலைவர்களின் நிலைப்பாடுகளை எங்களால் மாற்ற முடியாமல் போய்விட்டது.

அதனால் அவர்களின் செயற்பாடுகளை முறியடிக்க அர்ப்பணிப்புடனும், உயிர் தியாக நோக்கிலும் செயற்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற பாரிய கப்பல், சூழல் காற்றில் சிக்கியிருந்த போது, அனைத்து தடைகள் மற்றும் இடையூறுகளை யும் கடந்து கப்பல் தலைவரைப் போல அதனை பாதுகாத்துள்ளேன் என்றும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கூறினார்.

# தரமற்ற குடிநீர் போத்தல் 3 நிறுவனங்கள் மீது வழக்கு

உரிய தரமின்றி குடிநீர் போத்தல்களை விநியோகித்த மூன்று நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

உரிய தரமற்ற சுமார் ஐயாயிரம் குடிநீர் போத்தல்கள் சந்தையிலிருந்து தமது பெறுப்பிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் செயலாளர் செனரத் பண்டார தெரிவித்துள்ளார்.

குடிநீர் போத்தல்களை விற்பனை செய்வதற்காக சுகாதார அமைச்சிடமிருந்து தர குறிப்பீட்டை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன் அது ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# கற்கடதீவு திருவிழாவிற்கு சென்ற பக்தர்கள் மீது கடும் தாக்குதல்

நெடுந்தீவு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கற்கடதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவில் கலந்து கொண்டவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

கற்கடதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நேற்றையதினம் நிறைவடைந்தது. இதன்போது நெடுந்தீவிலிருந்தும் பக்தர்கள் சென்றனர். இந்த நிலையில் நேற்றைய தினம் மண்டைதீவிலிருந்து தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் குடிபோதையில் காணப்பட்ட நிலையில், அந்தோனியாரின் உற்சவத்தில் கலந்து கொண்டவர்கள் மீது கற்கள் வீசித் தாக்குதல் நடத்தினர்.

இதன்போது நெடுந்தீவைச் சேர்ந்த ஜே.சந்திரகுமார் (வயது-35) அந்தோனிப்பிள்ளை அன்ரூட் (வயது-50) தேவன்சகாயம் நிசாந்தன் (வயது-20) ஆகியமூவரும் தலை, கை என்பவற்றில் படுகாயமடைந்த நிலையில் நேற்றிரவு நெடுந்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இதுதொடர்பாக நெடுந்தீவு பொலிஸார் மற்றும் கடற்படையினரிடம் முறையிடப்பட்டுள்ளது.

# மனிதப்புதைகுழி விசாரணை ஐ.நா.விடம் கோரவில்லை உதவி

## கூறுகிறது ஜே.வி.பி.

மாத்தளை மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணையை நடாத்துவதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் உதவிகளை பெற்றுக் கொளவதா என்பதனை இன்னமும் தீர்மானிக்கவில்லை என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணையை நடாத்துவதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஒத்துழைப்புப் பெற்றுக்கொள்ளப்பட உள்ளதாக தன்னார்வ தொண்டு நிறுவனமொன்று அறிவித்துள்ளது. உத்தியோகபூர்வமாக குறித்த தன்னார்வ தொண்டு நிறுவனம் கோரிக்கை விடுக்கவில்லை எனவும், எனவே இது தொடர்பில் கருத்து வெளியிட முடியாதென ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மனித எலும்புக் கூடுகளும், மண்டையோடுகளும் அண்மையில் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இயற்கை காரணங்களினால் உயிரிழந்தவர்களது சடலங்களாக இது தோன்றவில்லை எனவும், இவை கொலை செய்யப்பட்டவர்களின் சடலங்களாகவே காணப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்படுகிறது. தமது அமைப்பின் கிளர்ச்சியாளர்களின் சடலங்களாக இருக்கக் கூடுமெனவும், சம்பவம் தொடர்பில விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் ஜே.வி.பி. கோரியுள்ளது.

# தொலைபேசியில் அச்சுறுத்தி பணம்பறிக்கும் செயல் அதிகரிப்பு

## தீவிரவிசாரணையில் பொலிஸார்

தொலைபேசியில் அச்சுறுத்தி பணம் பறிக்கும் கூட்டம் குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தொலைபேசியை பயன்படுத்தி மோசடியான வகையில் வர்த்தகர்கள் மற்றும் ஏனைய நபர்களை அச்சுறுத்தி பணம் பறிக்கப்பட்டமை தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிறிவர்த்தன குறிப்பிட்டார்.

குற்றத்தடுப்புப் பிரிவினர், தீவிரவாத தடுப்புப் பிரிவினர், கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவினர் மற்றும் ஏனைய பொலிஸ் நிலைய விசாரணைக் குழுவினர் எனத் தெரிவித்து வர்த்தகர்களின் வங்கிக் கணக்குகள் குறித்து சிலர் தகவல் திரட்டி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான அச்சுறுத்தல்கள் விடுக்கப்படும் போது பாதிக்கப்படுவோர் 119,2433333 ஆகிய பொலிஸ் அவசர அழைப்பு பிரிவிற்கும் 2422176, 2320141-5 என்ற இலக்கத்தில் குற்றத்தடுப்புப் பிரிவினருக்கும் 2321839 என்ற இலக்கத்தில் தீவிரவாத தடுப்புப் பிரிவினருக்கும் 2685151,2662311 என்ற கொழும்பு குற்ற விசாரணை பிரிவினருக்கும் 2421111 என்ற பொலிஸ் தலைமையக இலக்கத்திற்கும் உடன் அழைத்து முறைப்பாடு செய்யலாம்.

# அறுகம்பை கடலில் சுவிஸ் பிரஜை உயிரிழப்பு

பொத்துவில், அறுகம்பை கடலில் மூழ்கி சுவிட்சர்லாந்து பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றதாக பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.

சுவிட்சர்லாந்தை சேர்ந்த கிறித்தபர் யூஸ் (வயது-53) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் மீட்கப்பட்டு பொத்துவில் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தர்மபுரத்தில் விபத்து; குடும்பப்பெண் படுகாயம்

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார். வவுனியா மகாறம்பைக்குளம் கண்ணன் கோட்டத்தைச் சேர்ந்த தேவதாஸ் யோகராணி (வயது - 52) என்ற பெண்ணே படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்தியசாலைக்கு நேற்றிரவு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;

வவுனியாவில் இருந்து வந்த சகோதரியை ஏற்றிக்கொண்டு விசுவமடு நோக்கிச் சென்றுள்ளார் சகோதரன். தருமபுரம் நகரப் பகுதியில் சென்றவேளை பின்னால் வந்த 'வடி'ரக வாகனம் ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் அமர்ந்து சென்ற பெண்மணி தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்துள்ளார். மோட்டார்சைக்கிளை செலுத்திய சகோதரன் சிறு காயமடைந்துள்ளார். இச்சம்வம் பற்றி கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(இ)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மார்ச் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.